
கல்கி
ALKI
3.1964
காசு

மக்லீன்ஸ்

உபயோகித்து

அந்த அதிகமான வெண்மையைப்

பாருங்கள்!





இவ்விதம் சோதியுங்கள்

1. உங்கள் நாக்கினால் பற்களைத் தடவுங்கள். அவற்றின் மேலுள்ள பாசியை உணர்கிறீர்களா?
2. இப்போது, மக்லீன்ஸ் பற்பசைகொண்டு பற்களைத் தேயுங்கள். அது பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கிக் காப்பதுடன் உங்களுக்குப் புதுமையான உணர்ச்சியை அளிப்பதை உணர்வீர்கள்.
3. அந்த அதிகமான சுத்தத்தை உணருங்கள்... அந்த அதிகமான வெண்மையைப் பாருங்கள்.




மக்லீன்ஸ் பழுப்பு நிறமடைந்த பற்களை வெண்மையாக்குகிறது!

MTP/I/P/2-63-TM


பொருளடக்கம்

சோபகிருது, மாசி 18 ★ மார்ச் 1

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



படவிளக்கம் 21ம் பக்கம்



மலர் 23 ❋ தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் ❋ இதழ் 31

தருமத்துக்காக ஒரு பனிப்போர்

ராஜாஜி

ஆதி காலத்திலிருந்தே யுத்தம் என்பது இருந்து வந்திருக்கிறது. ஆனால் தருமத்தை முற்றிலும் விட்டு விடாமலே யுத்தங்கள் நடைபெற்று வந்தன. இரண்டாம் உலகப் போரின்போது இந்தத் தரும யுத்த முறை மிச்சமின்றி அழிந்து போயிற்று. சேனை வீரர்கள் மட்டிலும் பரஸ்பரம் தாக்கிக் கொள்வதற்குப் பதில் யுத்தம் என்பது பொதுமக்களையும் கொலை செய்கிற காரியமாயிற்று. ராணுவம், பொதுமக்கள் என்ற பேதமின்றி எல்லாச் சொத்துக்களும், நிறுவனங்களும் நாசமாக்கப்பட்டன. 'தரும யுத்தம்' என்கிற பெயரே அழிந்து போய் அதருமம் என்பது யுத்தத்துக்கு மாற்றுப் பெயர் என்ற நிலை உண்டாகிவிட்டது.

அணு சக்தி ஆயுதங்களும் வந்து சேர்ந்தன. ஸயன்ஸின் மடியிலே ராணுவ பலம் பூதாகாரமான பயங்கர வளர்ச்சியை அடைந்தது. கென்னடி அவர்கள் பிரதிநிதித்துவம் வகித்த அமெரிக்கா தன்னுடைய இந்த ராக்ஷஸ வளர்ச்சியைக் கண்டு தானே பயந்தது. கம்யூனிஸத் தலைவர் குருஷேவ் அவர்களும் தமது நாட்டின் அசுர பலத்தைக் கண்டு தாமே அஞ்சத் தொடங்கினர். இப்போது அவருடைய அச்சம் மேலும் மேலும் அதிகரித்து வருகிறது. மேலே மேலே சென்று கொண்டிருந்தால் நமது உச்ச நிலைக்கு நாமே நடுங்கித் தலை கிறுகிறுத்துப் போவது போல், ராணுவ பலத்தில் மேன்மேலும் முன்னேறிய இரண்டு வல்லரசுகளும் இன்று மயக்க நிலை அடைந்துள்ளன. ராணுவ பலம் தன்னிடமே பயம் கொண்டிருக்கிறது. சொன்னால் முரண்பாடாகத் தோன்றும் : இன்று அளவுகடந்த ராணுவ பலமானது எதுவும் செய்ய இயலாத பலவீன நிலையை அடைந்திருக்கிறது. எதிராளியைப் பயமுறுத்தும் ஓர் ஆயுதமாகத்தான் அது பயனாகிறது. ஆனால் வல்லரசுகள் தங்களுடைய சக்தியைத் தாங்களே கண்டு பயம் கொண்டுள்ளன.

இன்று ராணுவ பலம் குறைவான சிறிய நாடுகள் முன்போல் வல்லரசுகளுக்கு அஞ்சவில்லை. வல்லரசுகள் என்ன செய்கின்றன, அவற்றின் போக்கு என்ன என்பதைப் பற்றிச் சிறிய நாடுகள் லட்சியமே செய்யவில்லை. பனாமா, க்யூபா, ஸோமாலி, கானா, இந்தோனேஷியா, ஜான்ஸிபார் போன்ற நாடுகளைப் பார்த்தால் இது புரியும். ஆனால் வல்லரசுகள் பயத்தில் மூழ்கியிருக்கின்றன. ஸயன்ஸும், செல்வமுமே பெரிதெனநினைத்து, அதற்காக மற்ற எல்லாவற்றையும் புறக்கணித்த பெரிய நாடுகள் யாவும் இன்று தங்கள் லட்சியத்தில் தோற்றுவிட்டன. ஆத்மபலத்தில் கடைநிலைக்கு வந்துவிட்டன.


வல்லரசுகளின் பலத்தைவிடத் தருமத்தின் பலமே உண்மையான பலம். ஸயன்ஸுக்கும், செல்வத்துக்கும் எதிராக தருமம் ஒன்றே பெரிதென மதித்து, மற்றவற்றையெல்லாம் இரண்டாம் பட்சமாகக் கருதும் ஓர் இயக்கத்தை இப்போது ஆப்பிரிக்க, ஆசிய நாடுகள் விழிப்புடனும் எழுச்சியுடனும் தொடங்க வேண்டும். உண்மை பலத்தைத் தரும் தருமத்தை மீண்டும் சிங்காதனமேற்றியாக வேண்டும். தருமமே கவசமாகவும், கத்தியாகவும், கோட்டையாகவும் கொண்டு ஸயன்ஸின் சக்தியும், பணபலமும் அடையாத வெற்றியை அடைய வேண்டும். அணுவின் பௌதிக சக்தியை வெளிப்படுத்தியதால் அது ராணுவ பலத்தை உச்சிக்கு அழைத்துச் சென்று மயங்கச் செய்து விட்டது. இப்போது அணு சக்தியில் மறைந்துள்ள தெய்விகத்தை வெளிப்படுத்தி தரும பலத்தை நிலைநாட்டுவதற்காக ஆப்பிரிக்க ஆசிய நாடுகள் காலங் கடத்தாமல், தைரியத்துடனும்,

சிரத்தையுடனும் ஒரு பனிப் போர் தொடங்க வேண்டும். தருமம் ஒன்றுக்குத்தான் சிம்மாதனம் உரியது என்பதை மெய்யாக்க வேண்டும். இந்த இயக்கத்தினால் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளுக்கு நன்மை கிட்டுவதோடு மட்டுமல்ல, உலகம் முழுவதும் நாசமாகாமல் காப்பாற்றலாம். உலக மக்களின் நெறிகள் நாசமாவதையும் தடுக்கலாம். இந்த அவசியமான, துணிகரமான முயற்சியை இந்தியாதான் முன்நின்று மேற்கொள்ள வேண்டும். ஆனால் அடக்கத்தோடு முன்னணி தாங்க வேண்டும். அடக்கமே தருமத்தின் சாரம். அடக்கமே தருமத்தின் மகத்தான சக்தி.

இந்த யுத்தத்தின் முதல் படியாக, பணத்தை வழிபடும் அசுர சித்தாந்தத்தை எதிர்க்க வேண்டும். எளிய வாழ்வும், தொண்டுமே மதிப்புக்குரிய லட்சியங்கள் என்ற நிலையை மீண்டும் ஏற்படுத்த வேண்டும். பணம், படாடோபம் இவற்றுக்கு அந்தஸ்து அளிக்கும் நிலைமையை மாற்றி, ஏழ்மைக்கும் சிலமான எளிய வாழ்வுக்கும் அந்தஸ்து அளித்துக் கௌரவிக்க வேண்டும். இவ்வாறு தர்ம மார்க்கத்தில் அடியெடுத்து வைத்தால் அது தானாகவே வெற்றிக்கு அழைத்துச் செல்லும்.


அதரும வேகத்தை எதிர்த்து இப்படி ஒரு மகத்தான தரும இயக்கம் நடத்தக்கூடிய தலைவர் எங்கே என்ற கேள்வி எழலாம். தலைவன் தானே வருவான். கீதையில் கண்ணன் தந்த உறுதிமொழி என்றைக்கும் மெய்யாகும். நாஸ்திகமும், மேல்நாட்டு பௌதிக மோஸ்தரில் அமைந்த சீர்திருத்தமும் ஹிந்து மதத்தைக் கவிழ்க்க முயன்றபோது பரமஹம்ஸ ராமகிருஷ்ணரை அனுப்பியது யார்? காலமும், தேவையும் இயற்கை விதிப்படித் தலைவனை சிருஷ்டித்துக் கொள்ளத் தவறாது. எனினும் இளைஞர்கள் தங்கள் சக்திக்கேற்ப இப்போதே தர்மத்துக்காக யுத்தம் தொடங்க வேண்டும். அமைதியான முறையில் — ஆனால் அழுத்தமான சங்கற்பத்துடன் — அவர்கள் படாடோபமில்லாமல், விளம்பரத்தை விரும்பாமல், பிறருடைய பாராட்டையோ உதாசீனத்தையோ பற்றி எண்ணமேயின்றி செயல் புரிய வேண்டும். நன்மை செய்யவேண்டும் என்ற ஆர்வம் தன்னுடைய இயல்பான சக்தியிலேயே - விளம்பரங்கள் இல்லாமலேயே-வளர்ச்சி பெறும் என்ற நம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும்.

இப்படி தருமத்துக்காக ஒரு புதுப் பனிப் போர் தொடங்குவோமாக! இந்தப் புதுயுகப் பணிக்கு ஆப்பிரிக்க ஆசிய நாடுகள் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளுமாக!



டாக்டர் டி.டி.கேயின் அட்டை வைத்தியம்

ஊர் வம்பு



உண்மை நிலை என்ன?

இந்தியத் துருப்புக்கள் மக்மாஹன் கோட்டு எல்லையை வசமாக்கிக் கொள்ள முன்னேறாது என்று பாரதப் பிரதமர் இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டார நாயகாவுக்குத் தெரிவித்து, இதனை அவர் மூலம் சீனப் பிரதமருக்கு அறிவிக்கச் செய்தார்—என்ற திடுக்கிடும் விவரத்தைச் சுதந்திரக் கட்சிப் பொதுக் காரியதரிசி ஸ்ரீ மஸானி அவர்கள் பெங்களூர் சம்மேளனத்தில் தெரிவித்தார். இந்த விஷயத்தைச் சர்க்கார் உள் நாட்டுக்குத் தெரிவிக்காமல், இந்தியப் படைகள் சீனா ஆக்ரமித்த பகுதி முழுவதையும் மீட்கப் போரிடுவதாகவே மீண்டும் மீண்டும் வெற்றுப் பேச்சு பேசி, நம்பிக்கைத் துரோகம் செய்ததாக மஸானி அவர்கள் கூறினார். ஸ்ரீ மஸானியின் கூற்றை அயல் விவகாரக் காரியாலய அதிகாரி ஒருவர் மறுத்து மக்மாஹன் எல்லையை இந்தியப் படை மீட்க முயலாது என்று இந்தியா எப்போதும் யாரிடமும் வாக்களிக்கவில்லை என்று சர்க்கார் சார்பில் பேசினார்.

ஆனால் ஸ்ரீமதி பண்டாரா நாயகா சீனப் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்திலிருந்து நேருஜி அவரிடம் மக்மா

ஹன் எல்லை வரை பாரதத் துருப்புக்கள் முன்னேறுது என்று வாக்களித்தபோது இந்திய சர்க்கார் அதிகாரிகள் யாரும் உடனிருக்கவில்லை என்றும் அலி லாப்ரி, ஒஃபோரி ஆட்டா ஆகிய இருவர் மட்டுமே உடனிருந்ததாகவும் தெரிகிறது. ஆகவே இவ்விஷயத்தில் பிரதமர் நேரு அவர்களேதான் பதில் கூற முடியுமே தவிர, அயல் விவகார அதிகாரிகள் எதுவும் சொல்ல முடியாது. தற்போது வெளியாகியுள்ள அரசாங்க மறுப்பு நேருஜியின் சார்பில் வெளியானதாகத் தெரியவில்லை.

விஞ்ஞானி பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் அவர்கள் கூற்றிலிருந்தும் நம்முடைய பிரதமர் நேரு அவர்கள் மக்மாஹன் கோட்டுக்குத் தம்முடைய ராணுவப் படை செல்லாது என்று சொல்லியிருப்பதாகவே உறுதியாகிறது.

என்றைக்குத்தான் இந்திய சர்க்கார் உண்மை நிலையைத் தைரியமாக எடுத்துச் சொல்லுமோ?

சோஷலிஸ்ட் சீறுகிறார்!

'மந்திரிகள் தங்கள் சொத்துக்குக் கணக்குக் காட்ட வேண்டும்' என்று ஸ்ரீ காமத் அவர்கள் மக்கள் சபையில் கொண்டு வந்த ஒரு மசோதா தோற்றுப்போய்விட்டது. மசோதாவின் பயனைப் பற்றி அதிகமாக எதுவும் சொல்வதற்கில்லை. சுதந்திரக் கட்சி விரும்புவது போல் பெர்மிட் - லைசென்ஸ் போர்டும், அரசாங்க ஊழலை விசாரிக்க அதிகாரம் வாய்ந்த சுதந்தர அமைப்பும் நிறுவப் பட்டாலொழிய ஆட்சியாளர்களின் லஞ்சப் போக்கை ஒருபோதும் நீக்க முடியாது.


என்றாலும் நிதி மந்திரி ஸ்ரீ டி.டி.கே. அவர்கள் காமத்தின் மசோதாவை ஏன் இவ்வளவு ஆத்திரத்துடன் எதிர்த்திருக்க வேண்டும் என்பதுதான் புரியவில்லை. 'மந்திரிகள் கணக்குக் காட்ட வேண்டுமென்றால் அவர்கள் பதவியிலிருக்கவே முடியாது' என்று அவர் கூறுவதில் நாம் வேறொரு உட்பொருளைக் கண்டு நகைக்கவே தோன்றுகிறது. 'அமெரிக்காவின் விஷயம் வேறு. அங்கு போல் நம் நாட்டில் பிரபல தொழிலதிபர்கள் மந்திரியாக முடியுமா?' என்று ஸ்ரீ டி. டி.கே. கேட்கிறார். சாட்சாத் டி.டி.கே. இப்படிக் கேட்பதுதான் விந்தை!

மந்திரிமார்களின் அலவன்ஸ் தொகைகளைக் கணக்குத் தணிக்கையாளர்களின் அறிக்கைகளில் பார்த்து நாம் பிரமித்துப் போயிருக்கிறோம். ஆனால் ஸ்ரீ டி.டி.கே அவர்களோ இவை 'அற்பத் தொகைகள்' என்கிறார். அடிப்படைத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் காடிக்கணக்கான மக்கள் அவதியுறும் போது, இப்போது அதி தீவிர சோஷலிஸ்டான ஸ்ரீ டி. டி. கே அவர்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் கூட அற்பமாகத் தோன்றும் அற்புதத்தை என்னவென்பது?

அரிசியும் அரசியலும்

சென்னை மக்கள் அரிசிக்காகப் படுகிறபாடு சொல்லிச் சாத்தியமில்லை. ஒரு படி பச்சை அரிசி இரண்டு ரூபாய்க்கு விற்கும் நிலையைக் காண்கிறோம். காரணம் உணவுப் பிரச்னைகூட மனிதாபிமானம் என்ற எல்லையை மீறி அரசியல் எல்லைக்கு உட்பட்டிருப்பதுதான். சென்னை மக்கள் நீண்ட நாட்களாக வாங்கி உபயோகித்து வரும் நெல்லூர் அரிசி நமக்குக் கிடைக்க முடியாதபடி ஆந்திர சர்க்கார் செய்கிற நிர்ப்பந்தங்கள் அனந்தம். வியாபார சுதந்திரம் அழிந்து போயிருப்பதுதான் இதற்கெல்லாம் காரணம். 'ஒரே இந்தியா' என்றும் 'தேசிய ஒருமைப்பாடு' என்றும் முழக்கும் மத்திய சர்க்கார் இதுபோன்ற பிரச்னைகளில் எதுவுமே செய்யவில்லை. 'ஏக இந்தியா' கொள்கையினர் ஏன் 'அரிசி மண்டலங்கள்' என்று நாட்டைப் பிரிக்க வேண்டும் என்பதும், அந்த மண்டலங்களுக்குள்ளும் போக்கு வரவு தங்கு தடை யில்லாமல் நடைபெறுமாறு கண்காணிக்க அவர்களால் ஏன் முடியவில்லை என்பதும் புரியாத புதிராகவே உள்ளன.

போதாக் குறைக்குத் தமிழக சர்க்கார் வேறு தானே கொள்முதல் செய்து விற்பனை செய்யப் போவதாக அறிவித்ததால், மார்க்கெட்டில் இருந்த அரிசி மேலும் விரைவாக அந்தர்தானமாகத் தொடங்கியுள்ளது. அரிசியில் அரசியலைக் குறைத்து, மக்கள் நலனைக் கருதிப் பிரச்னையைத் தீர்க்கும் நாள் என்று வருமோ?



இருவருக்கு உணவு

பிறப்பு அடைந்த நாம் தர்மங்கள் பண்ண வேண்டியது ரொம்ப அவசியம். என்ன தர்மங்கள் என்று கேட்டால் இரண்டு பேருக்கு அவசியம் ஆகாரம் போட்டுத் தீர வேண்டும். இரண்டு பேருக்கு என்று சொன்னால் யார் அந்த இருவர் என்று நினைக்கிறீர்களா? ஒரு மனுஷன் என்று சொன்னால் அங்கே இரண்டு வஸ்து இருக்கிறது. அதாவது மேலே ஒரு சரீரம்; உடல் ஒன்று இருக்கிறது. உள்ளுக்குள்ளே ஆத்மா ஒன்று இருக்கிறது. இரண்டுக்கும் சோறு போட வேண்டும். இதைத்தான் நான் இரண்டு பேருக்கு உணவு போடுவது என்கிறேன்.

சரீரத்துக்குச் சாதம் போட்டு வளர்த்தால்தான் அது வளரும். சத்துவம் விருத்தியடைந்து, பகவானை அடைய வேண்டியதற்கான புத்தி வரவேண்டுமானால், எந்தெந்த ஆகாரம் எப்படியெப்படிச் சாப்பிடலாம் என்பதாக சாஸ்திரங்களிலே சொல்லப்பட்டிருக்கிறதோ, அந்த மாதிரி, உயர்ந்ததான அன்னத்தை இந்தச் சரீரத்துக்குப் போட்டு உடலை வளர்க்க வேணும்.

'இந்தச் சரீரம் தானே அநேக கெடுதல்களையே நமக்குப் பண்ணுகிறது. இதற்குச் சோறு போட்டு வளர்க்கலாமா?' என்று சில பேர் நினைக்கலாம். ஆனால் இதற்குச் சோறு போட்டு வளர்த்தால்தான் இது நல்ல காரியம் செய்வதற்கு உபயோகப்படுகிறது. சரீரத்துக்குச் சோறு போட்டு வளர்க்காமல் இருந்தால், பகவானைப் பூஜை செய்யக்கூட எழுந்திருக்கமுடியாது. இந்தச் சரீரம் திடமாக இருந்தால்தானே பகவத் காரியங்களைச் செய்யலாம்? ஆகையினாலேதான் சரீரமாகிய ஒருவனுக்குச் சாதம் போட வேண்டும்.


இதற்கு மேலே ஆத்மா என்று ஒருத்தன் இருக்கிறானே, அவனுக்குச் சாதம் போட வேணும். அப்போதுதான் ஆத்மா வளரும். ஆத்மா வளரும் என்றால், பெரியதாகி விடும் என்று அர்த்தமல்ல. ஆத்மாவுக்கு க்ஷேமம் உண்டாகும் என்பதுதான் அர்த்தம். சரீரத்துக்குப் போடும் சாதமானது ஆத்மாவுக்குள்ளே இறங்காது. அப்படியானால் ஆத்மாவுக்கு என்ன அன்னம் போடுவது?

ஆத்மாவுக்கென்று அன்னம் ஒன்று இருக்கிறது. பரப்பிரம்மம் என்று சொல்கிறோமே அதுவே அந்த அன்னம். பகவான் ஒரு அன்னம். அமிருதமயமான அன்னம் அது. அந்த அன்னத்தை இந்த ஆத்மாவுக்குப் போட்டு வளர்க்க வேண்டும். அப்பொழுதுதான் ஆத்மா நல்ல கதி அடையும். அது எப்படி இருக்கும் என்பதை ஆசாரியர்கள் மூலம் தெரிந்துகொள்ள வேணும். ஆத்மாவிலே அறிவு என்பதாக ஒன்று ஒட்டிக் கொண்டிருக்கிறது. அந்த அறிவோடு பிரம்மத்தை ஒட்டி வைப்பதுதான் அன்னம் போடுவது. அறிவைச் சுத்தப்படுத்தி, அதற்குள்ளே இந்த பிரம்மமான அன்னத்தை வைத்தால்தான் பிரம்மம் என்ற அன்னம் உள்ளுக்குள்ளே ஒட்டிக் கொண்டு நிற்கும். அறிவு கெடுதலாக இருக்குமானால் இந்தப் பிரம்ம அன்னத்தை உள்ளே வைக்க முடியாது.


காம, குரோத, லோப குணங்களாலே கெடுதலை அடைந்து இருக்கும் இடத்தில் பகவான் வாசம் பண்ண மாட்டார். அவர் உயர்ந்த ராஜ ஹம்சம். அது கலங்கலான சேற்றுத் தண்ணீரிலே இறங்காது. ஸ்வச்சமாக இருக்கக்கூடியதான ஜலத்திலே மட்டும் வாசம் பண்ணும் பரமஹம்ஸம் பகவான். கெட்ட மனசுக்குள்ளே உட்கார மாட்டார். இதைப் பரிசுத்தமாக்கி, அதற்குள்ளே அவரை உட்கார வைக்க வேண்டும். சரீரத்துக்கு நல்ல ஆகாரங்களைப் போட்டு, வளர்த்தோமானால், அதற்குள்ளே இருக்கும்படியான அந்த ஜீவாத்மாவான ஞானம் கொஞ்சம் கொஞ்சமாகச் சுத்தமாகும். நித்ய கர்மாக்களைச் செய்வதால் முன்பு இருந்த பாப கர்மாக்கள் எல்லாம் ஒழிந்து போய்விடும். அறிவுக்குக் கொஞ்சம் நல்ல அம்சம் ஏற்படும். அந்தச் சமயத்திலே பகவானை விடாமல் தியானம் செய்ய வேண்டும். பகவானைத் தியானம் பண்ணுவதற்கு முன்னாலே எவ்வளவு கெடுதல்களைச் செய்திருந்தபோதிலும், எத்தனை விதமான சாப்பிடக் கூடாத பதார்த்தங்களைச் சாப்பிட்டிருந்தபோதிலும் எவ்வளவு அக்கிரமத்தைச் செய்திருந்த போதிலும் மனசைக் கொஞ்சம் சுத்தப்படுத்தி, பகவத்தியானம் என்ற அன்னத்தை உள்ளே இறக்கி விடுவோமேயானால் தோஷங்கள் அவ்வளவும் விலகிப்போகின்றன. பகவத் தியானத்தோடு அவரது லீலைகளையெல்லாம் சேர்த்துச் சேர்த்து, வியஞ்சனங்கள் தொட்டுக் கொள்கிற மாதிரி சாப்பிட வேண்டும். அன்னம் திகட்டிப் போய்விடுமோ இல்லையோ? அதற்கு வேண்டிய பரிகாரணங்கள் லீலைகள். பகவானை அநுபவிப்பதோடு கூட பகவானின் அடியார்களாக இருக்கக்கூடிய பெரியவர்கள் இருக்கிறார்களே, அவர்களையும் பகவானுக்குச் சமமாக நினைத்து தியானம் பண்ண வேண்டும். ஆத்மாவுக்குப் போடும் அன்னத்திலே பாயசம் மாதிரி அது.

நன்றி : வானொலி நிலையம்

ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகள் அஹோபில மடம்


எவ்வளவு
அழகான
டிசைன்கள்!
மபத்லால்
க்ரூப்
பிரின்டெட்
பாப்லின்கள்

பட்டினத்துப் பேச்சு



★ ''அவள் எனக்குத் தாயாய், தாதியாய், சிநேகிதையாய், சமையல் செய்து போடுபவளாய், பாட்டில் கழுவுபவளாய் இருந்திருக்கிறாள். அவள் எனக்கு உதவி செய்து வந்திருக்கிறாள். இல்லை என்னைக் காப்பாற்றி வந்திருக்கிறாள் — பிரம்மசரியத்தைக் கைக்கொள்ளும் விஷயத்தில் நாங்கள் பரஸ்பரம் அன்பு கொண்டவராய் இருந்தோம். விவாகம் செய்து கொண்டதிலிருந்து வாழ்க்கை முழுதும் என்னுடைய போராட்டங்களி லெல்லாம் உறுதுணையாய் இருந்து வந்திருக்கிறாள். அவள் எனது வாழ்க்கை லட்சியம் நிறைவேறுவதற்காகத் தன்னைத் தியாகம் செய்து கொண்டிருக்கிறாள். அவளுக்கீடாகச் சிலரையே சொல்ல முடியும்......''

இப்படித் தனது கணவனால் புகழப்படக் கூடிய மகத்தான பாக்கியம் பெற்ற மாதரசி யாராயிருக்கக் கூடும்?

அன்னை கஸ்தூரிபாய் காந்திதான். அவரது திருவுருவப் படம் தாங்கிய தபால் பில்லை ஒன்று இந்த மாதக் கடைசியில் வெளியாகிறது.

★ ஒரு நோயாளியை வைத்திய சோதனை செய்த இரண்டு வைத்தியர்கள் அவன் தலை மாட்டில் ஒருவர், கால்மாட்டில் ஒருவராக நின்று தர்க்கம் செய்து கொண்டார்களாம்.

''இவர் டைபாய்ட் சுரத்தினால்தான் இறப்பார்'' என்றார் ஒருவர்.

''இல்லை, இல்லை. நிமோனியாவினால்தான் என்று பந்தயம் கட்டுகிறேன்'' என்றார் மற்றவர்.

ரயில் விபத்துக்களைப் பற்றி ஆராய்ச்சி செய்த கமிட்டியின் முடிவு இதைப் போலத்தான் இருக்கிறது.

''ரயில்கள் தண்டவாளத்தை விட்டு இறங்கின; ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன'', ''லெவல் கிராஸிங் கேட்டில் லாரியோ, பஸ்ஸோ வண்டியோ வந்ததால் அவற்றைப் போய் முட்டின'' என்றார்கள் சில அங்கத்தினர்கள்.



''இல்லை, இல்லை. ரயில்வே ஊழியர்கள் அஜாக்கிரதைக் குறைவினால்தான் விபத்துகள் நேருகின்றன'' என்று பெரும்பான்மையினர் தீர்மானித்தனர்.

யார் காரணமாயிருந்தால் என்ன, அடிபட்டவர்களுக்கு ஆபத்து ஆபத்துத்தான்.

★ உதவி ராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் ஹுஸைன் அவர்கள் படித்த தமிழ்ப் பிரசங்கம் உருதுவில் எழுதப்பட்டதாம். அதைப் படிக்கும் போது சரியாக உச்சரிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இப்படி ஒரு பாஷையின் வார்த்தைகளை இன்னொரு பாஷையின் எழுத்துக்களில் உபயோகிக்கும் வழக்கம் பத்திரிகை காரியாலயங்களில் உண்டு என்பது பலருக்குத் தெரிவதற்கில்லை. ஒரு தமிழ் தினசரிப் பத்திரிகை நாலைந்து நகரங்களிலிருந்து வெளிவருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். தலைமைக் காரியாலயத்தில்தான், தலையங்கத்தைத் தமிழில் எழுதுவார்கள். பின்னர் அதைக் கிரீட் இயந்திரம் மூலம் தந்திச் செய்தி போல் மற்றக் காரியாலயங்களுக்கு அனுப்புவார்கள்.



ஒரு சமயம் THALAIVAR THAMMUDYA THADIAI PIDITHUKONDU' என்று அனுப்பப்பட்ட செய்தியைக் கிளைக் காரியாலயத்தினர் தமிழில் 'தலைவர் தம்முடைய தாடியைப் பிடித்துக் கொண்டு' என்று எழுதினார்களாம்; 'தடி' என்பதற்குப் பதிலாக.

★ சென்னை அமெரிக்க வாசகசாலையில் தபால் பில்லைகள் சேகரிப்பு கண்காட்சி ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. இதில் எல்லாருடைய கவனத்தையும் கவர்வது வட்ட வடிவமான தபால் பில்லை. வட்ட வடிவ தபால் பில்லை உலகத்திலேயே மாதிரிக்கு இது ஒன்றுதான். நியூஜிலாந்துக்குப் பக்கத்திலுள்ள டாங்கா தீவு இதை வெளியிடுகிறது. தீவின் அரசி ஆறடி இரண்டு அங்குல உயரமுள்ளவளாம்! டாங்காவின் செலாவணி நாணயங்களெல்லாம் தங்க நாணயங்கள்தானாம். சின்னச் சின்ன நாணயங்கள்கூடத் தங்கத்தாலானவையாம். மொரார்ஜிபாய் கவனிக்க! அது மட்டுமா! இந்த அரசாங்கத்தில் சென்ற இருபது வருஷங்களாக பற்றுக்குறை பட்ஜெட் என்பதே கிடையாதாம்! நமது நிதிமந்திரிகள் மூர்ச்சை அடையாதிருக்கட்டும்!

★ ''நான் அசல் கும்பகோணத்தான். அங்கேயே முதல்தரமான கொசுக்களுடன் கூடவே பிறந்து, அவற்றுடனேயே வளர்ந்து, அவற்றினாலேயே கடிக்கப்பட்டு வந்தவன். இப்போது சென்னை வந்து பார்த்தால் இந்த ஊர்க் கொசுக்கள் எங்களுடையதைத் தோல்வியுறச் செய்து விடும் போல் இருக்கிறது'' என்று ஒரு திருக்குடந்தைவாசி குறைப்படுகிறார்.

அவை குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை லட்சியம் செய்வதில்லை. ஆகையால் அவைகளை நல்ல முறையில் பயன்படுத்த முயற்சி செய்து பார்க்கலாம். கொசு சங்கீதம் தனிப்பட்டது. அவற்றின் சுருதி தவறுவதில்லை. அயல்நாடுகளுக்கு என்னென்னவோ கலாசார கோஷ்டி அனுப்புகிறோம். இவற்றின் கோஷ்டியும் ஒன்று அனுப்பி வைத்தால் என்ன? —காசி



நடப்பவைதான் நம்புங்கள்







ஒரு மெக்ஸிகோ செய்தி. பத்து வயதுப் பள்ளிச் சிறுமி தாயாகுனளாம். தாயும் சேயும் சௌக்கியமாம்! ஆனல் இதிலும் அதிசய மில்லே; உலக சரித்திரத்தில் மிகக் குறைந்த வயதில் தாயானவள் அர்ஜென்டை ஞவைச் சேர்ந்தவள். ஏழாவது வயதில் இவளுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன!

அது சரி, உலகிலேயே அதிகமான குழந்தைகள் யாருக்குப் பிறந்திருக்கிறது? குசேலரைத் தோல்வியுறச் செய்தோர் யாரேனும் உண்டா? இங்கிலாந்தில் வசிக்கும் பால் பவ்லோஸ்கி என்பவர் இதற்குப் பதில் சொல்கிருர். மிக அதிகமான குழந்தைகளைப் பெற்றுள்ள பெண்மணி ஃபேய்டோரா வாஸிலெட் என்கிற ருஷ்யர்.

நடவைக்கு நான்கு குழந்தைகள் விதம் நான்கு பிரசவங்கள் – 16; நடவைக்கு மூன்று குழந்தைகள் விதம் ஏழு பிரசவங்கள்–21; நடவைக்கு இரண்டு குழந்தைகள் விதம் பதினறு பிரசவங்கள் – 32; மொத்தம் இருபத்தேழு பிரசவங்களில் அறுபத்தொன்பதும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்ந்த இப்பெண்மணி இறந்தது 1872ல்!

பெர்ஷியா தேசத்தில் வாழ்ந்த ஃபேத்அலி என்பவருக்குப் பல மனைவியர் உண்டு. 1812ல் அவர் இறந்து போகும்போது 154 பிள்ளைகளும் 560 பெண்களும் அவரை 'அப்பா!' வென்று அழைத்தனர்.

இதை யெல்லாம் படித்தாலோ கேட்டாலோ குடும்பக் கட்டுப்பாடு அதிகாரிகளுக்குத் தலையைச் சுற்ற அவர்கள் மூர்ச்சை அடைந்து விடுவார்கள் என்பது நிச்சயம். அவர்களுக்குத் தெம்பு ஊட்ட மேற்சொன்ன பால் பவ்லோஸ்கி, குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமான தமது 'அருமையான யோசனை'யைக் குறிப்பிட்டு உலகெங்கிலுமுள்ள ஆயிரத்து ஐந்நூறு பத்திரிகைகளுக்கு எழுதியிருக்கிருர். ஒவ்வொரு பெண்ணும் குறைந்த பட்சம் பத்து கணவன்மார்களை அடைய அனுமதிக்கப்பட வேண்டும் என்பதுதான் அவரது அபார யோசனை! பத்துக் கணவன்மார்களைக் கொண்ட ஒரு பெண் அதிக பட்சம் இருபது அல்லது முப்பது குழந்தைகளைப் பெற்றாலும்கூட இது அந்தப் பத்து பேரும் தனித்தனியே வெவ்வேறு பெண்களைக் கலியாணம் செய்து கொண்டு பெறக் கூடிய குழந்தைகளின் எண்ணிக்கையைவிடக் குறைவாகத்தான் இருக்கும் என்பது பால் பவ்லோஸ்கியின் வாதம்! எப்படி இருக்கிறது கதை! யார் கண்டார்கள்? நமது காங்கிரஸ் சர்க்கார் குடும்பக் கட்டுப்பாட்டில் காட்டும் தீவிரத்தைப் பார்த்தால் இதைக்கூட ஒப்புக் கொண்டு அமுல் நடத்தினலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

❁ சிகரெட் பிடிப்பதால் கான்ஸர் போன்ற பல வியாதிகள் வருகின்றன என்பதாக இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் டாக்டர்கள் அரசாங்கத்தின் சார்பாக அதிகார பூர்வமான அறிக்கைகள் வெளியிட்ட பிறகு பெரிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. ஸிகார் (சர்ச்சில் சுருட்டு),பைப் இவற்றுக்கு அபரிமிதமான கிராக்கி ஏற்பட்டுள்ளது. பெண்மணிகளுக்காகப் பிரத்தியேகமாக, – வைரம் போன்ற விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட பைப்புகள் தயாராகி அமெரிக்காவின் பல பாகங்களுக்கும் விமானம் மூலம் அனுப்பப்படுகின்றன. பலர், டாக்டர்களின் இந்த அறிக்கைகளைப் படித்து விட்டு ஏற்பட்ட பயம், மன வியாகூலம், நரம்புத் தளர்ச்சி இவை காரணமாக முன்னைக் காட்டிலும் பலமடங்கு அதிகமான சிகரெட்டுகளைப் பிடிக்க ஆரம்பித்து விட்டார்கள்! ஜெர்மானியர் ஒரு மணி நேரத்துக்குப் பதினெரு லட்சம் ரூபாய்க்குச் சிகரெட்டுகள் வாங்கச் செலவிடுகிருர்கள்! வியாதிகளைக் கட்டுப்படுத்துவது அரசாங்கத்தின் கடமை என்ருலும் சிகரெட் விற்பனையைத் தடை செய்யும் பிரச்னை மிகப் பெரிது. அமெரிக்காவில் மட்டும் பதினைந்து லட்சம் சில்லறை வியாபாரிகள், நாலு லட்சம் புகையிலை பயிரிடும் விவசாயிகள் பாதிக்கப்படுவர். வருஷத்தில் இருபத்தைந்து கோடி டாலர் மதிப்புள்ள சிகரெட் விளம்பரம் நின்று போனல், தினசரிகள், மாத, வாரப் பத்திரிகைகள், டெலிவிஷன் எல்லாவற்றுக்கும் கஷ்டம்தான்! அமெரிக்க ராஜ்ய சர்க்கார்களுக்கு வருஷத்தில் நூறு கோடி டாலரும் மத்திய அரசுக்கு இருநூறு கோடி டாலரும் வரி வருமானம் நஷ்டமாகும்!

—இராவதம்

விமானப் படை நிர்வாகப் பயிற்சிக் கல்லூரி



'மைசூர்ப்பாகைச் சாப்பிடுபவர்களுக்கெல்லாம் மைசூர்ப் பாகு பண்ணத் தெரிய வேண்டும் என்று அவசியமில்லை' என்று ஓர் இலக்கிய விமரிசகர் சொல்வது வழக்கம். கோவை நகரில் 1946ம் ஆண்டிலிருந்து இயங்கி வரும் இந்த விமானப் படை நிர்வாகப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியே வருபவர்களுக்கெல்லாம் விமானம் ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை! விசித்திரமாக ஒலிக்கின்றதல்லவா? ஆனால் விமானப்படை அமைப்பைப் பொறுத்தவரை மேலே பறப்பது எவ்வளவு முக்கியமோ, அத்தனை முக்கியம் பறக்காமல் இருக்கும் போது கீழே கவனிக்கப்பட வேண்டிய நிர்வாகத்துக்கும் உண்டு.

கல்லூரியாக இருந்தாலும் நாட்டின் பாதுகாப்புத் திட்ட சம்பந்தப்பட்டதாகையால் விசேஷ முன் அனுமதி பெற்றுத்தான் உள்ளே புக முடிந்தது. உள்ளே புகுந்தபிறகுங்கூட 'வந்த காரணம், எந்த அளவுக்கு விஷயங்கள் தேவை' என்ற விவரங்களையெல்லாம் அங்குள்ள ஓர் அதிகாரியிடம் எழுதிக் கொடுத்து அதில் அவர் கையெழுத்தை வாங்கி, துணையாகவோ காவலாகவோ ஒரு காக்கிச் சட்டை ஆசாமி வழிகாட்ட, பிரதான கல்விப் பகுதி நிர்வாகி திரு ஸ்வரூப்பைச் சந்திக்க முடிந்தது.

திரு ஸ்வரூப்புடன் அறிமுகமானபிறகு அத்தனை கெடுபிடியுள்ள பாதுகாப்பு சம்பந்தப்பட்ட ஒரு ஸ்தாபனத்துக்குள்ளே வந்திருக்கிறோம் என்ற நினைவே ஓடிப் போய்விட்டது. வெகு நாட்கள் பழகிய உற்சாகம் நிறைந்த ஒரு நண்பருடன் பேசிக்கொண்டிருப்பது போல்தான் இருந்தது. அத்தனை தங்கமான மனிதர். சங்கீத பாஷையில் குறிப்பிட்டால், பேசுவதற்கு அவருக்கு வெகு உதவுபடியான சாரீரம்.

உடற்கட்டுள்ள, ஆனால் கூடவே சர்வகலாசாலைப் பட்டங்களும் வாங்கியுள்ள இளைஞர்களை, விமானப் படைப் பகுதிக்குப் பொறுக்கியெடுத்து, நிர்வாகத்தில் பயிற்சி அளிக்க இங்கு அனுப்புகிறார்கள். நிர்வாகத்துக்குத் தேவையான நான்கு பிரிவுகளில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1. நிர்வாகமும், விசேஷ கடமைகளும்: 2. உபகரணங்களைச் சேகரித்தல்; 3. வரவுசெலவு; 4. பொதுக் கல்வித் துறை ஆகியவைதான் அந்தப் பிரிவுகள். போட்டிப் பரீட்சைகள் மூலம் வெற்றி பெற்று வந்து இங்கு பயிற்சி பெற்றவுடன் அந்த இளைஞர்கள், விமானப்படையில் உயர்தர உத்தியோகஸ்தர்களாகப் பதவி ஏற்க நாட்டின் பல பாகங்களுக்கும் போய் விடுகிறார்கள். மேலே சொன்ன நான்கு பிரிவுகளில் தனித்தனியே பயிற்சி பெற்றவர்களுக்கு, அவர்களுடைய பயிற்சிக்கு உரிய பதவி அளிக்கப்படுகிறது.


எல்லோருக்கும் பொதுவானது, உடற் பயிற்சியும் விளையாட்டும். இந்த விஷயத்தில் மிகவும் கண்டிப்பாக இருக்கிறார்கள். கணக்கில் நிபுணர் என்பதால் கவாத்து செய்யாமல் தப்ப முடியாது.

உடற்பயிற்சி போல, ஆங்கில பாஷை ஞானமும், எந்த நெருக்கடியையும் பொறுப்பேற்றுச் சமாளிக்கக் கூடிய திறமையும் அவசியம் என்று கருதி அதற்கான பயிற்சியும் அளிக்கிறார்கள். மொத்தப் பயிற்சிக் காலம் ஓர் ஆண்டாக இருந்தது. யுத்த நெருக்கடி நிலையை உத்தேசித்து இப்போது அதை ஆறு மாத காலமாகக் குறைத்திருக்கிறார்கள். இந்தோனேஷியா, கானா, நைஜீரியா முதலிய நாடுகளிலிருந்தும் பயிற்சி பெற இளைஞர்கள் வருகிறார்கள். பாதுகாப்பு இலாகாவின் கெடுபிடி இந்தப் பயிற்சிக் காலத்திலேயே ஆரம்பமாகி

திரு ஸ்வரூப்



கலை வளர்க்கும் கோயில்கள்



விடுகிறது. பயிற்சியாளர்கள், கல்லூரிவட்டத்துக்குள்ளிருக்கும் பிரத்தியேக அறைகளிலே தான் பயிற்சிக் காலத்தில் தங்கியிருக்க வேண்டும். ஏனென்றால் காலை நாலரை மணியிலிருந்து இரவு பத்து மணி வரை அவர்களுக்கு வேலை சரியாக இருக்கிறது. உடற் பயிற்சி, விளையாட்டுக்கள் பாடங்களெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கின்றன. ஓர் அறைக்கு இரண்டு பயிற்சியாளர்கள் வீதம் தங்கியிருக்கிறார்கள். சலவைக்காரர்கள், சமையற்காரர்கள், வேலைக்காரர்களின் எண்ணிக்கை இந்தக் கல்லூரி வட்டத்தில் மாணவர்களின் எண்ணிக்கையை விட எப்போதுமே அதிகம். சலவைக்காரர் சற்றுச் சோர்ந்து விட்டால் பயிற்சியாளர் பாடு ஆபத்து. ஏனென்றால் தினம் புதிதாகக் கஞ்சி போட்டுத் தேய்த்து மொடமொடவென்று அலுமினியத் தகடு போல் நிற்கும் ஆடைகளை அணிந்து கொண்டுதான் அவர்கள் அதிகாலையில் கிளம்ப வேண்டும்.

பயிற்சி முடிந்த பிறகு பல வெளிநாடுகளுக்கும் போக வேண்டிய அவசியம் ஏற்படலாம். பல வெளிநாட்டு விமானப் படை அதிகாரிகளுடனும் பழக நேரிடலாம் என்ற அடிப்படையில், ஆகார விதத்திலேயே ஆதாரப் பயிற்சி அளிக்கப்படுகிறது. முள்ளும் கத்தியும் கொண்டுதான் அவர்கள் இங்கு சாப்பிட்டுப் பழக வேண்டும்.

பயிற்சியிலேயே மூழ்கிக் கிடக்கும் இளைஞர்கள் உள்ளத்தைச் சற்று அவ்வப்போது பொழுதுபோக்குகளிலும் திருப்ப வழி செய்திருக்கிறார்கள். பல பாஷை நாடகங்கள், விசேஷ தினங்களையொட்டி நடித்துக் காட்டப் படுகின்றன. தச்சு வேலை, மாதிரி விமான அமைப்பு, புகைப்படக் கலை ஆகியவற்றில் பலர் அக்கறை காட்டுகிறார்கள். வாசக சாலை மனத்தைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

கல்லூரி வட்டத்துக்குள் ஆங்காங்கு பொருத்தமான பொன்மொழிகளை அழகுபடப் பெரிய பலகைகளில் தீட்டி நிறுத்தி வைத்திருக்கிறார்கள். 'உரிமைக்கு ஆதாரம் கடமை' 'ஆண்டவனே ஏற மலைகளைக் கொடு! கூடவே ஏறுவதற்கான பலத்தையும்கொடு' 'விமானப் படையின் முக்கிய கடமை விமானங்களைப் பறக்கச் செய்வதே' போன்ற பொன்மொழிகள் கவனத்துக்கு வருகின்றன.

பயிற்சி முடிந்த மாணவர்கள் சம்பிரதாயப் படி கல்லூரியை விட்டுப் புறப்படுவது என்பதற்காகத் தனியே ஒரு வாயில் அமைத்து (தலைப்புப் படம்) அதில் புகுந்து வெளியே வந்து தலைமை வகிக்கும் அதிகாரிக்கு வணக்கம் தெரிவித்து நடக்கிறார்கள். இது அவர்களுக்கு ஒரு பட்டமளிப்பு விழாப் போல!


கல்லூரியில் போதகராக இருக்கும் உயர் அதிகாரி திரு சீதாராம் முன்நாளில் பெஷாவர் அணிப் பிரிவைச் சேர்ந்தவர். அவரைச் சில்ச்சாருக்கு அனுப்பி யிருந்தார்கள். சில்ச்சாரிலிருந்து அவரை எதிர்பாராத வகையில் பங்களூருக்குப் போக உத்தரவு கொடுத்தார்கள். அவரிடம் திடீரென்று புறப்படுவதற்கான பண வசதி இல்லை. அவருடைய பாங்கிக் கணக்கோ பெஷாவரிலிருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் அவர் ஓர் ஐரோப்பிய பாங்கி அதிகாரியை அணுகி விஷயத்தைச் சொன்னார். அந்தப் பாங்கி அதிகாரிக்குத் திரு சீதாராமை முன்பின் தெரியாது. ஆனால் அவர் ஒரு 'கமிஷன்ட் ஆபீஸர்' என்பதை உடையைப் பார்த்து உறுதி செய்து கொண்டார். 'மிஸ்டர்! தங்கள் வேண்டுகோளை ஒரு கடிதத்தில் எழுதிக் கொடுங்கள்' என்று சொல்லி அந்தக் கடிதத்திலேயே திரு சீதாராமுக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கும்படி தம் சிப்பந்திக்கு எழுதி உத்தரவிட்டாராம்.

'கமிஷன்ட் ஆபீஸர்கள் நாணயமுள்ளவர்கள். பொய் சொல்ல மாட்டார்கள். அவர்கள் நாணயம் தவறினால் கடும் தண்டனைக்கு உள்ளாவார்கள்' என்ற அடிப்படையில் அந்தப் பாங்கு அதிகாரி தம்மைக் கௌரவித்துக் காலம் தாழ்த்தாமல் உதவி செய்ய முன்வந்ததைத் திரு சீதாராம் பெருமிதத்துடன் கூறினார்.


அத்தகைய, நாட்டின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகக் கூடிய உயர் அதிகாரிகளை இந்தக் கல்லூரி தயாரிக்கிறது.

இப்போது கல்லூரியின் முதல்வராக வீற்றிருப்பவர் உயர் அதிகாரி ஜோஷி ஆவார். இந்தக் கல்லூரியின் முதல் முதல்வராக 1946ல் வந்தவர், சமீபத்தில் பூன்ச் ஹெலிகாப்டர் விபத்தில் அகால மரணமடைந்த ஏர் வைஸ் மார்ஷல் பிண்டோவாம்.

முதல்வர் ஜோஷியுடன் நமது நிருபர்.



விமானப் படையினர் அணிவகுப்பு.



அறிவுக்கனலே, அருட்புனலே!

56



ரா. கணபதி

ஒருமுறை ராஜபுதனத்தில் ஸ்வாமிஜி பயணம் செய்த ரயில் பெட்டியிலேயே இரண்டு ஆங்கிலேயர்கள் உடன் வந்துகொண்டிருந்தார்கள். ஸ்வாமிஜிக்கு ஆங்கிலம் தெரிந்திராது என்ற எண்ணத்தில் அவ்விருவரும் அவரைப் பற்றிப் பரிகாசமாகப் பேசிப் பேசிச் சிரித்து மகிழ்ந்து கொண்டார்கள். அவரும் ஒரு வார்த்தைகூடப் புரியாதது போலவேயிருந்தார். ஏதோ ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றதும் ஸ்வாமிஜி ஸ்டேஷன் மாஸ்டரிடம் தமக்குக் குடிநீர் வேண்டும் என்று ஆங்கிலத்தில் கேட்டார். உடனே அந்த ஆங்கிலேயர் இருவரும் ஆச்சரியமடைந்தனர். அவர் ஆங்கிலம் அறிந்திருந்தும் தாங்கள் கூறியதையெல்லாம் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தது ஏன் என வினவினர். "ஏன்? நான் முட்டாள்களைப் பார்ப்பது இது முதல்தரமல்ல" என்றார் ஸ்வாமிஜி நறுக்கென்று. ஆங்கிலேயர்களுக்கு ஆத்திரம் வந்தது. ஸ்வாமிஜியைத் தாக்க அவர்கள் ஆயத்தமானார்கள். 'அதற்கும் நாம் தயார்; இரண்டு பேர்களையும் நம்மால் ஒரு கைபார்க்க முடியும்' என்பது போல ஸ்வாமிஜி முண்டாக்களைத் தட்டிக்கொண்டு எழுந்தார். அவ்விருவரும் வாலைச் சுருட்டிக் கொண்டு அமர்ந்தனர்.

1891ம் ஆண்டு கோடைக்காலத்தில் ஸ்வாமிஜி ஆபுவை அடைந்தார். ஆபுவிலுள்ள ஜைன தில்வாரா ஆலயத்தின் சிற்பச் சிறப்பு உலகப் பிரசித்தி பெற்றதாகும். ஆண்டவன் தானாகச் செய்த இயற்கை எழிலும், மனிதர்கள் மூலமாகச் செய்த கலை அழகும் ஒன்றோடொன்று போட்டியிடும் ஆபுவில் ஸ்வாமிஜியின் கண்ணுக்கும் கருத்துக்கும் நல்ல விருந்து கிடைத்தது. ஆபுவிலுள்ளவர்களின் அறிவுக்கும் இதயத்துக்கும் நல்விருந்தாக ஸ்வாமிஜியே கிடைத்தார். சிறுகச் சிறுக அவரிடம் சிஷ்ய கணம் சேரலாயிற்று.

சிஷ்யர்களை விட்டுப் பிரிந்து ஆபுவிலுள்ள நிர்மாநுஷ்யமான ஒரு குகையில் ஸ்வாமிஜி தபஸ்யை செய்யலானார். வித்து மண்ணுக்குள்ளே ஒளிந்து வாழ்ந்தால் தான் முளைத்துப் பயன்தர முடிகிறது. அப்படியே சாதகர்களும் ஒளிந்து மறைந்து யாரும் காணமல் வாழ்ந்தால்தான் ஞானம் முளையிட்டு வளர்ந்து, அவர்கள் உலகுக்கெல்லாம் பயன்தரும் ஞானத்தருவாக முடியும் போலும். எனவே அவர்கள் விஷயத்தில் சமூகத்துடன் இணைந்து வாழ்வது போல, ஏகாந்த வாழ்வும் சமூக நலனுகவே ஆகிறது. இதனால்தானே என்னவோ, ஸ்வாமிஜி சமூக சேவையைப் பற்றித் தீவிரமாக எண்ணிய போதெல்லாம், உடனுக்குடனே தனிமையில் தவம் புரியச் சென்றார்.

ஒரு நாள் குறுநில மன்னரொருவருடைய வக்கீலாகிய முஸ்லீம் ஒருவர் குகை வழியே செல்லும்போது ஸ்வாமிஜியைக் கண்டு அவரின் ராஜ கம்பீரத்தில் கட்டுப்பட்டார். ஸ்வாமிஜிக்குத் தமது மாளிகையிலேயே இருக்கை தர முன்வந்தார்.

அம்மாளிகையில் பல சம்ஸ்தானங்களின் அதிகாரிகளுடன் ஸ்வாமிஜிக்குப் பரிசயம் ஏற்பட்டது.

கேத்ரி மகாராஜாவின் அந்தரங்கக் காரியதரிசியாகிய முன்ஷி ஜகன்மோகன்லால் அவர்களில் ஒருவர்.

ஸ்வாமிஜியிடம் முன்ஷி கேட்டார்: "நீங்கள் ஒரு ஹிந்து சந்நியாசி. அப்படியிருக்க முஸல்மான் ஒருவர் வீட்டில் நீங்கள் தங்கியிருப்பது எப்படி?"

ஸ்வாமிஜிக்குச் சீற்றம் வந்து விட்டது.

"ஐயா, நீங்கள் என்ன நினைத்துக்கொண்டு இப்படிக் கேட்கிறீர்கள்? நான் ஒரு துறவி, தெரியுமல்லவா? உங்களுடைய சமூக சம்பிரதாயங்களுக்கெல்லாம் நான் அப்பாற்பட்டவன். நான் தோட்டியுடனும்கூடச் சேர்ந்தமர்ந்து உண்பேன். இதற்காக நான் ஆண்டவனிடம் அஞ்சவில்லை; ஏனெனில் அவனே இதனை அநுமதித்திருக்கிறான். நான் சாஸ்திரங்களிடம் அஞ்சவில்லை; ஏனெனில் அவையும் இதனை அநுமதிக்கின்றன. ஆனால் நான் அஞ்சுவது யாரிடம் தெரியுமா? உங்களிடமும், உங்கள் சமூகத்திடமும்தான் நான் அஞ்சுகிறேன். உங்களுக்கு ஆண்டவனைப்

பற்றியும், சாஸ்திரங்களைப் பற்றியும் எதுவுமே தெரியாது. ஆனாலும் நீங்கள் ஏதேனும் குறை கூறிக் கொண்டிருக்கிறீர்கள். நான் எங்கும் பிரம்மத்தைக் காண்கிறேன். தாழ்ந்தவற்றுள் தாழ்ந்த உயிரினங்களும் பிரம்மத்தின் தோற்றம் என்பதாகக் காண்கிறேன். எனக்கு உயர்ந்தது, தாழ்ந்தது என்று எதுவுமே கிடையாது.''

இப்படிப் பேசி வந்த ஸ்வாமிஜி உன்னத ஹிமாசலத்தின் மீது ராஜராஜனாக அமர்ந்து கொண்டிருக்கும் பரமனே புவிக்கு இறங்கி வந்துபிச்சைக்காரனாகத் திரிவதை நினைந்தார்.

''சிவனே, சிவனே'' என்று அந்த நிலையில் அவர் ஆர்ப்பரித்த போது அவரைச் சுற்றிலும் தெய்வீகம் நிப்பிழம்பாக ஜொலித்தது. ஜகன் மோஹன்லால் வாயடைத்துப் போனார். தமது மஹாராஜா இந்த ஸ்வாமிஜியைக் காண வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு எழுந்தது.

மன்னரின் முகாமுக்குத் திரும்பிய முன்ஷி மன்னரிடம் விஷயத்தைக் கூறினார். அந்தக் கணமே கேத்ரி மன்னரின் உள்ளத்தில் ஏதோ ஒரு பாந்தல்யம் தோன்றிவிட்டது!

மேகம் போல் அவரது உள்ளம் நைந்தது. 'தமக்கு ஒளியூட்டப்போகும் நிலவு உதித்து விட்டது! அந்த நிலவுக்கு அருகே தம்மை இட்டுச் செல்லும் அன்புக் காற்றும் வீசி விட்டது. சந்திரிகையில் விழுந்து புரள வேண்டியதுதான்' என்று ஆதுரம் கொண்டாரவர். ஆனால் மதியத்தை மறைக்காமல் அதன் பெருமை பாரெல்லாம் பரவ உதவும் அற்புத முகிலாக இவர் இருக்கப் போகிறார்!

கேத்ரி மஹாராஜா சகல மரியாதைகளுடன் ஸ்வாமிஜியை வரவேற்றார்.

அறிமுகப் படலமும், வழக்கமான குசலப் பிரச்னமும் ஆனபின், ''ஸ்வாமிஜி, வாழ்க்கை என்பது என்ன?'' என்று வினவினார் மன்னர்.

''தன்னை அமுத்தி வைக்க முயலும் சூழ்நிலைகளின் கீழ் உள்ள ஒரு ஜீவன் தன்னை விளங்கிக் கொள்வதும், விரித்துக் கொள்வதுமே வாழ்க்கை'' என்றார் ஸ்வாமிஜி. தமது பிரத்தியேக வாழ்வில் ஸ்வாமிஜி சமாளிக்க வேண்டிய பிரச்னைகளெல்லாமாகச் சேர்ந்து அவரது குரலில் ஓர் உருக்க உலகத்தையே புகுத்தியிருந்தது. அவ்வார்த்தைகள் மஹாராஜாவின் உள்ளத்தில் ஆழப் பதிந்தன.

பரமஹம்ஸ மஹா யோகியின் பவித்திரமான சரித்திரத்தை மஹாராஜாவுக்குக் கசிந்துருகிக் கூறினார் ஸ்வாமிஜி. பேரார்வத்துடன் அதனைச் செவி மடுத்தார் சம்ஸ்தானாதிபதி.

பல நாட்களுக்கு ஸ்வாமிஜியின் உபதேசங்களைக் கேட்டு மகிழ்ந்தார் அரசர். பிறகு அவர் தமது தலைநகரமாகிய கேத்ரிக்குத் திரும்பியபோதும் ஸ்வாமிஜியை உடன் இட்டுச் சென்றார். மன்னருக்கு மந்திரோபதேசம் செய்தார் ஸ்வாமிஜி. மஹாராஜா அவருக்கு அத்யந்த சிஷ்யரானார். நாட்டினர் வணங்கும் அரசராயினும் பணிவே உருவாக ஸ்வாமிஜிக்கு சுசுருஷை புரிந்து வந்தார் அவர். மன்னரின் பக்திக்கு ஒரே ஓர் உதாரணம் போதும். ஸ்வாமிஜி நித்திரை புரியும்போது மன்னர் அவரது பாதங்களைப் பக்தியுடன் பிடித்து விடுவாராம்.

பிறர் எதிரில் மஹாராஜா தமக்கு கைங்கர்யம் புரிவதற்கு ஸ்வாமிஜி அனுமதிக்க மாட்டார். ''உங்கள் பிரஜைகளுக்கு இதனால் உங்களிடம் மதிப்புக் குறைந்து போகும்'' என்று கூறி விடுவார்.

ஆன்மிகச் செல்வம், கலைச் செல்வம், இவற்றோடு விஞ்ஞானச் செல்வத்தையும் மன்னருக்கு ஸ்வாமிஜி அளித்தார். மன்னரோ வேறொரு செல்வமும் பிரார்த்தித்தார். புத்திரச் செல்வமே அது. பிறப்பிலிருந்து மீள வழிசொல்பவரிடமே தமக்குப் பிள்ளை பிறக்க வரம் கேட்டார் மன்னர்.

வியவகார உலகிலிருந்து தங்கள் கண்களை மகான்கள் ஒரு போதும் மூடிக் கொள்ள மாட்டார்கள். உலகில் உள்ளவர்களெல்லாம் சந்நியாசிகளாகி இந்த ஜன்மத்துடனே முக்தி பெற்று, அடுத்த பரம்பரை என்பதாக ஒன்று இல்லாமல் உலகமே சூனியமாகும் என்று அவர்கள் ஒருபோதும் நினைப்பதில்லை. ''தர்மத்துக்கு விருத்தமில்லாத ஆசையாக நான் இருக்கிறேன்'' என்று பரந்தாமனே பகர்ந்திருக்கிறானே! மகாராஜாவுக்கு சந்தான பாக்கியம் கிட்ட வேணும் என்று ஸ்வாமிஜி உள்ளன்போடு வாழ்த்தினார்.

அரண்மனையிலிருந்தவரை அரணியம் கூப்பிட்டது.

ஆண்டியாகப் புறப்பட்டார் ஸ்வாமிஜி.

கேத்ரி சம்ஸ்தானத்தில் அவர் பயணம் செய்த போது நடைபெற்ற ஓர் உருக்கமான நிகழ்ச்சியை ஸ்வாமிஜியே கூறக் கேளுங்கள்:

''ஓர் இடத்தில் என்னிடம் போதனை பெற ஏராளமானவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். சொன்னால் நம்பக் கூட முடியாது. மூன்று நாளைக்கு இரவும் பகலும் ஒரு க்ஷணை ஓய்வுகூட இன்றி என்னைப் பேசவைத்தார்கள். ஆனால் நான் சாப்பிட்டேனா இல்லையா என்று கூட அவர்கள் விசாரித்ததில்லை. மூன்றாம் நாள் இரவு. எல்லாரும் போயாகி விட்டது. தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த ஏழை ஒருவன் என்னிடம் வந்தான்.

'' 'ஸ்வாமிஜி, இந்த மூன்று நாட்களாக நீங்கள் உணவேயில்லாமல் காலம் தள்ளுவதைக் காண எனக்கு நோகிறது. உங்களுக்கு மிகவும் சோர்வாகவும் பசியாகவும் இருக்கும்' என்றான்.

''ஈசுவரனே என்னைச் சோதிப்பதற்காக இப்படித் தாழ்குலத்தவனாக என்னிடம் வந்திருக்கிறான் என்று எனக்குத் தோன்றிற்று.

'' 'நான் உண்ண ஏதேனும் கொடுப்பாயா?' என்று அவனைக் கேட்டேன்.

'' 'ஸ்வாமிஜி, உங்களுக்கு உணவு அளிக்க வேண்டுமென என் இதயம் ஏங்கத்தான் செய்கிறது. ஆனால்.... ஆனால்.... என் கையால் சுட்ட சப்பாத்திகளை நீங்கள் எப்படி உண்ண முடியும்? நீங்கள் அனுமதித்தீர்களாயின் மாவும், காய்களும், மற்றவைகளும் கொண்டு வருகிறேன். நீங்களே சமைத்துச் சாப்பிடலாம்' என்றான் அவன். அப்போது நான் சந்நியாச விதிப்படி அக்கினி காரியம் எதுவும் செய்யாதிருந்தேன். எனவே ''நீ தயாரித்த சப்பாத்திகளையே எனக்குக்

கொடு: பரவாயில்லை. நான் அவற்றை மகிழ்ச்சியுடன் உண்பேன்' என்றேன்.

''இதைக் கேட்ட அவன் பயத்தில் நடு நடுங்கினான். அவன் கேத்ரி மகாராஜாவின் பிரஜைகளில் ஒருவன். செருப்புத் தைப்பவனாகிய அவன் சந்நியாசி ஒருவருக்குச் சப்பாத்தி அளித்தான் என்று மகாராஜாவுக்குத் தெரிந்தால் அவர் கடுமையாகத் தண்டித்து ராஜ்யத்திலிருந்தே துரத்தி விடுவார் என்று அவன் பீதி கொண்டான். பயப்படத் தேவையில்லை என்றும், மஹாராஜா அவனைத் தண்டிக்க மாட்டார் என்றும் நான் அவனிடம் கூறினேன். அவன் என் வார்த்தையை நம்பவில்லை. எனினும் கடைசியில் அவனது அன்பே அவனை வென்றது. தனக்குத் தண்டனை கிட்டினாலும் பரவாயில்லை என்ற இதயபூர்வமான அன்புடன் அவன் எனக்குத் தான் சமைத்த உணவையே கொணர்ந்து கொடுத்தான். தேவராஜனாகிய இந்திரனே என்முன் தங்கக் கோப்பையில் அமிருதத்தை ஏந்திக் கொண்டிருந்தாலும்கூட அது இந்த உணவைவிட ருசித்திருக்காது என்றே எனக்குத்தோன்றிற்று. அன்பிலும் நன்றியிலும் நான் கண்ணீர் பெருக்கினேன். 'இழிய குடில்களில் இது போல ஆயிரக் கணக்கான விசால உள்ளத்தினர் வாழ்கிறார்கள். அவர்களை நாம் தாழ்ந்த ஜாதியினர் என்றும் தீண்டாதார் என்றும் மட்டம் தட்டுகிறோமே' என்று எண்ணினேன். சில நாட்களுக்குள் அவன் மஹாராஜாவின் முன் ஆஜர்ப்படுத்தப்பட்டான். தனக்குப் பயங்கரமான தண்டனை விதிக்கப்பட இருக்கிறது என்று நினைத்துத் தலையிலிருந்து கால்வரை நடுங்கியவாறு அவன் வந்தான். ஆனால் மஹாராஜாவோ அவனை மிகவும் புகழ்ந்து, இல்லாமை என்ற கொடுமை அவனுக்கில்லாதபடி செய்தார்.''

பல பிரதேசங்களில் சஞ்சரித்தபின் ஸோமநாத பட்டினத்தை அடைந்தார் ஸ்வாமிஜி.

களங்கமுள்ள சந்திரனைத் தலையில் தரித்த ஸோமநாதன் களங்கமுள்ளமனத்தினர் தனது திவ்வியமான ஆலயத்துக்கு மும்முறை களங்கம் செய்ததையும் மன்னித்திருந்தான். ஸ்வாமிஜி சென்ற போது மாபெரும் ஸோமநாத மந்திரத்தின் இடிபாடுகள்தாம் இருந்தன. * அவற்றைக் கண்ட போது ஸ்வாமிஜியின் உள்ளமும் இடிந்தது. ஒரு காலத்தில் பத்தாயிரம் கிராமங்களைச் சொத்தாகப் பெற்றிருந்த ஆலயமாயிற்றே அது! அதெல்லாம் கனவாய், பழங் கதையாய்ப் போனது ஏன்? அந்த ஊரின் தூசிகூட விபூதிக்குச் சமமானது என்று ஹிந்துக்கள் நம்பியிருக்க, முஸ்லிம்கள் அங்கு பிரவேசித்துக் கோயிலைப் பாழாக்கியது எப்படி?

அலை மோதும் கடல் அருகே அலை மோதும் உள்ளத்தினராக ஸ்வாமிஜி அலைவார். அந்த அலை கடலின் சோக ஒலியில் அவரது கேள்விக்கு விடை கிடைக்கும். நம் மக்களின்


*** இந்தியா சுதந்திரம் பெற்ற பின் சர்தார் வல்லபபாய் படேல் அவர்களின் நன்முயற்சியில் ஸோமநாதர் ஆலயம் புதுப்பித்துக் கட்டப்பட்டிருக்கிறது.**

அக்கப்போர்

சமீபத்தில் கிடைத்த சில சுவடிகளை ஆராய்ச்சி செய்ததில், 'மந்திரிக்கழகு வரும் பொருள் உரைத்தல்' என்ற பாட்டு தவறானதென்று தெரியவருகிறது என்றும் உண்மையான பாட்டையே இனி பாட புத்தகங்களில் சேர்க்க வேண்டும் என்றும் அரசாங்கக் கல்வி இலாகா உத்தரவிட்டிருக்கிறது. சுவடியிலிருந்து கண்டு பிடித்தது: 'மந்திரிக்கழகு வரும் பொருள் வாங்குதல்'.

ஃ ஃ ஃ

1965ம் வருடத்திய பிரத்தியேக தபால் பில்லை வெளியீட்டு வரிசையில், ''விலைவாசி, வரிகளில் கண்ணீர் விடும் பிரஜை'யின் ஞாபகார்த்தமாக ஒரு பில்லை வெளியிடப்படும்.



ஃ ஃ ஃ

கேரள மந்திரி . சாக்கோ அவர்கள் தமது மோட்டார் வண்டியில் இருந்த சமூக நல ஊழியருக்கு ஒரு பதவி கொடுத்தாக வேண்டுமென்று உண்ணும் விரதம் இருக்கப் போகிறார்.

ஒற்றுமைக் குறைவினால்தான் ஸோமநாதபுரத்துக்கு — ஏன் நாடு முழுவதற்குமே—உத்பாதம் ஏற்பட்டது என்று சமுத்திர ஒலி அவருக்குக் கூறும். இந்த ஒற்றுமையின்மை இன்று நேற்று ஏற்பட்டதா, என்ன? ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் இதே பிரபாஸ க்ஷேத்திரத்தில், ஸ்வாமிஜி உலவும் இதே கடற்கரையில், யாதவர்கள் தங்களுக்குள் ஒற்றுமை குன்றித் தாங்களே ஒருவரையொருவர் மாய்த்துக் கொண்டதாக அல்லவா மகாபாரதம் கூறுகிறது? பாரத காலத்தை எண்ணியவுடன் பரமனின் நினைவு ஸ்வாமிஜிக்கு ஏற்பட்டது. தன் மக்களெல்லாம் மாண்டதைக் கண்டபின் மாதவன் இங்குதான் மர நிழலில் அமர்ந்து யோக மார்க்கமாகத் தனது திரு உடலை உதிர்க்க எண்ணினான். அப்போது தொலைதூரத்திலிருந்த ஒரு வேடன் குழைவு மயமான பெருமானின் திருமேனியைப் பெண் மானாக நினைத்து அம்பெய்தான். எத்தனையோ அற்புதங்களைச் செய்தருளிய பூர்ணாவதாரன் சாதாரண மானுடன் போலவே அம்பின் அடியில் தன் தேகத்தைத் துறந்தான். தன் மலருடலில் அம்பு பொத்தி உயிர் விட வேண்டியவனா அவன்? கர்மவினை பற்றாத தெய்வம் மனிதனாக வரும் போது தன்னை வருத்திக் கொள்வதற்கிணையாக மானுடர்கள்கூட அல்லலுறுவதில்லையே!

துயரப்படுவதன் பெருமையை ஸ்வாமிஜி மீண்டும் உணர்ந்தார். உலகினர் தங்களது பாபத்துக்காக உருகவோ, தண்டனை பெறவோ அறிந்திராததால் ஒரு சில மகான்கள் 'விசுவ வேதனை'ப்படுவதற்காக

என்றே அவதரிக்கிறார்கள். ஸ்வாமிஜியும் அவர்களில் ஒருவர் அல்லவா?

போர்பந்தர் சம்ஸ்தானத்துக்குச் சென்றார் ஸ்வாமிஜி. பண்டிட் சங்கர பாண்டுரங்கர் என்ற அறிஞர் அங்கு திவானாக இருந்தார். ஸ்வாமிஜி அவருடன் வசிப்பவராகப் பதினொரு மாதங்கள் தங்கி அவர் செய்து வந்த வேத மொழிபெயர்ப்புக்குச் சகாயம் புரிந்தார்.

திவான் பாண்டுரங்கரின் யோசனைப்படி பிரெஞ்சு மொழி கற்கலானார் ஸ்வாமிஜி. "இது உங்களுக்கு உதவியாயிருக்கும்" என்று கூறிய திவான் வாயில் சர்க்கரை போட வேண்டியதுதான் என்று இந்தச் சரிதையில் பின்னால் ஓரிடத்தில் எண்ணுவோம்.

ஸ்வாமிஜியின் மகோந்நதமான எதிர்காலம் உருவாகப் போர்பந்தர் திவானும் ஒரு விதத்தில் காரணமா யிருந்தார் எனலாம்.

"ஸ்வாமிஜி, தாங்கள் இந்தத் தேசத்தில் அதிகமாக எதுவும் செய்ய முடியாது என்றே எனக்குத் தோன்றுகிறது. இங்கு சிலரே உங்களைப் புரிந்து கொண்டு மகிழ்வார்கள். நீங்கள் மேல்நாடுகளுக்குச் செல்ல வேண்டும். அங்கே உள்ளவர்கள் உங்களையும் உங்கள் பெருமையையும் புரிந்து கொள்வார்கள்..." என்று மனப்பூர்வமாகக் கூறினார் பாண்டுரங்கர்.

வஸந்த ருது வரப் போகிறது என்பதை மலர்ச் செடிக்குத் தெரிவிக்கும் மெல்லிய தென்றலாக அமைந்தது பாண்டுரங்கரின் வார்த்தைகள். ஸ்வாமிஜி மன மலரை முகிழ்க்க வேண்டிய தருணம் நெருங்கிக் கொண்டே இருந்தது. வஸந்தத்தின் மாருதத்தை மட்டுமின்றி, கடு வெயிலையும் அந்த மலர் தாங்க வேண்டிய வேளை நெருங்கிக் கொண்டே இருந்தது.

அப்போது அமெரிக்காவில் சிகாகோவில் சர்வ மத மகாசபை (Parliament of Religions) என்று ஒரு பேரவை கூட்டுவதற்கு ஏற்பாடாகி வந்தது. உலகிலுள்ள சகல மதத் தலைவர்களையும் ஒன்றுகூட்ட எண்ணிய பேரவை அது. இதனைப் பற்றிப் போர்பந்தரிலேதான் ஸ்வாமிஜி அறிந்திருக்க வேண்டும்.

இச்சமயத்தில் ஸ்வாமிஜியின் உள்ளம் பூகர்ப்பமாகக் கொந்தளித்துக் கொண்டிருந்தது. செயற்கரியன செய்ய வேண்டும் என்று அவருடைய ஒவ்வொரு மயிர்க் காலிலும் பதை பதைப்பு உண்டாகிக்கொண்டிருந்தது. 'நரேன் உலகத்தையே அதன் அஸ்திவாரம் வரை ஒரு புரட்டுப் புரட்டி விடுவான்' என்று குருமஹராஜ் பெருமிதத்துடன் கூறியதை அடிக்கடி எண்ணிக் கொண்டார் ஸ்வாமிஜி. அப்படிப் புரட்டுவது எப்போது என்று தமது மனதையே புரட்டிக் கொண்டிருந்தார். இந்தியாவில் ஒரு பெரும் பகுதியைப் பார்க்கப் பார்க்க அதனை மேம்படுத்தாமல் தாம் வாளா விருக்கிறோமே என்ற எண்ணம் அவரை வாளாக அறுத்துக் கொண்டிருந்தது. அரசர் அவையில் அறிவுரை கூறும் போதும், அறிஞர் அவையில் ஆராய்ச்சி புரியும் போதும் இவை அல்ல தம் பணி — இன்னும் ஏதேதோ காரியங்களைத் தாம் எங்கெங்கோ செய்ய வேண்டியிருக்கிறது என்று ஒன்று அவருள் உறுத்திக் கொண்டே யிருக்கும். அவை என்னென்ன காரியங்கள்? அவற்றைத் தாம் எங்கெங்கு செய்ய வேண்டும்?

இந்தத் தேசத்தைத் திருத்துவதென்றால், அதற்கு முதலில் உலக அரங்கிலேயே பணி தொடங்க வேண்டும் என்று ஸ்வாமிஜி மெல்ல மெல்ல உணரலானார். உள்நாட்டில் செய்ய வேண்டிய பணிக்கு உலகப் பணி எப்படிப் பூர்வாங்கமாக இருக்க முடியும் என்ற ஐயம் எழலாம். ஆனால் உள் நாட்டினரில் செல்வாக்குள்ள பெரும் பகுதியினர் மேல் நாட்டு மோகம் பிடித்தலைந்தார்கள். மேல் நாடு பாரத தர்மத்தின் பெருமையை உணர்ந்து போற்றினாலொழிய அவர்கள் தங்கள் 'சீர்திருத்தங்களை'க் கைவிட மாட்டார்கள் எனத் தெளிவாக அறிந்தார் ஸ்வாமிஜி. இதனால் தாம் இந்தியாவுக்கு நன்மை புரிவதோடு உலகுக்கும் ஆன்மிகப் பணி புரிய முடியும் எனக் கண்டார்.

துவாரகைக்கு வந்தார் ஸ்வாமிஜி. அங்கு ஆண்டவன் ஆண்டதன் அடையாளச் சுவடுகள் எதையும் அவர் கண்டாரில்லை. 'புராதன பாரதத்தின் நினைவாக இன்று இருப்பது என்ன? எங்கேனும் சில இடிபாடுகள் காண்கின்றன. அவ்வளவுதான். அன்றைய தத்துவங்களும் இன்று இதே கதியில்தான் இருக்கின்றன' என்ற எண்ணங்கள் ஸ்வாமிஜியின் இமைகளை ஈரமாக்கின. இதே போல் பாரத தர்மம் இடிந்திருந்த ஒரு காலத்தில் அவதரித்து அதனைப் புதுப்பித்த செம்மல் சங்கர பகவத்பாதர் துவாரகையில் ஸ்தாபித்திருந்த திருமடத்துக்குச் சென்றார் ஸ்வாமிஜி. பாழடைந்த துவராபதியில் மடத்து அறையொன்றில் ஸ்வாமிஜி தங்கி யிருந்த போது அவருடைய மன அறையில் கூட்டம் கூட்டமாக எண்ண மின்மினிகள் பறந்தன. மின்மினிகளின் மந்தமான வெளிச்சம் பெருகிக் கொண்டே சென்றது. அந்த ஒளி இந்தியாவின் எதிர்காலத்தைப் பிரகாசப் படுத்துமல்லவா?

ஸ்வாமிஜி மத்திய இந்தியாவில் உள்ள காண்ட்வாவுக்கு வந்து சேர்ந்தார். பாபு ஹரிதாஸ் சட்டர்ஜி என்ற வக்கீலின் வீட்டில் மூன்று மாதங்கள் தங்கியிருந்து அவரது குடும்ப அங்கத்தினர் ஒருவர் போலவே ஆனார்.

சிகாகோவில் நடக்கவிருந்த சர்வமத மகாசபையில் தாம் பங்கு கொள்ள வேண்டும் என ஸ்வாமிஜி உள்ளூற விரும்பியதை முதன் முதலாக வெளியிட்டது காண்ட்வாவில்தான். "கடவுள் சித்தமிருந்து, பிரயாணச் செலவுகளை யாரேனும் கொடுத்து உதவ முடியுமானால், நான் இந்த மகாசபைக்குச் செல்வேன்" என்று ஹரிதாஸரிடம் ஸ்வாமிஜி கூறினார்.

1892-ம் ஆண்டு ஜூலை மாதப் பிற்பகுதியில் பம்பாய் மாநகருக்குச் சென்றார் ஸ்வாமிஜி.

அங்கு அகஸ்மாத்தாகத் தமது குருபாயியாகிய ஸ்வாமி அபேதாநந்தரைச் சந்தித்தார். "தம்பீ, என்னுள் மகா சக்தியொன்று வளர்ந்து வருகிறது; இதனால் என் உடல்

நிகழக் கூடாது என்று தலைவர் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்தைப் புவனேசுவரிதேவி அவ்வளவு எளிதாக மன்னித்து விடத் தயாராக இல்லை. 'தான் வீரேசுவரனுக்காக நோன்பிருந்து பெற்ற பிள்ளையின் காதையா இப்படி இழைப்பது?'

அந்தப் பாழாய்ப் போன பள்ளிக்குப் போகவே வேண்டாமென்று மகனிடம் கூறிவிட்டாள் அவள். ஆனால் அவனோ ஏதும் நடக்காதது போல் மறு நாளே வழக்கம் போலப் பள்ளிக்குப் புறப்பட்டுவிட்டான்.

நரேந்திரநாதனின் காதுப் புண் நீண்ட நாட்களுக்கு ஆறவில்லை.



நரேந்திரனுடைய நண்பன் ஒருவன் வீட்டில் மலர் மரமொன்று உண்டு. அம்மரத்தின் மீதேறி மலர் கொய்வது நரேந்திரனது வழக்கம். மலருக்காக மட்டும் அவன் மரம் ஏறுவதில்லை. காலை மடித்துத் தொங்கவிட்டுத் தலைகீழாக ஒரு கிளையிலிருந்து இன்னொன்றுக்குத் தாவுவது அவனுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டாகும். அங்கிருந்து குட்டிக்கரணம் போட்டபடியே நிலத்தில் குதிப்பான். நரேந்திரனுடன் நண்பர்களும் சேர்ந்து கொண்டு அமர்க்களப்படுத்துவார்கள்.

பாதி பார்வை போன அந்த வீட்டுப் பாட்டனாரால் இந்த 'ரோதனை'யைப் பொறுக்கவே முடியவில்லை. அந்த மரத்தில் பிரம்ம ராட்சதம் ஒன்று வசிப்பதாகவும், அது மரத்தின் மீதேறுவோரின் கழுத்தை நெரித்துக் கொன்று விடும் என்றும் அவர் பயமுறுத்திப் பார்த்தார். அவருடைய பயமுறுத்தலை மிகவும் பவ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் நரேன். வீட்டுக்குள் சென்றுவிட்டார் கிழவனார். அவ்வளவுதான்! மீண்டும் மரத்தின் மீதேறத் தொடங்கி விட்டான் நரேன். அவனுடைய நண்பர்கள் தடுத்துப் பார்த்தனர். அவன் செவி சாய்க்கவில்லை. ''மடக் கழுதைகளடா நீங்கள்! மரத்தில் பிரம்ம ராட்சதம் இருக்கிறதென்றால் இவ்வளவு நாட்கள் அது என்ன பண்ணிற்றாம்? தாத்தா கதைப்படி என் கழுத்தை எத்தனையோ முறை அது நெரித்துப் போட்டிருக்க வேண்டுமே!'' என்றான் அந்த அஞ்சா நெஞ்சன். இந்தப் பாட்டனாரின் பேரன்தான் பிற்காலத்தில் ஸ்வாமி விரஜானந்தரானது.




'உண்மை எதுவெனத் தானே அனுபவபூர்வமாக நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். மூட நம்பிக்கைக்கு இடம் தரலாகாது' என்பது ஸ்வாமி விவேகாநந்தரின் அபிப்பிராயம்.

புதிது புதிதாக ஏதேனும் ஒரு துறையில் ஈடுபாடு கொள்வான் சிறுவன் நரேந்திரன். நாடகத்தில் அவனது உள்ளம் செல்லலாயிற்று. பல பையன்களைச் சேர்த்துக் கொண்டு வீட்டின் பூஜை மன்றத்தில் மேடையெல்லாம் அமர்க்களமாகப் போட்டு விட்டான். ஒரு சில நாடகங்களும்கூட அரங்கேற்றி விட்டான். வீடே 'அமெச்சூர் நாடகக் குழு'வாகி விட்டது. நரேனின் உறவினர்

ஒருவருக்கு இந்த ஆர்ப்பாட்டம் பொறுக்கவில்லை. அந்தப் புண்ணிய புருஷர் மேடையைத் தகர்த்து நரேனின் நாடகங்களுக்கு மங்களம் பாடி வைத்தார்.

இதனால் நரேன் சோர்ந்து போய்விடவில்லை. அவனுடைய ஊக்கமும் ஆக்கத்திறமும் தேகப் பயிற்சித் துறையில் திரும்பின. தன் வீட்டு முன்றிலிலேயே தேகப்பயிற்சி சாலை ஒன்றைத் தொடங்கிவிட்டான். அவனுடைய தேகப் பயிற்சி சாலை அமோகமாக நடைபெற்றது —உறவினர் குழந்தை யொன்று கையை முறித்துக் கொள்ளும் வரையில். முன்பு நாடக மேடையை உடைத்தெறிந்த மகாநுபாவர் தேகப் பயிற்சி சாலைக் கருவிகளையும் உடைத்தெறிந்து அதற்கு ஸமாப்தி செய்து வைத்தார்.



நரேந்திர நாதன் நவகோபால் மித்ரா என்பவரின் வியாய மண்டலத்தில் சேர்ந்தான். சிலம்பம், கம்பாட்டம், நீச்சல், மல் யுத்தம், படகு செலுத்துதல் முதலிய பல கலைகளையும் கற்றான். ஒரு முறை விளையாட்டுப் போட்டியில் முதல் பரிசைத் தட்டிக் கொண்டான். உடலைத் திண்மையாக வைத்துக் கொள்ளுவது உள்ளத் திண்மைக்கும் அவசியமாகும் என்பது விவேகாநந்தரின் கருத்து. சிந்தனையை மழுங்கச் செய்யுமளவுக்கு உடல் பலவீனம் அடைந்த நிலையில் பகவத் கீதை படிப்பதை விடக் கால்பந்தாட்டமே ஒருவனைப் பரலோகத் துக்கருகே இட்டுச் செல்லும் என்று ஒரு சமயம் அவர் மொழிந்தார்.

இந்த விளையாட்டுக்களில் சளைத்த பொழுதில் படங்களை மாய விளக்கு (magic lantern) எனப்படும் லென்ஸ் ஒளி உதவி மூலம் திரையில் போட்டுக் காட்டிக் களிப்பான் நரேன்.

சிறுவன் நரேந்திரனுக்குச் சமைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றோர் ஆசை யெழுந்தது. சிநேகிதர்களையெல்லாம் பணமாகவும், தானியங்கள், காய்கறிகளாகவும் உதவச் செய்து செலவில் பெரும் பகுதியைத் தானே ஏற்று உணவு வகைகள் தயாரித்தான் நரேந்திரநாதன். அவன் தலைமையாளாக இருக்க மற்றவர்கள் உதவியாளராகப் பணி புரிந்து உணவு தயாரிப்பார்கள்; பின்னர் எல்லோரும் உண்டு மகிழுவர். நரேந்திரன் வெகு ருசியாகத்தான் சமைப்பான். எனினும் மிளகை அதிகமாகப் போட்டு காரத்தைத் தூக்கலாக்கிவிடுவான்.

'இந்தியாவுக்கு இப்போது சாத்விகத்தைவிட ராஜஸம்தான் அதிகத் தேவை' என்று பறை யறைந்தவர் ஸ்வாமிஜி. காரமான உணவு ராஜஸமானது என்பது கீதை வாக்கு.

எல்லோருக்கும் பிரியனாகத் தீராத விளையாட்டுப் பிள்ளையாக வளர்ந்து வந்தான் நரேந்திரன். ஏழை — பணக்காரர், உயர் குலத்தவர் — இழி குலத்தவர், பெரியவர் — சிறியவர், ஆண் — பெண் என்ற எந்த வித்தியாசமுமின்றி எல்லார் மனைகளிலும் புகுந்து அவர்களின் மனங்களிலும் புகுந்தான் நரேன். அவனொத்த வயசினர் யாருக்கேனும் ஏதேனும் துயரம் நேர்ந்தால் ஆறுதல் அளிப்பதில் முன் நிற்பான். சிடு மூஞ்சிக் கிழங்களைக்கூட அவன் சிரிக்க வைத்த சம்பவங்கள் பல. பெண்டுகளுக்கு அந்த வாண்டு மீது ஒரே உயிர். 'அத்தை' என்றும், 'அக்கா' என்றும் அவரவர்கள் பிராயத்தைப் பார்த்துப் பக்குவமாக உறவு முறை கொண்டாடுவதில் அதி கெட்டிக்காரன் நரேந்திரன். தங்கள் வயசு என்ன என்பது பற்றிப் பெண்களுக்குத்தான் தனி அபிப்பிராயம் உண்டே! அதையெல்லாம் அறிந்திருந்தான் கள்ளன்.

ஆட்டங்கள் காட்டியும் பாட்டுக்கள் பாடியும்
ஆறுதல் செய்திடுவான் ;
......அன்பர் கூட்டத்திலே யிந்தக்
கண்ணனைப்போல் அன்பு
கொண்டவர் வேறுளரோ ?
அம்மைக்கு நல்லவன், கண்டீர் ! - மூளி
அத்தைக்கு நல்லவன், தந்தைக்குமஃதே

என்றெல்லாம் கோபாலனைப் பற்றிப் பாரதியார் பாடியிருப்பது நரேந்திரனின் பாலப் பருவத்தை எண்ணும் போது நினைவில் வருகிறது. கிருஷ்ணனை நினைவூட்டும் இந்த நரேனை அர்ஜுனனாக்குவதற்காக இன்னொரு கிருஷ்ணர் காத்திருந்தார். அவர்தான் ராமகிருஷ்ணர். அர்ஜுனனை முன் வைத்து உபதேசம் செய்த கண்ணனைப் போல் நரேந்திரனை முன் வைத்துத் தம் அநுபூதியை மக்கட் குலத்துக்கு வழங்கவே அவர் காத்திருந்தார். (தொடரும்)


வனப்பூட்டும்,
மேனிக்கு
மென்மை தரும்,
சுகந்தம் வற்றாது
எழிலூட்டி
இன்பம் தரும்
"கோகுல்"
ஸான்டால்
டாய்லெட் பவுடர்
GOKUL
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER
டி. எஸ். ஆர். & கோ., மதராஸ்.



நீலச் சீசா

காளத்திநாதன்

அந்த மின்சாரக் கம்பத்தின் அருகில் வந்ததும் பையனின் கால்கள் தாமாக நின்று விட்டன. தலையில் சுமந்து வந்த மூட்டையைச் சர்வ ஜாக்கிரதையாகக் கீழே இறக்கிவிட்டுக் குதிகாலில் உட்கார்ந்தான்.

எதிரே கம்பீரமான கட்டிடத்துக்குள் மருந்து நெடியில் மூழ்கிக் கொண்டிருந்த தர்ம ஆஸ்பத்திரியைப் பார்த்துப் பையன் ஒரு கும்பிடு போட்டான். தனக்கும் தன் எஜமானனுக்கும் அதுதான் படியளக்கிறது என்பதை அவன் நன்றாக உணர்ந்திருந்தான். அதனால் அவன் அந்த ஆஸ்பத்திரியைக் கடவுளாக நினைத்தான்.

இளஞ்சூரியன் 'கபகப'வென்று வளர்ந்து கொண்டிருந்தான். அவன் கண்டிவிட்ட சுறுசுறுப்பில் ஜனங்கள் விறுவிறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

பையன் மூட்டைக்குள் கையை விட்டு ஒவ்வொரு புட்டியாகக் கீழே எடுத்து வைத்தான். பத்து விநாடிகளில் அத்தனை புட்டிகளையும் அழகாக அடுக்கி விட்டான். சாக்கை உதறி நாலாக மடித்துக் கீழே போட்டு அதன் மீது ஜம்மென்று உட்கார்ந்து கொண்டான்.

பையனின் முகத்தில் ஒரு கம்பீரம் வந்து விட்டது. இனி அவன் இந்தப் பக்கத்தில் வரும் ஒவ்வொருவரையும் நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருப்பான். நோய் அழுத்தும் பாரத்துடன் வருகிறவர்கள் அவனை அணுகிப் புட்டிகளை விலைக்குக் கேட்பார்கள். அவன் என்ன விலையைச் சொன்னாலும் அவர்கள் குறைத்துக் கேட்டுக் கெஞ்சிக் கூத்தாடுவார்கள்.



பாவம், எல்லாரும் ஏழை ஜனங்கள். கால் நடையாக வருகிறவர்கள். ஆனால் இதற்காகப் பையன் ஒன்றும் இளகிவிடமாட்டான். ''விலை புட்டியிலே எழுதி ஒட்டியிருக்கிறது பார்! எல்லாம் சுரூர் ரேட். இஷ்டம் இருந்தால் வாங்கு. இல்லாவிட்டால் இடத்தைக் காலி பண்ணு. உன்னால் வியாபாரம் கெடுது'' என்று நிர்த்தாட்சண்யமாகப் பேசுவான்.. கருணை என்பதே அவனிடம் கிடையாது. அவன் யாருடைய தயவையாவது எதிர்பார்த்தால்தானே!

ஆயிற்று.... அவன் எஜமானன் வரும் நேரம். அவன் சரியாகக் காலை எட்டு மணிக்கு வருவான். பையன் எப்படிக் கடை பரப்பியிருக்கிறான் என்று நோட்டம் விட்டபடி, வாய்க்கு வந்த வசை மொழிகளை உதிர்த்து விட்டுப் போவான். பையன் புட்டிகளை விற்ற பணத்தைக் கொடுத்துச் சரியாகக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். எஜமானன் திருப்தியடைந்ததும் பையன் மிச்சமுள்ள புட்டிகளை மூட்டை கட்டி அவனுடைய வீட்டில் கொண்டு போய்ச் சேர்ப்பான். இதற்குள் எட்டு ஒன்பது மணியாகிவிடும்.

அப்பொழுதுதான் எஜமானனுக்கு ஒரு வழியாகக் கொஞ்சம் இரக்கம் சுரக்கும். மிகவும் பெரிய மனசு பண்ணி ஒரு நாலணாக் காசைத் தூக்கிப் பையனின் கையில் போடுவான். பையன் பாடு குஷிதான்.

அந்த நேரத்தில் எந்த ஓட்டலில் இட்டிலி சூடாகக் கிடைக்கும் என்று அவனுக்குத் தெரியும். ராம பவனுக்குள் நுழைந்து நாலு இட்டிலிகளுக்கு 'ஆர்டர்' கொடுத்துவிட்டுச் சாம்பாரிலும் சட்டினியிலும் மிதப்பான்!

வெய்யில் சுள்ளென்று பையனின் பரட்டைத்தலையில் உறைத்தது. சொறிந்து விட்டுக் கொண்டான். அடி வயிறு சமுத்திரம்போல் இரைந்தது. அதைச் சொறிந்து அடக்கிவிட முடியுமா என்ன? பையன் பல்லைக் கடித்த படியே பசியைப் பொறுத்துக் கொண்டான்.

ஏழை ஜனங்கள் மந்தை மந்தையாகத் தர்ம ஆஸ்பத்திரிக்கு வந்து கொண்டிருந்தனர். வறுமை அவர்களைப் பிய்த்துத் தின்றது போதாது என்று, அவர்களது அழுக்கேறிய ஆடைகளையும் ஒரு கை பார்த்திருந்தது.

எலும்பும் தோலுமாக இருந்த அவர்களைப் பார்க்கப் பையனுக்குச் சகிக்க வில்லை. எத்தனை விகாரமாக இருக்கிறார்கள்? இவர்களோடுதான் வியாபாரத்தை நடத்த வேண்டும் என்று விதி அவன் தலையில் கட்டியிருந்தது.

பையன் முகத்தைச் சுளித்துக் கொண்டான். அவனுக்கு மட்டும் ஆண்டவன் அதிகாரத்தைக் கொடுத்திருந்தால், அவன் ஆளுக்கொரு புட்டியை எடுத்துக் கொடுத்திருப்பான். இப்பொழுது அது முடியாது. விலையில் ஒரு நயா பைசாவைக் குறைக்கக்கூட அவனுக்கு அதிகாரம் கிடையாது. ஆகையினால் விடாப்பிடியாக இருந்தான்; முரட்டுத்தனமாக நடந்து கொண்டான்.



பையனுக்கு இப்பொழுது தலைவலி ஆரம்பமாகிவிட்டது. 'விண் விண்' என்று இரண்டாகப் பிளந்து விடுவது போல் தலை தெறித்தது. அவனால் தாங்க முடியவில்லை. 'அம்மம்மா....' என்று முனகினான். தலைவலிக்குக் காரணம் நேற்று முழுதும் பச்சைத் தண்ணீரைத் தவிர வேறு எதுவும் அருந்தாததுதான். 'ராமபவன்' நாலு இட்டிலிக்குக்கூட வழியில்லாமல் போய்விட்டது. இந்த ஏழை ஜனங்களுக்காக அவன் இவ்வளவு பச்சாத்தாபம் கொண்டு உருகுகிறானே, இவர்களுக்குக் கொஞ்சமாவது அவன் மீது கருணை இருக்கிறதா?



இவன் ஏமாந்த சோணகிரியென்று நேற்று எவனோ ஒரு செல்லாத கால் ரூபாயைத் தலையில் கட்டிவிட்டுப் போய்விட்டான். பையனின் எஜமானன் அந்த அளவுக்குப் பைத்தியக்காரன் இல்லை. கணக்கு ஒப்புவிக்கும் பொழுது கண்டுபிடித்து விட்டான்.

"ஐயோ! இது செல்லாத காசா? யாரோ துணிஞ்சு ஏமாத்தி யிருக்காங்க..." என்று பையன் துடித்தான்.

"ஏமாத்திட்டாங்களா? அந்த அளவுக்கு நீ தூங்கிக்கினு வியாபாரம் பண்றியா? உனக்கு எப்படிப் புத்தி புகட்டறதுன்னு எனக்குத் தெரியும். உனக்கு இன்னைக்குக் கூலி இந்தச் செல்லாத கால் ரூபாய்தான்!" என்று எஜமானன் கர்ஜித்தான்.

பையன் கதறி அழுது விட்டான். "எஜமான்! இந்தத் தடவை மட்டும் மன்னிச்சிடுங்க. என் வயித்திலே மண்ணைப் போட்டுடாதீங்க..." என்று கதறினான்.

ஆனால் எஜமானன் கிஞ்சித்தும் இரக்கம் காட்டவில்லை.

பையன் அந்தச் செல்லாத நாலணாக் காசோடு வெளியே வந்தான். 'ராம பவன்' கல்லாவில் உட்கார்ந்திருக்கும் முதலாளியும் அவனைப் போல் ஓர் இளிச்சவாயர்தான். அவரிடம் இந்த நாலணாவைக் கொடுத்து ஏமாற்றுவது சுலபம். அப்படிச் செய்ய மட்டும் பையனுக்கு மனசே வரவில்லை. குழம்பிக் குழம்பித் தள்ளாடி நடந்தான். பிறகு திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவனைப் போல் குப்பைத் தொட்டியை நோக்கி அந்தக் கால் ரூபாயை விட்டெறிந்தான்.

"அப்பப்பா.... உயிர் போகுதே! நாக்கு உலர்ந்து தீயுதே!"

பையன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். பக்கத்தில் ஒரு குடுகுடு கிழவி முடங்கிக் கிடந்தாள். அவள்தான் முனகி யிருக்க வேண்டும். அவளுக்கு உடம்புக்கு என்னமோ? பாவம், அவனைப் போல் அவளும் ஓர் அநாதையாகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அப்படித் தெருவோரத்தில் யாரும் கவனிக்காமல் ஏன் கிடக்கப் போகிறாள்?

தலைவலி வேகமாக முற்றி விட்டது. பையனால் தாளவே முடியவில்லை. துடிதுடித்தான். இரண்டு கைகளாலும் தலையை அமுக்கி விட்டுக் கொண்டான். இது ஒன்றும் சாதாரணமாகப் போகிற வியாதி இல்லை. இங்கிலீஷ் டாக்டரின் மருந்துத் தண்ணீர் பட்டால்தான் போகும்.

மருந்து வாங்கப் புட்டிக்கு எங்கே போவது? பையனின் பார்வையில் அந்த நீலச் சீசா நெருடியது. ஒரு கணம் மெய் சிலிர்த்துப் போய் விட்டான்.

பையனுக்கு ஓர் அபார யோசனை தோன்றியது. எப்படியும் புட்டியை எடுத்துக்கொள்வது; அதற்கு ஒரு கதை கட்டி விடுவது என்று தீர்மானித்தான். 'எஜமானன் எமகாதகப் பேர்வழிதான். நம்பவே மாட்டான். ஏதோ புண்ணியம் இருந்தால் பிழைத்துப்போவோம். இல்லாவிட்டால் வருவதை அனுபவித்துக் கொள்வோம்' என்று பையன் துணிந்தே விட்டான்.

நீலச் சீசாவை எடுத்து இடுப்பில் இடுக்கிக் கொண்டு அதன் மேல் சொக்காயை இழுத்து விட்டுக் கொண்டான். வயிற்றை உற்றுப் பார்த்தான். அவ்வளவு சீக்கிரத்தில் கண்டு பிடித்துவிட முடியாது என்பதில் ஒரு திருப்தி.

சுற்று முற்றும் நிதானமாகப் பார்த்துக் கொண்டே பக்கத்துக் குப்பைத் தொட்டியைப் பையன் பரபரவென்று கிளறினான். நீலக் கண்ணாடிச் சில்லுகள் சிலவற்றைப் பொறுக்கிக் கொண்டு வந்தான். அவற்றைப் புட்டிகளுக்கு அருகில் போட்டு விட்டுப் பெருமூச்சு விட்டான்.

'காரியம் முக்கால்வாசி முடிந்து விட்டது. எப்படியோ தவறி அந்த நீலச் சீசா உடைந்து விட்டது என்று சாதிக்க வேண்டியது. எஜமான் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி. வருவதை அனுபவித்தே தீருவது....' பையனுக்குப் பாதித் தலைவலி கரைந்து விட்டதுபோல் ஓர் உணர்ச்சி.

"கெக்கெக்கே..." என்ற கிழட்டுச் சிரிப்பொலி பையனின் கழுத்தைத் திருகித் திருப்பியது.

அப்படிச் சிரித்தவள் அந்த நோய்க்காரக் கிழவிதான். இப்பொழுது எப்படியோ மெல்ல எழுந்து உட்கார்ந்து விட்டிருந்தாள். "புட்டி திருடறியா? உன் எஜமான் வரட்டும். முதுகுத் தோலை உறிக்கச் சொல்றேன்..."

இந்தப் படுபாவிக் கிழவி இவ்வளவு நேரம் பையன் செய்ததையெல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருந்தாளா? அவனுக்கு உதறல் எடுத்தது. "ஏய், நோய் பிடிச்ச கெழவி! வீணு மல்லுக்கு வராதே. நான் பொல்லாதவனாக இருப்பேன். உன் வேலையைப் பார்த்துப் போ!" என்று உறுமினான்.

கிழவி அவனை ரோஷத்துடன் முறைத்துப் பார்த்தாள். "நீ நேத்து முளைச்ச பையன். உன் அதட்டலுக்கு இந்த அம்மாக் கண்ணு அசந்துவிட மாட்டாள். ஒழிஞ்சி போகுது. அந்தச் சீசாவை எங்கிட்டே கொடுத்திடு. நான் உன் எஜமான்கிட்டே சொல்ல மாட்டேன். நீ இதைத் திருடி வித்துத் தின்னத்தானே போறே? என் ஒடம்பைப் பாரு. நெருப்பாக் கொதிக்குது. மருந்துத் தண்ணி வாங்கிக் குடிக்கணும். என்னாலே காசு போட்டுப் புட்டி வாங்க முடியாது. நோய் போயிட்டதும் உனக்கே புட்டியை நான் திருப்பிக் கொடுத்திடறேன்....."

கிழவியின் கண்ணீர் பையனின் மனசைக் கரைத்தது என்னவோ உண்மை. ஆனால் அவன் தலைவலிக்கு முன் அது எடுபடவில்லை. "அம்மா!" என்று பையன் அலறினான்.

"இதோ, பாரு கெழவி! சும்மா சும்மா நம்பகிட்டே வம்புக்கு வராதே. என் தலைவலி எனக்குத் தெரியும்!"

"அப்படீன்னா, இந்தப் புட்டியை எனக்கு நீ கொடுக்க மாட்டியா?"

"மாட்டேன்! மாட்டேன்!"

கிழவியின் கண்கள் ஆத்திரத்தில் ஜொலித்தன. "பாவிப் பயலே! மாட்டியா? இரு சொல்றேன். அதோ பாரு. உன் எஜமானன் வர்றான். மரியாதையா அந்தப் புட்டியை எங்கிட்டே கொடுத்திடு. இல்லாட்டி அவன் கிட்டே உண்மையைச் சொல்லிடுவேன்!"

நடுநடுங்கிப் போனான் பையன். திரும்பிப் பார்த்தான். எஜமானன் வேகமாக வந்து கொண்டிருந்தான். பையனின் உடம்பு வெட

வெடித்தது. பிறகு ஒரு வெறி அவனை ஆட்டி வைத்தது.

பக்கத்தில் கிடந்த ஒரு பெரிய கருங்கல்லை எடுத்து, "ஜாக்கிரதை! ஏதாவது உளறினாயோ, இதை உன் தலையில் போட்டு விடுவேன்...." என்று ஓங்கினான்.

குடல் வெளியே வந்து விட்டதைப் போல் கிழவி கதிகலங்கிப் போனாள். "கொல்லுவியாடா பொறம்போக்கே?" என்று கதறிக் கொண்டு கீழே சாய்ந்தாள்.

பையன் கல்லைத் தொலைவில் எறிந்துவிட்டுச் சுதாரித்துக் கொண்டான். சுறுசுறுப்புடன் எஜமானனை வரவேற்றான்.

"என்னடா இருட்டு மூஞ்சி முழிச்சபடி தூங்கி விழறே?" என்று தடபுடலாகக் கேட்டுக் கொண்டே வந்தான் எஜமானன். பையன் பேந்தப் பேந்த விழித்தான்.

நீலக் கண்ணாடிச் சில்லுகள் எஜமானனின் கண்களில் பட்டன. "ஏண்டா, புட்டியை உடைச்சிட்டியா?" என்று இரைந்தான்.

பையன் பேயறைந்தது மாதிரி நின்று கொண்டிருந்தான். "சரி சரி, இன்னிக்கு ராத்திரியும் பட்டினி கிடக்கணும்னு உன் தலையிலே எழுதியிருந்தா அதுக்கு நான் என்ன செய்ய முடியும்?" என்று அலுத்துக் கொண்டே சென்று விட்டான் எஜமானன்.

பையன் கண்களைத் துடைத்துக் கொண்டு உட்கார்ந்தான். எதிர்ப் பக்கத்தில் கிட்டான் போய்க் கொண்டிருப்பதைக் கண்டதும் அவனைக் கை தட்டிக் கூப்பிட்டான்.

கிட்டானும் இவனைப் போல் ஓர் அநாதைச் சிறுவன்தான். ஆனால் சோற்றுக்குத் தாளம் போடுகிறவன் இல்லை. அவன் சினிமாக் கொட்டகைகளில் முன்னதாக டிக்கெட்டை 'ரிஸர்வ்' செய்து விட்டு, பிந்தி வருகிறவர்களிடம் அதிக விலைக்கு விற்பான். அவனுடைய வியாபாரம் பையனுக்குப் பிடித்திருந்தது. ஆசையை வேறு கிளறி விட்டிருந்தது. ஆனால் அந்த வியாபாரத்துக்கு முதல் வேண்டும். பையனால் எந்தக் காலத்துக்கு அந்த முதலைச் சேர்க்க முடியுமோ?

"என்னடா?" என்று கிட்டான் அருகில் வந்தான்.

"கொஞ்சம் கடையைப் பார்த்துக்கிறியா? நான் ஆஸ்பத்திரி உள்ளே போயி மருந்து வாங்கிக்கினு வந்துடறேன். தலைவலிடா."

பையன் ஆஸ்பத்திரிக்குள் பறந்து சென்றான். 'க்யூ'வில் நின்று டாக்டரை அணுகுவதற்குள் அவனுக்குக் கால்கள் கடுத்தன.

டாக்டர் பையனைச் சோதித்துப் பார்த்தார். "மாத்திரை எழுதித் தருகிறேன். சாப்பாட்டுக்குப் பிறகு மூன்று வேளை சாப்பிடு. தலைவலி பறந்து விடும்!"

"நான் புட்டிகூடக் கொண்டு வந்திருக்கேன், மருந்து வாங்கிப் போக!" என்றான்.

டாக்டருக்குச் சிரிப்பு வந்தது. "மருந்து அவசியமில்லை. மாத்திரையே போதும்!"

"மருந்து இல்லையா?" — பையன் தன்னையறியாமல் வீறிட்டான்.

மாத்திரையை வாங்கிக் கொண்டதும் பையன் வேகமாக வெளியே வந்தான். 'ஐயோ பாவம்! நமக்கு மருந்து தருவார்கள் என்று கிழவிக்குப் புட்டியைக் கொடுக்காமல் அவள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டோமே? அவளுக்கு உடனே மருந்து தேவை. புட்டியை அவளுக்கே அவளுக்கென்று கொடுத்து விடுவோம்' என்று தீர்மானித்துக் கொண்டான்.

ஓட்டமாக ஓடி வந்து, "பாட்டி! பாட்டி! இந்தா புட்டி!" என்று கத்தினான்.

பாட்டி விசுக்கென்று எழுந்து கொள்ளவில்லை; புரண்டும் கொடுக்கவில்லை.

பையன் கிட்டானைப் பார்த்தான். கிட்டான் பதறி வந்து கிழவியைத் தொட்டுப் பார்த்தான். "கிழவி செத்துப் பூட்டாடா. உடம்பு சில்லிட்டுப் போச்சுடா."

ஆயிரம் கட்டடங்கள் அக்கு அக்காக இடிந்து பையனின் தலையில் விழுந்தன..... "பாட்டி! உன்னை நான் சாகடிக்கல்லே. சும்மா பயமுறுத்தினேன். அவ்வளவுதான். விதிதான் உன்னைக் கொண்டு போயிடுச்சு. நான் இல்லை, பாட்டி! நான் இல்லை!" என்று அந்த நீலச் சீசாவைத் தன் மொட்டைத் தலையில் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டான்.

நீலச் சீசா உடைந்து, பச்சை ரத்தத்தோடு சில்லுகள் கீழே சிதறுவதைக் கண்ட கிட்டான், பையனைத் தடுக்கக் கூடத் தோன்றாமல் திகைத்துப் போய் நின்றான்.

The following particulars regarding the ownership of the 'KALKI', the Tamil weekly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. *Place of Publication :* Madras
2. *Periodicity of its Publication :* Weekly
3. *Name of Printer & Publisher :* R. Ananthanarayanan
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Kilpauk, Madras-10
4. *Name of Editor :* T. Sadasivam
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Kilpauk, Madras-10
5. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital:*

Sri T. Sadasivam, 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-10. Srimathi M. S. Subbulakshmi, 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-10. Sri R. Ananthanarayanan, 20, Dr. Guruswami Mudaliar Road, Madras-10. Sri K. Rajendran, 1, Fifth St., New Colony, Lake Area, Madras-34. Sri M. P. Kalyanasundaram, 3, Water Works Colony, Kilpauk, Madras-10. Sri V. Vaidyanathan, 3, Varadarajalu Naidu Road, Egmore, Madras-8. Sri K. R. Athmanathan, 20, Dr. Guruswami Mudaliar Road, Kilpauk, Madras-10.

1-3-63 *R. Ananthanarayanan*
Publisher

கால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் 'துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினுல் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினுல் உங்கள் பற்களை நன்ருகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனுலேயே பல் துலக்க விரும்புகிருர்கள்.




வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது

நீங்கள் பற்பொடியை விரும்பினுல், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிருர்கள்.

DC-G-23-TAM.



சாரம் கட்டி வேலை நடக்கிற கோபுரம் - பொற்ருமரைக் குளத்திலிருந்து தெரியும் தோற்றம்.


தென் மதுரைத் தெய்வத் திருப்பணி

இருப்பணி உண்டியலில் அன்பர்கள் காணிக்கை செலுத்தும் காட்சி



ஆச்சரியப்படத்தக்க காரியங்களை ஆச்சரியப்படத் தக்கவர்களே செய்ய முடியும் என்பார்கள். ஒவ்வொரு நாளும் காலை பொழுது புலர்ந்ததிலிருந்து பொழுது சாயும் வரை கதை வேலை செய்யும் ஸ்தபதிகள் மட்டும் நூற்றிருபது பேர், சித்திர வேலை செய்யும் சைத்திரிகர்களோ எழுபது பேர், இவர்களுக்கு உதவி செய்ய நூற்றுக்கணக்கான உதவியாட்கள் — கோபுரத்துக்குச் சாரம் கட்டுவதற்கு மட்டும் சுமார் இருபத்தையாயிரம் சவுக்கு மரங்கள் — என்று இப்படிப் பெரிய அளவில் ஒரு மாபெரும் கோவில் திருப்பணி வேலை தமிழ் நாட்டில் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், ஏதோ இராஜ இராஜ சோழன் காலத்துக் கோவிற் பணியைப் பற்றிக் கேள்விப்படுவது போல் உங்களுக்கு ஒரு பிரமிப்பு வருகிறதா இல்லையா? உண்மையில் இந்தத் திருப்பணி அப்படி ஒரு பிரமிப்பை உங்களுக்கு ஏற்படுத்த வில்லையானால்தான் ஆச்சரியப்பட வேண்டும். சிற்ப வேலைக்கு ஏராளமான ஸ்தபதிகள், ஏராளமான சைத்ரிகர்கள், பணியாட்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து உழைக்கிற இந்த மாபெரும் திருப்பணி நடைபெறுகிற கோயிலும் பெரியது. நடக்கத் துணையாயிருக்கிற பக்த கோடிகளும் பெருந்தன்மையாளர்கள், நடக்கிற ஊரும் பெரியது.

மதுரை மீனுட்சி சுந்தரர் திருக் கோயில் பல வகையாலும் பெருமை பெற்றதென்பது இனி இந்தப் பிரம்மாண்டமான திருப்பணி முயற்சிகளாலும் நிரூபணமாகிறது. மதுரை மீனுட்சி சுந்தரர் திருக் கோயில் கோபுரங்களையும் சுற்று மதில்களையும் புதுமைப் பொலிவுற அமைப்பதற்கான இந்தத் திட்டம் 27–5–60 அன்று அற நிலையப் பாதுகாப்புத் துறை அமைச்சர் உயர்திரு பக்தவத்சலம் அவர்களால் முறைப்படி தொடங்கி வைக்கப்பெற்றுக் கடந்த இரண்டாண்டுகளாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இரண்டாண்டுக் காலமாக அமைதியாகவும் அடக்கமாகவும் ஆக்க வேலைக்குரிய ஒழுங்குடனும் இந்தத் திருப்பணி படிப்படியாக வளர்ந்து கொண்டிருக்கிறது. மதுரை நகரத்தின் இதயம் போல் நடு மையமாக அமைந்திருக்கும் இந்தப் பெரிய கோயிலின் திருப்பணிக்கு இருபது இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவிட வேண்டியிருக்கும் என்று திருப்பணிக் குழுவினர் தீர்மானம் செய்தனர். பன்னிரண்டு கோபுரங்களையும் இரண்டு விமானங்களையும் செப்பனிட வேண்டும். அவற்றில் ஐந்து கோபுரங்கள் மதுரைக்கு வெளியே பல மைல் தொலைவுக்கு அப்பாலிருந்து பார்த்தாலும் தெரியக் கூடிய அளவுக்குப் பெரியவை. பன்னிரண்டு கோபுரங்களைத் தவிர நுணுக்கமான வேலைப்பாடு செய்ய வேண்டிய இரண்டு விமானங்களும் இதில் அடங்கியுள்ளன. சந்நிதிச் சுற்றுக்களில் உள்ள திருவிளையாடற் கதையைச் சித்திரிக்கும் கதைச் சிற்பங்களும், சித்திரங்களும் பிறவும் செப்பனிடப்பெற இருக்கின்றன. பொற்ருமரைக் குளம், அதனைச் சுற்றியுள்ள பகுதிகள், திருமதில்கள், எழு கடல் ஆகியவற்றைத் திருத்தி யமைக்கும் எண்ணமும் திருப்பணிக் குழுவினருக்கு இருக்கிறது. திருப்



சந்நிதி பிராகாரத்தில் திருவிளையாடற் காட்சிகளின் கதை வண்ணப் பூச்சு வேலை நடக்கிறது.

பணியின் துணைக் காரியங்களாக மதுரை மீனாட்சி கோவில் நிர்வாகத்தைச் சேர்ந்த திருப்பரங்குன்றம் ஆலயத்தின் பிரதான கோபுரம், திருவாப்புடையார், பழைய சொக்கநாதர் கோவில்களின் பகுதிகள் ஆகிய வற்றையும் செப்பனிட விருக்கிறார்கள். ஆகவே இந்த மிகப் பெரிய திருப்பணி மதுரை மீனாட்சி சுந்தரர் திருக் கோயில் ஒன்றை மட்டும் சார்ந்து நிற்காமல் அழகிய மதுரையின் அருள் கொழிக்கும் ஆலயங்கள் பலவற்றையும் இடங்கள் சிலவற்றையும் புதுமைப் பொலிவுற அமைக்கப் போகிறது என்பதை அறிந்து பெருமைப்படுகிறோம்! மனமாரப் போற்றி மகிழ்கிறோம்.

கோவிலைக் காப்பவரான துவாரபாலகரைக் கலைஞர்கள் நானிலய உலகுக்குக் காத்துத்தருகிற பணி நடக்கிறது.




ஈடு இணையற்ற இந்தப் பெருமையை அடையும்போது நமக்கு ஒரு சந்தேகமும் ஏற்படுவ தியல்பு. இப்படி யெல்லாம் பெரிய காரியங்களை இழுத்துப் போட்டுக் கொண்டு முன்னின்று செயல்படுகிற தீரர் யார் என்பதுதான் அந்தச் சந்தேகம். சில ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டின் தேசியத் திருவிழாவைப் போல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழாவை நடத்தி இப்போது அந்தச் சங்கத்தில் ஒரு தனித் தமிழ்க் கல்லூரியும் நடைபெறச் செய்திருக்கிற தீரர் யாரோ அவர்தாம் இந்த அருட்பெரும் பணிக்கும் தலைவரா யிருக்கிறார். மதுரையின் பெயரைச்சொன்னால் தமிழவேள் பி. டி. இராஜன் அவர்கள் பெயரும் சேர்ந்தே நினைவு வருவது இயற்கை. பிறர் முன்னின்று செயல்படத் தயங்கும் பெரிய காரியங்களாகத் தேர்ந்தெடுத்துச் செயலாற்றும் பண்பு உயர் திரு இராஜன் அவர்களுக்கு உண்டு. நகரத்தின் இடையே இன்னொரு பெரிய அருள் நகரத்தைப் போலவே பெரிதா யிருக்கும் மீனாட்சிசுந்தரர் கோவிலை அழகு கொழிக்கும் திருப்பணியால் புதுக்கி அமைப்பது எவ்வளவு பெரிய காரியம் என்றெண்ணும் போது அப்படி எண்ணுகிறவர்களுக்கு நிச்சயமாக மலைப்புத் தான் ஏற்படுகிறது.

சாதாரணமாக ஒரு பெரிய கோபுரத்துக்குச் சாரம் கட்டி முடிப்பதற்கான சவுக்கு மரங்களுக்கும் கொச்சக் கயிறுகளுக்குமே பல ஆயிரம் ரூபாய்கள் செலவிட வேண்டியிருக்கிறது. தெற்குக் கோபுரத்தில் சாரம் கட்டுவதற்கு மட்டும் சுமார் இலட்சம் இடங்களில் கயிறுகளால் பிணைக்க நேர்ந்ததாம். திருப்பணி அலுவலுக்கான தனி அலுவலர் குமரன் நாயரும் அலுவல்களை மேற்பார்வை யிடும் பொறியியல் வல்லுநரும் சதா சுறுசுறுப்பாகக் காணப்படுகிறார்கள். மதுரைக் கோவிலிலும் பிற பொது இடங்களிலும் வைக்கப்பட்டுள்ள திருப்பணி உண்டியல்கள் அன்பர்கள் இடும் காணிக்கைகளாலும் மெய்யான பக்தி ஆர்வங்களாலும் நாள்தோறும் நிரம்பிக்கொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் உள்ள மற்ற ஆலய தேவஸ்தானங்களும், பெரிய நிறுவனங்களும், அருள் நோக்கமுள்ள செல்வந்தர்களும் மீனாட்சியின் திருப்பணிக்கு மன மகிழ்ச்சியோடு பொருள் உதவி செய்திருக்கிறார்கள். இதுவரை செய்யாத சிலர் இனிமேல் செய்வதற்கு இருக்கிறார்கள்; அல்லது செய்ய எண்ணிக் கொண்டிருப்பார்கள்.

இன்னொரு நல்ல செய்தி. மீனாட்சியின் அருளுக்கு முதல் பாத்திரமாகும் பெருமை கல்கிப் பத்திரிகைக்குக் கிடைத்து விட்டது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதாம் ஆண்டு மே மாதம் இருபத்தேழாம் நாள் மதுரையில் இந்தத் திருப்பணிக்கான ஆரம்ப விழா நிகழ்ந்தபோது கல்கி அதிபரின் காணிக்கையே முதல் நன்கொடையாகவும் முதல் பெருந்தொகையாகவும் அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பல பெருஞ் செல்வரின் நன்கொடைகளும் தங்கள் பெயரை அறிவிக்காமல் அருள் பணிக்கு உண்டியல் மூலம் செலுத்திவிடுகிறவர்களின் கொடைகளுமாக இந்தப் பணியைச் செய்ய விரும்பி முன் வந்தவர்களின் நிறைந்த மனத்தைப் போலவே நிறைவாகச் சேர்ந்து வருகிறது. திருப்பணி வேலைகளை ஒழுங்காகவும், திட்டமுடனும் குறித்த காலம் தவறி விடாமலும் செய்து

முடிப்பதைப் பற்றி ஆலோசிப்பதற்காகத் திருப்பணிக் குழுவினர் அவ்வப்போது சந்தித்து ஆலோசனை செய்கிறார்கள். மீனாட்சி சுந்தரர் திருக் கோயிலின் பழமையான வரலாற்றை ஆராய்ந்து வெளியிடுவதற்கும் திருப்பணிக் குழு நல்ல ஏற்பாடு களைத் தக்கவர் மூலம் செய்திருக்கிறது. 'திருப்பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் குழுவினர் நிபுணர்களையும், அநுபவம் வாய்ந்தவர்களையும் அணுகி, அவர்களுடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும், உதவிகளையும் பெற்று வருகின்றனர்'— என்பது திருப்பணிக் குழுவினரின் பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது. இந்தத் திருப்பணிக்கான மூலத்திட்டமும் மதிப்பீடும் நம்முடைய மாநிலத்தின் புகழ்பெற்ற பொறியியல் வல்லுநர்களால் தயாரிக்கப் பட்டிருப்பதைத் திருப்பணிக் குழுவின் அறிக்கைகள் கூறுகின்றன. தகுந்த ஆராய்ச்சி முடிவுகளையும் விவரங்களையும் நம் நாட்டுப் பழம் பொருள் ஆராய்ச்சிக் கழகத்தினர், பழம் பொருள் காட்சி சாலையினர், பழம் பொருள்களைப் பாதுகாப்பதில் நிபுணர்கள் ஆகியோரிடம் இத் திருப்பணிக் குழுவினர் அப்போதைக்கப்போது கேட்டு அறிந்து கொள்கின்றனர். கோபுரங்களுக்கும் சுதை வேலைகளுக்கும் சித்திரங்களுக்கும் பயன்படுத்தப் பெறுகிற வர்ணங்களைப் பற்றி நூர்க்கியிலுள்ள நம் நாட்டுத் தேசிய ஆராய்ச்சிக் கூடத்தினரின் அபிப்பிராயத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். சுதை வேலைகளை நன்றாகவும், செம்மையாகவும் செய்வதற்கேற்ற கைதேர்ந்த சிற்பிகள் மீனாட்சியின் அருளால் திருப்பணிக் குழுவினருக்குக் கிடைத்திருக்கிறார்கள். அது ஒரு பெரும் பாக்கியம். பழைய மரபு தெரிந்து புதிய காலத்துக்குப் பயன்படும் கலைத் திறனைத் தெய்விகத் தன்மையோடு ஆக்கியளிக்கும் கலைஞர்களைத் தேடி ஒன்று சேர்த்துத் தன் பணிக்கு அழைத்துக் கொண்டதும் மீனாட்சியன்னையின் திருவருள் திறமை என்றுதான் சொல்ல வேண்டும்.



சுதைவேலை, வண்ணப் பூச்சு எல்லாம் நிறைந்து புதுமைப் பொலிவோடு தோன்றும் தெற்குக் கோபுரம்

மீனாட்சி சுந்தரர் கோவிலின் இந்த மாபெரும் திருப்பணி நிறைவேறிய பின்பு மதுரை நகரமே புதுமையழகும் அருளழகும் பொலிந்து தோன்றும். நம்மை யெல்லாம் காத்து அருள் சுரக்கும் மீனாட்சித் தாயின் திருக் கோயிலையும் கம்பீரமான கோபுரங்களையும் பிற்காலத்தின் பல நூறு தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள் என்றும் புதியனவே போல் தோன்றும்படி கண்டு களிக்கத் திரு இராஜன் அவர்களும் திருப்பணிக் குழுவினரும் காத்தளிக்கிறார்கள். இந்த நல்ல காரியத்தில் இராஜன் அவர்களுடைய மனத்தை ஈடுபடுத்தி அவரை ஆட்கொண்டு அருள் சுரக்கும் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருவருளை எவ்வாறு அளவிட்டுரைக்க முடியும்?

எல்லாத் திருப்பணிகளும் நிறைவு பெற்றுக் கும்பாபிஷேகம் இந்த ஆண்டு ஜூன் 28-ந்தேதி வாக்கில் நேரலாம் என்று இப்போது திருப்பணிக் குழுவினர் அபிப்பிராயப் படுகின்றனர். கும்பாபிஷேகத்துக்குத் தமிழகத்தின் முக்கியமான எல்லாத் திருத்தலங்களிலிருந்தும் சுமார் 250 சிவாச்சாரியார்கள் அழைக்கப்பட வேண்டும் என்றும் திருப்பணிக் குழுவினர் கணக்கிட்டிருக்கிறார்கள். எழிலும் பெருமையும் மிக்க மதுரை நகரில் இந்த மாபெரும் கும்பாபிஷேகத் திருவிழா வரப்போகும் நாட்களைக் கற்பனை செய்து பார்க்கும்போதே நமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. தமிழ் நாடே வியந்து போற்றும் மாபெரும் தெய்விகத் திருப்பணியாக இந்தத் திருப்பணியும், மாபெரும் திருவிழாவாக இதன் கும்பாபிஷேகமும் அமையுமென்று நாம் தாராளமாக எதிர்பார்க்கலாம். தமிழகத்தின் மிகப் பெரிய நகரமாகிய தமிழ் மதுரையில் அருள் வளர்க்கும் அங்கயற்கண்ணம்மையின் இந்த ஆலயத் திருப்பணி நிறைவேறும் நன்னாளும் கும்பாபிஷேக வைபவம் கோலாகலமாக நடைபெறும் நன்னாளும் அருகில் அண்மையில் வரவேண்டுமென்று அந்த நல்ல நாளை எதிர் பார்த்துப் பக்தியோடும் ஆர்வத்தோடும் காத்திருப்போமாக! —ரா.பா.





பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414. மதராஸ்-5
தந்தி : 'EVERMANS' போன் : 85834

சேரக் கடைசி தேதி 7-3-1963 ... முதல் ஏலத் தேதி 9-3 1963

25 மாதங்கள்	மாதாந்திரச் சீட்டுகள் (2-வது சனிக்கிழமை ஏலங்கள்)	25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ. 10/-	ரூ. 250/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப் படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

டெல்லி கிளை ஆபீஸ்கள்: கான்ஸன் ஹவுஸ், 1/24, ஆஸப் அலி ரோடு, புது டில்லி-1 ★ பாலுஸேரி பில்டிங் 14-A/4, W. E. A. கரோல்பாக், புது டில்லி-5 ★ 198, முதல் மாடி, ஜோர்பாக் நர்ஸரி, புது டில்லி-3 பெங்களூர் கிளை ஆபீஸ்: 185, முதல் மாடி, ஆறுவது கிராஸ், காந்தி நகர், பெங்களூர்-9 ★ பம்பாய் கிளை ஆபீஸ்: "வீணா விஹார்" 17-A, ஸயான் மாதுங்கா எஸ்டேட் (கிங்ஸ் ஸர்க்கிள் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்) பம்பாய்-22 ★ கல்கத்தா கிளை ஆபீஸ்: 48, லேக் பிளேஸ், கல்கத்தா-29

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

மிக நம்பகமான அன்டிஸெப்டிக்



வெட்டுக்காயங்கள், பூச்
சிகளின் கடி, வாய்கழுவ
கொப்பளிக்க, வசிக்கும்
அறைகள், நிலம், துணி
மணிகள் முதலியவை
களை விஷக்கிருமிகளை
ஒழித்து சுத்தம் செய்ய,
முதலியவைகளுக்கு




அன்டோல்

55, 110, 450 மிலி
கொண்ட பாட்டில்களி
லும் 4.5 (1 காலன்) கொண்ட
டின்களிலும் கிடைக்கும்.

பெங்கால் இம்யூனிட்டியின் உற்பத்தி

நளினம் நிறைந்த நடனம்





இந்திய நடன வகைகளையும், தென்னாட்டுக்குச் சிறப்பான பரத நாட்டியத்தையும் அடிக்கடி கண்டு களிக்கும் சென்னை ரசிகர்களுக்கு ஒவ்வொரு சமயம் மேல்நாட்டு நடன வகைகளையும் கண்டு மகிழும் வாய்ப்புக்களும் கிடைக்கின்றன. அத்தகைய அரிய வாய்ப்பு சமீபத்தில் ராஜா அண்ணாமலை மன்றத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த ராபர்ட் ஜாஃப்ரியின் ''பாலே'' நடனக் குழுவினர் மூன்று நிகழ்ச்சிகள் நடத்தியபோது கிடைத்தது. ஒவ்வொரு நாட்டுக்கும் அதனதன் பண்புக்கும் கலை உணர்ச்சிக்கும் ஏற்றவாறு நடன வகைகள் அமைந்திருக்கின்றன. பாமர ரஞ்சகமான நாடோடி நடனங்களும் உள்ளன. அதேபோல் உயர்ந்த வகை என்று போற்றப்படும் சம்பிரதாய மரபு நடனங்களும் உள்ளன. இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தது ''பாலே'' நடனம். இதை நம்முடைய முறையில் சொல்ல வேண்டுமானால் நாட்டிய நாடகங்கள் எனலாம்.

இது முக்கியமாக, ஐரோப்பாவில்தான் பிறந்து, வளர்ந்து, உன்னத நிலையை அடைந்தது. சமீப காலத்தில்தான் அமெரிக்காவுக்குக் கடல் கடந்து சென்றது எனலாம். சுமார் 1450-ம் ஆண்டு வாக்கில் இத்தாலியில் பாலே நடனங்கள் ஆடப்பட்டு வந்தன. பிறகு பிரான்ஸ் தேசத்துக்குப் பரவி, அங்கே கலைக்குப் புகழ்பெற்ற அரசர் அவைகளிலும் பிரபுக்களது சபைகளிலும் இந்நடனம் உயர் அந்தஸ்தை அடைந்திருந்தது. ஆதியில் ஆண்கள் மட்டுமே இதில் பங்கு கொண்டனர். பின்னர் பெண்களும் கலந்து கொண்டு இந்நடனங்களுக்கு அமோகமான சிறப்பையும் அழகையும் ஊட்டினார்கள். பின்னணி இசை இருந்தாலும் நடிகர்களே சில சமயம் விருத்தங்கள் போன்ற சிறு பாடல்களையும் பாடுவதுண்டு. பிற்காலங்களில் இந்தப் பழக்கம் முற்றிலும் மறைந்து 'பாலே' முழுவதும் நடனமாகவேதான் ஆடப்பட்டு வருகிறது. பிரான்ஸ் நாட்டில் சிறப்பெய்தினாலும் ருஷ்ய தேசத்தில்தான் பாலே மகோன்னதத்தை அடைந்திருக்கிறது. மாரியா டாக்ளியோனி போன்ற உயர் நடிகைகளும், பாலே நாட்டியங்களுக்கென்றே இசையும் நடனங்களும் அமைத்த சாகித்ய, இசை மேதைகளும், இவ்வகை நடனத்துக்குப் பெரும் புகழை உண்டுபண்ணினார்கள். இயற்கையிலேயே உணர்ச்சி மிகுந்த ருஷ்யக் கலைஞர்கள் ''பாலே'' நடனத்தைத் தங்கள் கலைச் சிகரமாகவே ஆக்கிவிட்டனர்.

''பாலே''யில் ஒருவர் செய்யும் தனி நடனமும் உண்டு; இருவர் சேர்ந்து செய்யும் ஜோடி நடனமும் உண்டு; பலர் சேர்ந்து ஆடும் கூட்டு நடனமும் உண்டு. கதை அம்சமே இல்லாது நடனம் மட்டும் உள்ள நிகழ்ச்சிகளும், அதே போலக் கதை அம்சம் கொண்டு நாடக பாணியில் ஆடப்படும் நிகழ்ச்சிகளும் உண்டு. கதைகள் பெரும்பாலும் சிக்கல் இல்லாது சுலபமாகப் புரியும்படியாகவே இருக்கும். சிருங்கார ரசம் உள்ள கதைகளும் சோக ரசம் மிகுந்த கதைகளும் பாலேயில் கையாளப் படுகின்றன.

நம்முடைய நாட்டியங்களில் முத்திரைகளும் முக பாவங்களும் முக்கிய இடம் பெற்றிருக்கின்றன. அபிநயங்களும் பாவங்களும் எழிலுடன் அமைவதுடன், பூரண அர்த்த பாவத்துடன் வெளிப்படுகின்றன. ஆனால் மேல் நாட்டு நடனங்களில் அபிநயம் குறைவு; இல்லையென்றே சொல்லலாம். விரல் முத்திரைகளையும், ஹஸ்த விந்தியாசங்களையும் உபயோகப்படுத்துவதில்லை. இதை ஈடு செய்வதுபோல் அமைந்துள்ளவை இவ்வகை நடனங்களில் காணப்படும் கால்சாரிகள். அடவுகள் என்று இவற்றைச் சொல்லுவது பொருந்தாது. அதனால் கால்சாரிகள் என்றே விவரிக்க வேண்டும். பாய்தல், வளைதல், சுற்றுதல், இவை பாலே நடனங்களில் அதிகமாகத் தென்படும். ஒவ்வொன்றிலும் பலவித வேறுபாடுகளும், கோவைகளும், பின்னல்களும் உண்டு. துரித கால ஆட்டங்களிலும், தனியாடல்களிலும், கூட்டாடல்களிலும் கால் சாரிகளின் சிறப்பு அற்புதமாக இருக்கும். கட்டை விரல் நுனியில் நின்றே நடனமாடும் விரல் நடனமும், வேகமாகச் சுற்றும் சுழல் நடனமும் காற்றில் தவழ்வதுபோன்ற தோற்றத்தை உண்டுபண்ணும்.

பரத நாட்டியத்தில் அடவு முத்திரைகள், அபிநயங்கள் எப்படி நீண்ட காலம் மிகுந்த பிரயாசையுடன் பயில வேண்டுமோ அப்படித்தான் பாலே நடனங்களிலும் தலைசிறந்த ஆட்டக்காரர்கள் என்று புகழ் எய்திய நடன மணிகள் எல்லாருமே சிறு வயதிலிருந்தே இதைப் பயில ஆரம்பித்து ஏழு எட்டு ஆண்டு

களுக்குப் பின்னர்தான் தேர்ச்சி பெற்ற கலைஞர்களாக மேடையில் தோன்றுவார்கள்.

நடனத்துக்கேற்ற பின்னணிக் காட்சி ஜோடனையும், ஒளி அமைப்புகளும், பின்னணி இசையும் ஒன்றாகச் சேர்ந்து, நாட்டிய நாடகத்துக்குச் சிறப்பளிக்கும். பாலேயின் சிறப்பே இவ்விதக் கூட்டு முயற்சியினால் தோற்றுவிக்கப்படும் அழகு என்று சொல்ல வேண்டும். தனி நடிகை சிலை போல் நிற்பது, தாண்டவ நிருத்ய கரணம் முதலிய 'போஸ்கள்' நமது முறையில் சிறப்பாக அமைவது போல், மேல் நாட்டு பாலே நடனங்களில் ''கூட்டுத் தோற்றம்'' அற்புதமாக இருக்கும். முழு நாடகத்துக்குப் பதிலாக, முக்கியமான சில காட்சிகளை மட்டும் ''டாப்ளோ'' காட்சிகள் போல் சிற்சில சமயங்களில் நமது மேடைகளில் காணலாம். அவை போன்ற காட்சிகள் பாலே நடனங்களில் முத்தாய்ப்பு வைத்தது போல் காணப்படும். காண்பதற்கு மிக ரம்மியமாக இவை அமைந்திருக்கும்.

மிகுந்த கலை நுணுக்கங்களுடன் அமைந்த பாலே நடனங்களில் உயர் அம்சங்களைச் சென்னை வந்த அமெரிக்கக் குழுவினரின் நிகழ்ச்சிகளில் காண முடிந்தது. இக்குழுவின் தலைவர் ராபர்ட் ஜாக்ப்ரி முப்பத்தொரு வயது இளைஞர். கலைப்பித்து கொண்டவர். நடன வல்லுநர். தமது கோஷ்டியுடன் அமெரிக்காவில் பல ஊர்களுக்குச் சென்று 'டூரிங் சினிமா' நடத்துவது போல் தமது நடனங்களை நிகழ்த்தினாராம். இவருடைய குழுவில் கலையின் உயர்வைக் கண்ட பலர் ஆதரவு தந்து ஊக்கினராம். இதன் விளைவாக இவர் பதினான்கு நாட்டிய நாடகங்களைத் தயாரித்துள்ளார். சில சம்பிரதாய பாணியைப் பின்பற்றியவை. சில இவருடைய சொந்தக் கற்பனை. எல்லாமே கலைப் பண்புடனும் மிகுந்த எழிலுடனும் அமைந்துள்ளன.

இவருடைய குழுவினர் அளித்த நிகழ்ச்சிகளில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய உயர் அம்சங்கள் சில. தரக்குறைவு என்றோ, ரசக்குறைவு என்றோ, ஆபாசம் என்றோ வெறுக்கக் கூடிய அம்சம் எதுவுமே இதில் இல்லை. காட்சி அமைப்பு எளிமையாக இருந்ததுடன் பொருத்தமாகவும், கதையின் போக்குக்கு முற்றிலும் ஏற்றதாக அமைக்கப்பட்டிருந்தது. பின்னணி இசை முதல் தரம் என்றே சொல்ல வேண்டும்.

மேனாட்டு நடன முறையைப் பூரணமாகக் கண்டு ரசிக்கவும் சென்னையில் ரசிகர்களுக்குக் குறைவு இல்லை என்பது மூன்று நாட்கள் நடந்த நிகழ்ச்சிகளிலிருந்து நன்கு தெரிந்தது.

— எம். எஸ். சிவஸ்வாமி

ஆதிசங்கரரின் சரிதத்தைப் பக்திச் சுவை ததும்பச் சித்திரிக்கும் 'ஜய ஜய சங்கர' நூலின் வெளியீட்டு விழா பிப்ரவரி 13-ந் தேதி மயிலாப்பூர் சம்ஸ்கிருதக் கல்லூரியில் தர்மரக்ஷாமணி ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யரவர்கள் தலைமையில் அதிவிமரிசையாக நடந்தேறியது. 'கல்கி' பத்திரிகையில் தொடர் கட்டுரையாக வந்து பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் உள்ளங்கவர்ந்த 'ஜய ஜய சங்கர' சரிதத்தைக் 'கலைமகள்' காரியாலய அதிபர் ஸ்ரீ என். ராமரத்தினம் அழகிய புத்தகமாக வழங்கி யிருக்கிறார். இந்நூலைச் சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் வெளியிட்டு, நூலாசிரியர் ஸ்ரீ ரா. கணபதியின் திறமையையும் நூலின் சிறப்பையும் எடுத்துரைத்தார். நூல் முதல் பதிப்பின் சன்மானத் தொகையாகிய ரூ. 1500-ஐ நூலாசிரியர் வேதசம்ரக்ஷண நிதிக்கு அளித்தது அனைவரது உள்ளத்தையும் கவர்ந்தது. ராஜாஜி அவர்கள் இவ்விழாவுக்கு விஜயம்செய்து கல்கி அதிபர் ஸ்ரீ சதாசிவம் அவர்கள் வழங்கிய பொன்னாடையைக் கல்கி உதவி ஆசிரியர் ஸ்ரீ கணபதி அவர்களுக்குப் போர்த்தி ஆசீர்வதித்தார். விழாவில் கலைமகள் ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசியதுடன் இளைஞர் கணபதியின் திறமையை வியந்து போற்றினார். ஸ்ரீ டி. எம். பி. மகாதேவன் அவர்கள் பாராட்டுரை வழங்கினார்.









காலம் பறந்து செல்கிறது...

...நீங்கள் சிந்தனை செய்யுமுன் அவர்கள் கல்லூரியில் சேரத் தயாராயிருப்பார்கள்.



உங்கள் குழந்தைகளின் மேற்படிப்புச் செலவுக்கு நீங்கள் ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறீர்களா ?

திட்டமிட்டு சேமிக்க வேண்டும். உங்கள் வருமானத்தை செலவழிக்கும் முன்னரே அதிலிருந்து ஒரு பகுதியைச் சேமிப்புக்கென்றே தவறாமல் ஒதுக்கவேண்டும். இல்லாவிடில் சேமிப்பதற்கு எதுவும் மிஞ்சாமல் போக நேரிடும்.

தி பாங்க் ஆப் இந்தியா லிமிடெட்

. D. கன்ஸாரா, ஜெனரல் மானேஜர்

B/C/132 TAM



நளினி தன் பெற்றோரிடம் விவாதித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் அதே விஷயத்தைப் பற்றி இராமன்...
சந்திரனே சாட்சி
கதை: கௌசிகன்
11
சித்திரம்: விநு
மாமா தொழிற்சாலையைக் கவனித்துக் கொள்ளவே நீங்கள் இருக்கிறீர்கள். ஆகவே...
என்ன தம்பி, எங்காவது அயல் நாட்டு யாத்திரைக்குத் திட்டம் வகுத்திருக்கிறாயா?
அயல் நாடா? உன் நாட்டையே ஒழுங்காகப் பார்த்தவன்
உல்லாசமாகப் பல ஊர்களைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற என் நெடுநாளையக் கனவை நனவாக்கிக் கொள்ளப் போகிறேன்.
தம்பி, தம்பி! அதெல்லாம் வேணாம். உன்னை ஊர் சுத்த விரட்டிட்டு உன் சொத்தை அநுபவிப்பதாக நாலு பேர்..
எப்படித் தம்பி விட முடியும்? பொன்னே பொன்னு கண்ணே கண்ணுன்னு உன்னை வளர்த்தாரே.
இல்லையே மாமா நான்! அப்பா என்னை எங்கே தனியே போக விட்டார்?
அந்த நாலுபேர் எப்பவும்தான் ஏதும் பேசுவாங்க. அதுக்காக
தம்பி, உண்மையாச் சொல்றேன். உன் அன்புக்காகத்தான் நான் இங்கே இருக்கேன். இல்லாட்டி....
அது போகட்டும் மாமா. இன்னொரு முக்கியமான சேதி. நான் குடும்பஸ்தனாயிடறதுன்னு தீர்மானிச்சிட்டேன்!
பலே, பலே! இப்பச் சொன்னியே, இது நியாயம். உன்கிட்ட இது விஷயமா நானே பேசணும்னு இருக்கேன்.



பேசவே ஒன்றுமில்லே மாமா! பொண்ணு ரெடி! நீங்க முன்னே இருந்து கல்யாணத்தை நடத்தி வைக்க வேண்டியது தான்!
ஜெயராமன் கன்னியைப் பற்றிக் கூறிய போது தனபால் திகைத்தான்.
தம்பி, நம்ப குடும்பத்துக்கு ஏத்த இடமாயிருக்கு இல்லையான்னு பயம் எனக்கு.
ஒன்றும் பேசப்படாது! என் கொள்கைதான் உங்களுக்குத் தெரியுமே. முடிந்து போன விஷயமிது.
இதே சமயத்தில் கன்னியின் வீட்டில்...
அம்மா குழந்தே! இத்தனை செல்லமாக வளர்த்த நாங்கள் உனக்குக் கெடுதலையா செய்வோம்? இத்தனை நாட்கள் நீ கேட்ட எதையாவது நாங்கள் மறுத்திருக்கிறோமா? சொல். அதேபோல நீயும் மற்றவர்களுடைய உணர்ச்சிகளுக்கு மதிப்புத் தர வேண்டுமம்மா.
நான் அவருடையவளானதும் அவரை என்னுடையவராக்கிக் கொண்டுவிடுவேனப்பா. யாரைக் குறித்து நீயும் அம்மாவும் கலங்குகிறீர்களோ அந்தத் தனபாலுக்கு அந்த வீட்டில் இடமில்லாமல் செய்து விடுவேன். என்னுடைய இந்த ஒரு வேண்டுகோளுக்கு மட்டும் சரி என்று சொல்லுங்கள் அப்பா.
அடம் பிடித்து அழும் குழந்தையின் அழுகையை நிறுத்த வேண்டிய தாயின் நிலையில் இப்போது நானிருக்கிறேன் கன்னி. ம்... விதியை மாற்ற யாரால் முடியும்? உன் கண்ணீர் உலர்ந்தால் சரியம்மா.
நாளைக் காலையில் அவரே இங்கு வருவாரப்பா.
அப்பா! அதோ அவரும் அவர் மாமாவும் வருகிறார்கள்.
வாருங்கள் மிஸ்டர் ஜெயராமன். வணக்கம்.
வணக்கம் சார்! இவர்தான் என் மாமா.



மிஸ்டர் ராஜு, உங்கள் பெண் நளினியை என் மருமான் ஜெயராமனுக்கு மணம் பேசலாம் என்று....
மிஸ்டர் ஜெயராமன், நளினியின் சந்தோஷம்தான் எங்கள் சந்தோஷம். ஆகவே அவள் விருப்பத்துக்கு மாறாக நடக்க நான் விரும்பவில்லை.
நான் ரொம்ப அதிர்ஷ்டம் செய்தவன் சார்!
மிஸ்டர் ஜெயராமன், ஒரு விஷயம். என் வாழ்க்கை நிலையையும், அந்தஸ்தையும் அறிந்துதான் என் மகளை மணக்க முன் வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். இந்த நிலை மாறலாம்...
உங்கள் மகள் மனம் கோணாமல் அவளை வாழ வைப்பேன் சார்.
மிஸ்டர் ராஜு பெரிய இடத்து சம்பந்தத்துக்கு ஏற்ற படி திருமண ஏற்பாடுகள் விமரிசையாக இருக்கணும்.
அதெல்லாம் ஒன்றுமில்லை சார்.
நீங்கள் அப்படிச் சொல்லி இருக்கக் கூடாது மாமா.
அவன் என்னை மதித்தே பேசவில்லை. அதைக் கவனித்தாயா நீ?
உண்மை தான். எல்லா விஷயத்தையும் என்னிடமே தான் பேசினார்.
உனக்காகவே நான் அங்கு வந்தேன். அந்த ராஜுவை எனக்கு ரொம்ப நாளாகத் தெரியும்.
எதையும் மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள் மாமா. நளினி என்னுடையவளான பிறகு எல்லாம் சரியாகிவிடும்.
உன்னுடையவளான பிறகு தானே? அதையும் பார்க்கலாம்.
தொடரும்

உணவருந்தி முடிந்ததும் கிஷன்தாஸைத் தனிமையில் அழைத்து சேட்ஜி ராஜஹம்ஸியைப் பற்றி விசாரித்தார். ''ராஜஹம்ஸியின் தாய் தந்தையர் உயிருடன் இல்லை. ஒரு சகோதரன் உண்டு. அவன் சிங்கப்பூரில் பெருத்த வியாபாரம் செய்து வருகிறான். ஆனால் ராஜஹம்ஸி என்னுடன் தான் இருக்கிறாள்'' என்று கிஷன்தாஸ் சொன்னார். அதோடு, ''ராஜஹம்ஸிக்கு நன்றாக நடனம் ஆடத் தெரியும். பாடத் தெரியும். திரைப் படங்களில் நடிக்கக்கூட ஆசையுண்டு. ஆனால் எனக்கும் என் மனைவிக்கும் இது பிடிக்காததனால் ராஜஹம்ஸியைத் திரைப் படங்களில் இதுவரை நடிக்க விடவில்லை'' என்பதையும் கூறினார்.

சேட்ஜி உடனே கிஷன்தாஸிடம், ''ராஜஹம்ஸியை எனக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிடு. நான் அவளைச் சுகமாக வைத்துக் கொள்கிறேன். இதே பம்பாயில் கூடிய சீக்கிரம் எனக்காக ஒரு பங்களாவும் விலைக்கு வாங்கிவிடு. ராஜஹம்ஸி அதிலேயே இருக்கட்டும். நானும் வருஷத்தில் பெரும் பாலான நாட்களைப் பம்பாயிலேயே கழிப்பேன். இங்கு தொழிலைப் பெருக்க விரும்புவதும் ஒரு காரணம்!'' என்றார்.

சேட்ஜி ஆனந்தி பாயியைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. கிஷன்தாஸுக்குத் தமது முதலாளி தாரமிழந்தவர் என்பது தெரியும்? எனவே சேட்ஜியின் விருப்பத்தை மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். ராஜஹம்ஸியும் தனது சம்மதத்தைத் தெரிவித்தாள். சேட்டுக்கு வயது அதிகமாகி விட்டதே என்று அவள் துளிக்கூட ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. ஆர்ய சமாஜ முறையில் அவர்கள் திருமணம் முடிந்தது. அதைத் தொடர்ந்து ஒரு பெரும் பங்களா விலைக்கு வாங்கப்பட்டது. ராஜஹம்ஸி அதிலேயே வாசம் புரியலானாள்.

சில நாட்களுக்குப்பின் சேட் திரிவிக்ரம்தாஸ் தமது கல்கத்தா கிளைக் காரியாலயத்தைப் பார்வையிடச் சென்றார். அங்கு மானேஜராகப் பணியாற்றி வந்த பரிதோஷ் சௌத்ரி மிகவும் கெட்டிக்காரர். எல்லா விதத்திலும் தகுதி வாய்ந்தவர். அலிப்பூரில் அவர் ஆங்கிலேயர்களது முறையில் ஆடம்பரத்தோடு வசித்து வந்தார். ஒரு நாள் அவர் தமது எசமானரைத் தமது வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தார். பரிதோஷ் சௌத்ரியின் வீட்டில் பரிதோஷின் மனைவியும் தங்கையும் சேட்ஜிக்கு அறிமுகமானார்கள்.

பரிதோஷின் தங்கை பலாகா சௌத்ரியைப் பார்த்ததும் சேட்ஜி பிரமிப்பிலும் வியப்பிலும் மூழ்கினார். அவள் ராஜஹம்ஸியைப் போல் அழகில்லை என்பது உண்மைதான். ஆனால் அவள் ஆடை உடுத்தும் முறை மிகவும் பகட்டா யிருந்தது. நாகரிக உலகின் நடை உடை பாவனைகளை அவள் நன்கு உணர்ந்திருந்தாள். நிஜமான ஆங்கிலேயப் பெண்மணியைப் போலவே அவள் படபடவென்று ஆங்கிலத்தில் பேசினாள். அவள் பேசும் முறை மிகவும் உயர்த்தியாகவும், இனிமையாகவும் இருந்தது. சேட்ஜி அவளிடம் தம் மனத்தைப் பறி கொடுத்தவர் தம்மை மறந்தார்.

'பலாகா எம். ஏ. பரீட்சை பாஸ் செய்திருக்கிறாள். நடனத்திலும் பாட்டிலும் அவளுக்கு இணையான பெண்கள் இந்தக் கல்கத்தா நகரத்திலேயே கிடையாது. திரைப் படக்காரர்கள் அவளை எப்படியாவது படத்தில் நடிக்க வைத்துவிட வேண்டுமென்று சுற்றினார்கள். அவள் நடிகையாவதைத் தாம் விரும்பாததே இதுவரை அவள் நட்சத்திர உலகில் மின்னாததற்குக் காரணம்' என்று பரிதோஷ் சௌத்ரி சொன்னார்.

இதைக் கேட்டபின் சேட் திரிவிக்ரம்தாஸினால் தம்மை அடக்கிக் கொள்ள முடியவில்லை. ''மிஸ் பலாகா! நான் உன்னை மணக்க விரும்புகிறேன். உனக்கு ஏதும் ஆட்சேபனை இல்லையே!'' என்று கேட்டார்.

பலாகா புன்னகை புரிந்து கூறினாள்: ''எனக்கு ஏதும் ஆட்சேபனை கிடையாது. உண்மையைக் கேட்டால் எனக்கு உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியே. ஆனால் தில்லிச் சூடு எனக்கு ஒத்துக் கொள்ளாது. அதோடு உங்களுக்குப் பிடித்த உணவான ரொட்டி, பருப்பு, கீரை, தயிர் வடை ஆகியவற்றையும் என்னால் ஜீரணிக்க முடியாது!''

இதைக் கேட்ட சேட்ஜி, ''உன்னை யார் தில்லிக்கு வரவேண்டுமென்று சொன்னார்கள்? நான் இந்த அலிப்பூரிலேயே ஒரு மாளிகை வாங்கிவிடுகிறேன். நீ உன் அண்ணாவுக்கு அருகிலேயே இரு. வருஷத்தில் எட்டு ஒன்பது மாதங்கள் நான் இங்கேயே இருப்பேன். கல்கத்தாவிலும் நான் என் தொழிலைப் பெருக்க விரும்புகிறேன். நீ ரொட்டியும் பயறும் சாப்பிட வேண்டியதில்லை. உனக்குப் பிடித்த மீன் உணவையே சாப்பிடு. எனக்குக் கூட மீன் சாப்பிடுவதில் தடையொன்றும் இல்லை. ஆனால் அதன் வாசனைதான் எனக்குப் பிடிப்பதில்லை.' என்றார்.

''நான் ரோஜா அத்தர் போட்டுக் கழுவி மீன் கறி சமைத்துப் போடுகிறேன். உங்களுக்கு ரோஜாப்பூ குல்கந்து சாப்பிடுவது போலவே இருக்கும்!'' என்றாள் பலாகா.

ஒருவன் தாய்தந்தையரைக் கொலை செய்துவிட்டான். கருணை மனுவில், ''நான் தாய்தந்தையற்ற அநாதை



யாகி'விட்டேன். கோர்ட்டார் கருணை செய்து என்னை விடுவிக்க வேண்டும்'' என்று கோரினானும்.

நகரசபைத் தேர்தலுக்காகக் கள் வேண்டுவோர் கழகத்தின் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிரசங்கி ஒருவர், ''உங்களுக்குக் கள் வேண்டுமா, வேண்டாமா சொல்லுங்கள்!'' என்று பேச்சுக்கிடையே கேட்டார்.



''நீங்கள் கள் குடிக்க அழைக்கிறீர்களா, அல்லது விசாரணை நடத்துகிறீர்களா? அதை முதலில் சொல்லுங்கள். அப்புறம் நாங்கள் பதில் சொல்லுகிறோம்!''—இப்படிக் கேட்டவர் இருட்டுச் சாராயம் காய்ச்சுபவர்.

சேட்ஜி தாரமிழந்தவர் என்று தனது அண்ணன் மூலம் கேள்விப்பட்டிருந்ததால் பலாகா உடனே திருமணத்துக்குச் சம்மதித்துவிட்டாள். இருபது நாட்களுக்கெல்லாம் அவர்களுக்குப் பதிவுத் திருமணம் நடந்தேறியது.

திரிவிக்ரம்தாஸ் முறை வைத்துக்கொண்டு தில்லி, பம்பாய், கல்கத்தா என்று போய் வரலானார். அதனால் மூன்றாகப் பெருக்கெடுத்தோடிய தாம்பத்திய வாழ்வில் அவருக்கு எவ்விதமான இடையூறும் ஏற்படவில்லை. ஆனந்தமாக வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்த போதுதான் திடுதிப்பென்று ஒரு நாள் ஜால்பிகார்கான் வந்து இப்படி ஒரு கல்லைத் தூக்கிப் போட்டார். அது சேட்ஜியை நிலைகுலைய வைத்து விட்டது.

ஃ ஃ ஃ

வழக்கறிஞர் கஜான் சந்த் பி.ஏ. எல்.எல்.பி. சேட் திரிவிக்ரம்தாஸின் நண்பர். சட்ட ஆலோசகரும் கூட. அன்றைக்கே மாலை நேரத்தில் சேட்ஜி கஜான் சந்தின் வீட்டை அடைந்தார். தமக்கு ஏற்பட்டுள்ள சோதனைக் கதையைத் தம் நண்பருக்கு விவரமாகச் சொன்னார்.

''சேட்ஜி! நீங்கள் முட்டாள்தனமாகக் குழந்தைத்தனமான காரியம் செய்துவிட்டீர்களே! என்னை நம்பிக்கைக்குப் பாத்திரமாகக் கருதுகிறீர்கள். எதெதற்கெல்லாமோ என் ஆலோசனையைக் கேட்கிறீர்கள். ஆனால் பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் சென்று இரண்டு கல்யாணம் செய்து கொண்டதைப் பற்றி என்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே! இதுதான் வருத்தமாக இருக்கிறது!'' என்றார் கஜான் சந்த்.

சேட்ஜி கைகூப்பி, ''மன்னியுங்கள், கஜான் சந்த்ஜி. வயதான காலத்தில் ஒரு மனைவி இருக்கும்போது மேலும் இரண்டு மனைவிகளைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று எனக்கு ஆசை தோன்றியதே, இந்த வெட்கம் காரணமாகத்தான் இதைத் தங்களுக்குக் கூடச் சொல்லாமல் மறைத்தேன். இப்பொழுது வெள்ளம் தலைக்கு மேல் போகத் தொடங்கவே, வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன். நீங்கள்தான் எப்படியாவது இந்த இக்கட்டிலிருந்து என்னை விடுவித்துக்கொள்ள எனக்கு ஒரு வழி கூற வேண்டும்!'' என்றார்.

சிறிது நேரம் யோசித்தபின் கஜான் சந்த் கூறினார்: ''என்னைக் கேட்டால் ஆனந்திபாயிடம் இது பற்றி எதுவும் கூறத் தேவையில்லை. தங்கள் செய்கையை அறிந்தால் அவள் மிகவும் வருத்தப்படுவாள். அழுது புலம்பத் தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மற்ற இரு மனைவிகளுக்கும் விஷயத்தை நீங்கள் தெளிவாகக் கூறிவிடுங்கள். அவர்கள் இருவரும் நவநாகரிக மங்கைகள். தங்களுக்கு இரண்டு கல்யாணங்கள் ஆகியிருக்கின்றன என்று கேள்விப்பட்டால் அவர்கள் கோபத்தில் கொதித்தெழுவார்கள். இனி உங்கள் முகத்தில் விழிப்பதில்லை என்று சபதம் செய்தாலும் செய்வார்கள். தங்கள் காரியம் இதன் மூலம் ஒரு விதமாக நிறைவேறிவிடும். நஷ்டஈடாகப் பெருந் தொகை கொடுத்து இரண்டு மானேஜர்களுக்கும் கொஞ்சம் வாய்க்கரிசி போட்டால், நீங்கள் இந்தத் தொல்லைகளிலிருந்து தப்பலாம். இதற்காக நான்கைந்து லட்சம் செலவாகலாம். அதொன்றும் தங்களுக்குப் பெரிய காரியம் இல்லை!''

ஆனால் திரிவிக்ரம்தாஸுக்குக் கஜான் சந்தரின் இந்த ஆலோசனை சரியாகப் படவில்லை. ''மிஸ்டர் கஜான்சந்த்! நீங்கள் என் கருத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. நான் என் தொழிலை விரிவுபடுத்த முயன்றுகொண்டிருக்கிறேன். அதற்குப் பிரசித்தமான புள்ளிகளோடு தொடர்பைப் பெருக்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும். நான் மந்திரிமார்களையும், உயர்ந்த அதிகாரிகளையும் என் வீட்டுக்கு அழைத்தால், அவர்களை வரவேற்று உபசரிக்கும் அளவுக்கு ஆற்றல் வாய்ந்த பெண்மணிகள் என் வீட்டில் யாருமே இல்லை. ஆனந்திபாயி இருக்கிறாளே, அவள் நாணம் காரணமாக அன்னிய ஆடவர்களுடன் பேசுவதே இல்லை. ராஜஹம்ஸியும் பலாகாவும் இந்தக் காரியங்களுக்கு மிகவும் பயன்படக் கூடியவர்கள். யாரையாவது விட வேண்டுமென்றால், நான் முதலில் ஆனந்திபாயியைத்தான் தள்ளி வைக்க விரும்புவேன். அப்படிச் செய்தால் என் இதயம் உடைந்துவிடும். லட்சக் கணக்கில் சொத்துக்கள் என் கையை விட்டுப் போய்விடும். நான் அதைப் பொறுத்துக் கொள்ளக் கூடத் தயார். ராஜஹம்ஸி,—பலாகா இவர்களில் யாரை வைத்துக் கொள்வது? இது மிகச் சிக்கலுக்குரிய பிரச்னை. ஒரு முடிவுக்கு வருவது என்பது இலேசான காரியம் இல்லை. என் உள்ளத்தில் உள்ளதைக் கேட்டால் கல்கத்தாவில் உள்ள பலாகாதான் எனக்கு எல்லோரைக் காட்டிலும் அதிகமாகப் பிடித்தவள். அவளை என்னோடு வைத்துக் கொள்ள முடியாது என்ற நிலை ஒருவேளை ஏற்பட்டால், பம்பாயிலுள்ள ராஜஹம்ஸியைத்தான் அடுத்தபடியாகத் தேர்ந்தெடுப்பேன். பணத்தைப் பற்றித் தாங்கள் கவலைப்

படாதீர்கள். பத்துப் பதினைந்து லட்சம் கூடச் செலவு செய்ய நான் தயாராயிருக்கிறேன்'' என்றார் சேட் திரிவிக்ரம்தாஸ்.

''அதிருக்கட்டும். எதற்கும் ஒரு காரியம் செய்யுங்கள். நீங்கள் தாமதப்படுத்தாமல் மூன்று மனைவிகளையும் சந்தித்துத் தெளிவாகப் பேசுங்கள். அவர்களது மனோபாவத்தைத் தெரிந்து கொண்ட பின் செய்ய வேண்டியதைச் செய்வோம்!'' என்றார் கஜான்சந்த்.

ஃ ஃ ஃ

மறுநாள் சேட்ஜி ஆகாய விமானத்தில் பம்பாய் சென்றார். விமான கூடத்திலிருந்து இறங்கியதும் முதற் காரியமாகத் தமது மாளிகைக்குச் சென்றார். ராஜஹம்ஸி 'டிராயிங் ரூமி'ல் அமர்ந்து ஓர் அழகிய நவநாகரிக உடை அணிந்த வாலிபனுடன் பேசிக் கொண்டிருந்தாள். சேட்ஜியைப் பார்த்ததும் அவள் துணுக்குற்று, ''அட, சேட்ஜியா! வரும் தகவலை முன்கூட்டியே தெரிவிக்கக் காணோமே! திடுதிப்பென்று வந்திருக்கிறீர்களே! என்ன விசேஷம்? உங்களுக்கு இவரைத் தெரிந்திருக்க நியாயமில்லை. இவர் பெயர் மிஸ்டர் ஜுமக்லால் மட்காணி. எனக்குத் தூரத்து உறவினர். அத்தை பிள்ளையாக வேண்டும். கணக்கு வழக்கில் கெட்டிக்காரர். இங்கு உள்ள அக்கௌண்டெண்டுக்கு வயதாகி விட்டது. அவருக்குப் பென்ஷன் கொடுத்துவிட்டு, அந்தப் பதவியை ஜுமக்லாலுக்குக் கொடுத்து விடலாம் என்பது என் அபிப்பிராயம்!'' என்றாள்.

''இதைப் பற்றி யோசிக்கிறேன் நான். முதலில் உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் தனிமையில் பேச வேண்டியிருக்கிறது'' என்றார் திரிவிக்ரம் தாஸ்.

ஜுமக்லால் விடைபெற்றுச் சென்றதும், பயந்த வண்ணம் சேட் திரிவிக்ரம்தாஸ் தமது மூன்று கல்யாணங்களைப் பற்றியும் ராஜஹம்ஸிக்குச் சொன்னார். இதைக் கேட்டு ராஜஹம்ஸி முற்றிலும் எதிர்பாராத ஒரு முக மாற்றத்தைக் கொண்டாள். அக மாற்றமும் கொண்டாள். பிறகு உரக்கச் சிரித்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்: ''சபாஷ், சேட்ஜி! உங்களுக்கு என்ன குறைச்சல்? நீங்கள் இன்னும் இரண்டு கல்யாணங்கள் செய்து கொண்டால்கூட எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் அதையெல்லாம் பொருட்படுத்த மாட்டேன். நீங்கள் கவலைப்படாதீர்கள். மற்றவர்களுக்கு இவ்விஷயம் தெரியாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அது போதும். அதோடு இன்னொரு விஷயமும் நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த மாளிகையை விரைவில் என் பெயருக்கு எழுதி வைத்துவிடுங்கள். நகரசபைக்காரர்கள் ரொம்பத் தொந்தரவு கொடுக்கிறார்கள்!'' என்றாள்.

''அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிடுகிறேன். இன்று நான் இங்கு தங்க முடியாது. ஒரு முக்கியமான அலுவலாக நான் கல்கத்தாவுக்குப் போக வேண்டியிருக்கிறது'' என்றார் சேட்ஜி.



''உன்னைப் போன்ற முட்டாளை நான் பார்த்த தில்லை உலகத்தில்!''

''டேய் முட்டாள். உன்னை மறந்து பேசாதேடா!''

கல்கத்தாவுக்குப் போய்ச் சேர்ந்த சேட்ஜி நேரே அலிப்பூரில் உள்ள தமது பங்களாவுக்குச் சென்றார். அங்கேதான் பலாகா வசித்து வந்தாள். டிராயிங் ரூமில் ஓர் அழகிய வாலிபன் பியானோ வாசித்துக் கொண்டிருந்தான். பலாகா நடனமாடிக் கொண்டிருந்தாள். திரிவிக்ரம்தாஸைப் பார்த்ததும், ''அட, முன்னறிவிப்பு ஏதுமின்றியே நீங்கள் திடுதிப்பென்று வந்திருக்கிறீர்களே! இவரை உங்களுக்குத் தெரியாது? இவர்தான் லோடன் குமார் பட்டர். எனக்குத் தூரத்து மாமா பிள்ளையாக வேண்டும். நாட்டியக் கலையில் வல்லுநர். இப்பொழுதெல்லாம் இவரிடம் நான் ஒரு நடனம் கற்றுக் கொண்டிருக்கிறேன். என் நடனத்தைச் சிறிது பார்க்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

''இப்பொழுது எனக்கு மூச்சு விட நேரமில்லை, பலாகா! உன்னிடம் ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றிப் பேச வந்திருக்கிறேன்!'' என்றார் சேட் திரிவிக்கிரம்தாஸ்.

லோட்டன் குமார் போன பின் சேட் திரிவிக்ரம்தாஸ், தாம் மூன்று கல்யாணங்கள் செய்து கொண்டுள்ளதைப் பற்றிப் பலாகாவிடம் பிரஸ்தாபித்தார். பலாகா ஒரு விரலைக் கன்னத்தில் பதித்து வியப்புக் குறி தோன்ற, ''அடி அம்மாடியோவ்! நிஜமாகவா சேட்ஜி! அப்படியானால் நீங்கள் பெரும் பொல்லாத காதலர்தான்!...ஆமாம், உங்கள் முகத்தில் இவ்வளவு வாட்டக் குறி தோன்றுவானேன்? உங்களுக்கு மூன்று மனைவிமார்கள் இருந்தால் அதில் தவறு என்ன? நீங்கள் துளிக்கூடக் கவலைப்படாதீர்கள். நான் பொறாமை பிடித்த பெண்ணல்ல. ஆனால் இதை எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு திரியாதீர்கள். ரகசியமாகவே வைத்துக்கொள்ளுங்கள்.. ஆமாம், எனக்கும் வெகு நாட்களாக உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்பது. ஒரு பெரிய கார் இல்லாமல் எனக்குக் கை ஒடிந்தாற் போலிருக்கிறது! கல்யாணத்தின்போது ஒரு சின்ன ஆஸ்டின் கார் வாங்கிக் கொடுத்தீர்களே, அது அடிக்கடி 'மக்கர்' செய்கிறது. நீங்கள் இருபதினாயிரத்துக்கு ஒரு செக் எழுதிக் கொடுங்கள். அதற்குக் குறைவாக நல்ல கார் கிடைக்காது!'' என்றாள்.

''சரி, அதற்கு ஏற்பாடு செய்து விடுகிறேன். நான் போய் வருகிறேன். எனக்கு அவசர காரியமாகத் தில்லி போக வேண்டியிருக்கிறது!'' என்று கூறி விடைபெற்றார் சேட் திரிவிக்ரம்தாஸ்.

தில்லியை அடைந்ததும் சேட் திரிவிக்ரம்தாஸ் தமது வக்கீல் கஜான்சந்த் வீட்டுக்குப் போனார். அவரிடம் எல்லா விவரங்களையும் கூறினார். பிறகு தம்மோடு அவரையும் தம் வீட்டுக்கு அழைத்து வந்தார். டிராயிங் ரூமில் அவரை உட்கார வைத்து விட்டுச் சிறிது நேரத்தில் வருவதாகவும் சற்றுப் பொறுத்திருக்குமாறும் கூறிவிட்டு உள்ளே சென்றார்.

பெண்கள் அறையில் உட்கார்ந்திருந்த ஆனந்திபாயியைக் கூப்பிட்டுத் தமது படுக்கை அறைக்கு வருமாறு கூறினார். அவரைக் கண்டதும், ஆனந்திபாயி, ''என்ன, மூன்று நாட்களாக உங்களைக் கண்ணில் காணோம்? முகம் வாடியிருக்கிறதே ! என்ன விசேஷம் ? அரசாங்கத்துத் தொல்லைகள் ஏதாவது அதிகமாகி விட்டனவா?'' என்று கேட்டாள்.

சேட் திரிவிக்ரம்தாஸ் தலை குனிந்தவண்ணம் எல்லா விவரங்களையும் கூறினார். ஆனந்திபாயி சிறிது நேரம் திகைத்துத் திக்பிரமை பிடித்தவள் போல் நின்றாள். பிறகு இடுப்பில் இரண்டு கைகளையும் ஊன்றிக் கொண்டு, கண்களை உருட்டி விழித்து, ''என்ன சொன்னீர்கள்?'' என்று கேட்டாள்.

சேட்ஜி தடுமாறினார். பிறகு, ''அமைதியாக இரு! எல்லாம் சரியாகி விடும். கவலைப் படாதே!'' என்று ஆறுதல் சொன்னார்.

ஆனால் ஆனந்தி ஒரேயடியாகக் குதிக்கத் தொடங்கி விட்டாள். அவள் வாயிலிருந்து எள்ளி நகையாடும் ஏளனச் சொற்கள் நீர் வீழ்ச்சியெனக் கொட்டலாயின. அவள் பேச்சு கசப்பாகவும் உள்ளத்தைத் துளைப்பதாகவும் இருந்தது. அவள் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் பெரிய மனிதர்கள் கேட்கலாயக்கற்றவை. பெரிய இடத்துப் பெண்கள் சொல்லத் தகுதியற்றவை. ஆயினும் ஆனந்திபாயி இந்த நேரத்துக்குப் பித்தம் தலைக்கேறியவளாகி விட்டாள். நிமிஷத்துக்கு நிமிஷம் அவள் வேகம் அதிகரிப்பதைக் கண்ட சேட்ஜி, ''ஆனந்தி! என்னை மன்னித்து விடு. எல்லாம் சரியாகி விடும்!'' என்று கெஞ்சி வேண்டினார்; கைகூப்பிக் கெஞ்சினார்.

அவர் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை ஆனந்திபாயி. ''பேசாதீர்கள் மானங் கெட்டுப் போய்! இப்படியா ஒரு புருஷன் தாழ்ந்துபோவான்? அப்படி என்ன ஆசையோ தெரியவில்லையே !'' என்று குமுறினவள் அடிக்காத தோஷம்தான்; கதறித் தீர்த்து விட்டாள். தலையைப் பிய்த்துக் கொண்டாள்; முகத்தைப் பிறாண்டிக் கொண்டாள். வந்த ஆத்திரத்தில் கைவளையல்களில் கனமானவற்றைக் கழற்றிச் சேட்ஜியின் மீதே விட்டெறிந்தாள். சேட்ஜியின் நெற்றியில் பட்டுப் பல காயங்களை உண்டாகி ரத்தம் வரத் தொடங்கி விட்டது. அவரும் பயந்து போய் அப்படியே அலறிக் கொண்டு கீழே சாய்ந்தார் மூர்ச்சையுற்று. அந்த நேரத்துக்குக் காளிதேவியாக மாறியிருந்த ஆனந்திபாயி எதையும் கவனிக்கவில்லை. சட்டென்று பூசையறைக்குச் சென்று பொருமலானாள்; பொங்கிப் பொங்கி அழலானாள். வீடு முழுவதும் ஒரே களேபரமாகி விட்டது. வீட்டில் உள்ளவர்கள் ஆனந்தபாயியின் கோபத்தைத் தணித்துச் சமாதானப்படுத்த முயன்றார்கள். வழக்கறிஞர் கஜான்சந்த் சேட்ஜிக்குச் சிகிச்சை அளிக்க டாக்டரை வரவழைத்தார்.

ஃ ஃ ஃ


ஏழு நாட்களாயின சேட்ஜிக்கு உடல் நலம் பெற. அன்று அவர் இரண்டாவது மாடி வராந்தாவில் அமர்ந்து ஹுக்கா குடித்துக் கொண்டிருந்தார். அவர் தலையிலும் நெற்றியிலும் அப்பொழுதும் கட்டுப் போட்டிருந்தது. போட்ட கட்டுக்கள் அவிழ்க்கப்படவில்லை. முகத்தில் இங்கும் அங்கும் ஒட்டுப் பிளாஸ்திரி போட்டிருந்தார்கள்.

கஜான் சந்த் அவரைப் பார்க்க வந்தார் அப்பொழுது. ''சொல்லுங்கள், சேட்ஜி! இப்பொழுது எப்படி இருக்கிறீர்கள்?'' என்று விசாரித்தார்.

சேட்ஜி கூறினார்: ''இப்பொழுது எவ்வளவோ தேவலை. கஜான் சந்த்ஜி, ஒரு விஷயம் உங்களிடம் சொல்ல விரும்புகிறேன்; நான் ராஜஹம்ஸியுடனோ பலாகாவுடனோ தொடர்பு வைத்துக் கொள்ள விரும்பவில்லை. நீங்கள் உடனே பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் போய் அவர்களைக் கத்திரிப்பதற்கான ஏற்பாடு செய்யுங்கள். எத்தனை ரூபாய் செலவானாலும் பரவாயில்லை. ராஜஹம்ஸிக்கும் பலாகாவுக்கும்என்னிடம் பிரியம் இல்லை. என்னுடைய பணத்தினிடம் தான் பிரியமாயிருக்கிறார்கள். ஆனால் ஆனந்திபாயி என்னை விரும்புகிறாள்...... அதோ வாசனை வருகிறது, பாருங்கள்! பக்கத்து அறையில் தன் கையினால் குமட்டியடுப்பில் எனக்கென்று துவரம் பருப்புக் கிச்சடி தயாரித்துக் கொண்டிருக்கிறாள். இதோ பார்த்தீர்களா, எனக்காக அவள் தயாரித்த கம்பளிச் சட்டை!''

சேட்ஜியின் பேச்சைக் கேட்ட கஜான்சந்த், ''சந்தோஷம் சேட்ஜி! கவலைப்படாதீர்கள்! நான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளுகிறேன். என்னைக் கேட்டால், நீங்கள் ஆனந்திபாயியுடன் மதுரை, துவாரகை, பிருந்தாவனம் முதலிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போய் வருவது நல்லதென்பேன்! இப்படிச் செய்தால், அவர் மனசும் சரியாகி விடும். உங்களுக்கிடையே நெருக்கமான உறவும் ஏற்படும்!'' என்றார்.


மனைவி செய்த பணிவிடையினால் சேட் திரிவிக்ரம் தாஸ் சில நாட்களுக்குள்ளேயே நன்கு குணமடைந்து விட்டார். கஜான் சந்தின் முயற்சியினால் ராஜஹம்ஸி, பலாகா இவர்களுடன் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. ஜுல்பிகார்கானுக்கு வெற்றிலைபாக்குச் செலவுக்காக ஒரு கனத்த தொகை கிடைத்தது. கல்கத்தாவில் உள்ள ஒரு புகழ்பெற்ற ஜோதிடரைத் தேடிப்பிடித்து ஆயிரம் ரூபாய் செலவில் ஆனந்திபாயி ஒரு வசீகரணத் தாயத்து வாங்கிச் சேட்ஜியின் கழுத்தில் கட்டி விட்டாள். இந்தத் தாயத்தின் மகிமைதானோ, என்னவோ? சேட்ஜி தம் நண்பர்களிடம், 'ஆனந்தியைத் தவிர மற்றப் பெண்கள் எல்லாம் பேய்கள்' என்று இப்பொழுதெல்லாம் வாய்க்கு வாய் சொல்லிக் கொண்டிருப்பதாகக் கேள்வி.



இப்போது கடைகளில் கிடைக்கிறது



பின்வரும் ஐந்து
ரகங்களில்
கிடைக்கிறது:
ப்ரெஸ்டிஜ் டார்ஜி
லிங்-டின்களில்.
லலித்-பொன்னிற
அட்டைப்பெட்டியில்
மிலாப்-வெள்ளி நிற
அட்டைப் பெட்டியில்
பஹாதுர்-ஆரஞ்சு நிற
அட்டைப்பெட்டியில்
ஷான்-நீல நிற
அட்டைப்பெட்டியில்



புத்தம் புது, சுவையுள்ள, சிறந்த

டாடா-ஃபின்லே தேயிலை

ஈடில்லாத தேயிலை!

டாடா-ஃபின்லே தேயிலை மிகச்சிறந்து விளங்குகிறது. ஏன் தெரியுமா? தேயிலையை அறிந்தவர்கள் ஃபின்லே. உலகில் மிகப்பெரிய தேயிலைத் தோட்டங்களில் உயரிய தேயிலை வகைகளைப் பயிரிட்டு வந்துள்ளனர். பக்குவப்படுத்தும் கலையில் வல்லுனர்கள். டாடாவோ விநியோகத்துறையில் பல ஆண்டு அனுபவமுள்ளவர்கள். உங்கள் விருப்பம் இன்னதென நன்குணர்ந்தவர்கள். டாடா-ஃபின்லே ஒன்று சேர்ந்து சிறந்த தேயிலை வகைகளை உங்களுக்கு வழங்குகின்றனர். சுவை, மணம், புதுத்தன்மை ஆகியவை மாறுதிருக்க விசேஷ முறையில் அட்டைப் பெட்டியில் அடக்கமிட்டு அளிக்கின்றனர். உபயோகித்துப்பார்த்தால் நீங்களே ஒப்புக்கொள்வீர்கள்.

டாடா-ஃபின்லே தேயிலை பருகுவீர்;
உன்னதத் தேயிலை இன்பம் எய்துவீர்!

BI-TFN-4-TAM


மானேர்ஸ்
கிரைப் மிக்ஸ்சர்
கொடுத்து
மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் அஜீரணத்தைத் தடுக்கிறது. அதிலும் குறிப்பாக குழந்தைகளுக்குப் பற்கள் தோன்றும்போது பெருமளவில் உதவுகிறது.
குடலில் ஏற்படும் திருகுவலி போன்ற வயிற்றுவலி சம்பந்தமான தொல்லைகளைப் போக்கி, சுகமான நிலையை உண்டாக்குகிறது.
வயிற்று வீக்கங்களை, உப்புசங்களைப் போக்கி, காற்று பிரிவதற்கு உதவுகிறது.
உடல் நலத்தைப் பாதுகாத்து, குழந்தை அமைதியுடன் உறங்கவும் உறுதுணைபுரிகிறது.
மீண்டும்
புன்னகை
தோன்றக்
காணுங்கள்
MANNERS
ஒரு நாளைக்கு இருமுறை வீதம் ஒவ்வொரு நாளும்
மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர்
கொடுத்து வந்தால், உங்கள் குழந்தை உற்சாகத்துடனும், உடல் நலத்துடனும் காணப்படும்.
GEOFFREY MANNERS & COMPANY LIMITED
ASP/GM 18 TH,

பொன் விலங்கு

மணிவண்ணன்


அறுபதாவது அத்தியாயம்

தந்தியைப் பற்றிக் கூறியதும் உடனே கல்லூரிக்கு லீவு எழுதிக் கொடுத்து விட்டு மறுக்காமல் மதுரைக்குப் புறப்பட்டிருந்தாலும் பிரயாணத்தின்போது சத்தியமூர்த்தி சிறிதும் உற்சாகமின்றி ஏதோ ஆழ்ந்த மனப் போராட்டங்களாலே தாக்கப்பட்டவனைப் போல் தளர்ந்து உடன் வருவதைக் குமரப்பன் உணர்ந்து கொண்டான். எனவே நண்பனோடு அதிகம் பேச்சுக் கொடுக்காமலும் அவனுடைய மனப் போராட்டத்துக்குக் காரணத்தை அவனிடமே தூண்டித் தூண்டிக் கேட்காமலும் பஸ்ஸுக்கு வெளியே ஓடும் காட்சிகளில் கவனத்தைச் செலுத்தலானான் குமரப்பன்.

சரியாக அதே நேரத்திலே லேக் அவென்யூவில் சத்தியமூர்த்தியின் அறையைத் தேடி மோகினியின் கடிதத்தோடு வந்த மகேசுவரி தங்கரத்தினத்துக்கு, ''அவரு ஊருக்குப் போயிருக்காரு! ஏதோ அவசரமாகத் தந்தி வந்தது. ஒரு வாரம் காலேஜுக்கு லீவு போட்டு விட்டுக் கிளம்பிட்டாரு'' என்று கீழேயிருந்த ரொட்டிக் கடை வேலைக்காரன் பதில் கூறினான். ஏமாற்றத்தோடு திரும்பிய மகேசுவரி தங்கரத்தினம் உடனே பாரதியைச் சந்தித்துக் கடிதத்தைத் திருப்பிக் கொடுத்து 'அவர் ஊரில் இல்லை' என்ற விவரத்தையும் தெரிவித்தாள். 'சத்தியமூர்த்தி ஊரில் இல்லை' என்ற விவரத்தைப் பாரதியிடமிருந்து கேள்விப்பட்டபோது, ''நீ ஏன் வீணாக மனம் கலங்குகிறாய், பெண்ணே! என் பாக்கியம் அவ்வளவுதான். இந்த உலகத்தில் என்னைப் போல் துரதிருஷ்டசாலி வேறு யாரும் கிடையாது'' என்று அழுகைக்கிடையே பாரதியைப் பார்த்துக் கூறினாள் மோகினி.

''கவலைப்படாமல் இருங்கள் அக்கா! சந்தேகங்களும், தடைகளும் குறுக்கிடாத காதல் தேவர்களின் இதிகாசங்களில் கூட இல்லை. உங்களுடைய புண்ணியம் வீண் போகாது. சத்தியமூர்த்தி சார் எவ்வளவோ நல்லவர். முன் கோபமும், பொறுமையும் அவரிடம் என்றுமே இருந்ததில்லை. இன்று ஏதோ சந்தர்ப்பக் கோளாறுகளால் இப்படி ஆகி விட்டது! நீங்கள் ஜமீன்தாருக்குக் காப்பி கொடுத்துக் கொண்டிருந்ததையும் உங்களை அவரிடமிருந்து பிரிக்க வேண்டுமென்றே இந்தப் பாவிகள் தந்திரமாகத் தயார் செய்து மாட்டிய படத்தையும் பார்த்துத் திடசித்தமுள்ளவராகிய சத்தியமூர்த்தியே மனம் வேறுபட்டு ஆத்திரம் கொண்டு விட்டார். எல்லாம் விஷக்கடி வேலை'' என்று வருந்திய பாரதி மோகினியைச் சமாதானப்படுத்தி அமைதியடையச் செய்ய மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது.

''நீங்கள் நிம்மதியாக இருக்கணும் அக்கா! சத்தியமூர்த்தி சார் மதுரைக்குத்தான் போயிருக்கிறார் என்று தெரிகிறது. உங்களுடைய இந்தக் கடிதத்தைப் படித்தால் எப்படியும் அவருடைய மனம் இளகும். அவருடைய மதுரை வீட்டு விலாசம் எனக்குத் தெரியும். உங்கள் கடிதத்தை நாளைப் பகலில் மதுரைக்குத் தபாலில் அனுப்பி வைக்கிறேன். கடிதம் அவருக்குக் கிடைத்து அதை அவர் படித்த பின்பு மறுபடி இங்கு திரும்ப வரும்போது உங்களைத் தவறாகப் புரிந்து கொண்டதற்காக மனம் வருந்தியபடி வருவார். எல்லாம் சரியாகி நல்லபடி முடியும். வீணாக மனம் கலங்காதீர்கள்'' என்று மோகினிக்கு ஆறுதல் கூறிவிட்டு அவள் சத்தியமூர்த்திக்கு எழுதிய கடிதத்தை மறுநாள் பகலில் அவருடைய மதுரை முகவரி எழுதிய உறையிலிட்டு ஒட்டி ரிஜிஸ்தர்



தபாலில் அனுப்பிவிடச் சொல்லி மகேசுவரி தங்கரத்தினத்திடம் கொடுத்தனுப்பினாள். டிரைவர் முத்தையாவிடம் கொடுத்தனுப்பலாமென்றால் அவன், கண்ணாயிரத்தையும் கணக்குப்பிள்ளைக் கிழவரையும் அழைத்துக் கொண்டு காரில் நேரே மஞ்சள்பட்டி போய் அங்கு ஏதோ காரியங்களை முடித்துக் கொண்டு அப்புறம் மதுரை போய் விட்டுத் திரும்புவதற்காக மறுநாள் காலையில் புறப்படுவதாகச் சொல்லியிருந்தான். 'சத்தியமூர்த்தியின் தந்தையாகிய அந்தக் கணக்குப் பிள்ளைக் கிழவரிடமே உறையிலிட்டு ஒட்டிய இந்தக் கடிதத்தைக் கொடுத்து மதுரையில் அவருடைய மகனிடம் சேர்க்கச் சொன்னால் என்ன?' என்று ஒரு கணம் பாரதிக்கு யோசனை தோன்றியது. அடுத்த கணமே அந்த யோசனை பைத்தியக்காரத்தனமாகவும், நம்பிக்கையற்றதாகவும் படவே, அவள் அதைச் செய்வதில்லை என்ற முடிவுடன் தன் தோழி மகேசுவரி மூலம் தபாலுக்குக் கொடுத்தனுப்பினாள். கணக்குப் பிள்ளைக் கிழவர் மகனை என்ன காரணத்தினாலோ வெறுக்கிறார். தவிரவும் அவர் நேரே மதுரைக்குப் போகாமல் காரில் முதலில் மஞ்சள்பட்டி போய் அங்கு ஒரு நாளோ இரு நாட்களோ தங்கிக் காரியங்களைப் பார்த்துவிட்டு அப்புறம் கண்ணாயிரத்தோடு அங்கிருந்து புறப்பட்டு மதுரை போகப் போகிறார். கண்ணாயிரமும் உடன் போகிறபோது கணக்குப் பிள்ளைக் கிழவரை நம்பி இதைக் கொடுத்தனுப்புவது பைத்தியக்காரத்தனம்! பணத்துக்காகச் சேரத்தகாதவர்களோடு சேர்ந்து மகனையே வெறுக்கிறவரை எப்படி நம்புவது?' என்று சிந்தித்த பின்பே கடிதத்தைச் சத்தியமூர்த்தியின் பெருக்கே பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்திருந்தாள் பாரதி.

* * *

பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போதும் அதன்பின்பு மல்லிகைப் பந்தல் ரோடு இரயில் நிலையத்தில் இறங்கி மாறிப் புகை வண்டியில் பிரயாணம் செய்யும்போதும் சத்தியமூர்த்தி பிரயாணம் செய்வதுகூட ஞாபகமில்லாது ஆழ்ந்த சிந்தனைகளில் மூழ்கியிருந்தான். 'பிறர் மனமிரங்கிக் கண் கலங்குமாறு செய்யும் ஆற்றல் எல்லாப் பெண்களுக்குமே இருக்கிறது. மோகினியைப் போல் அழகும், கவர்ச்சியும், திறனும் உள்ள பெண்களுக்கு இந்த ஆற்றல் சிறிது அதிகமாகவே இருக்கலாம். இவ்வளவு நாள் இவளை ஒரு பொருளாக மதித்து மனத்தில் இடமளித்துக் கவலைப்பட்டு நான் உருகுமாறு செய்த ஆற்றல் என்னை இதுவரை ஏமாற்றியிருக்கிறதென்றே சொல்லலாம். இவள் என் மேல் உயிரை வைத்து வாழ்கிறாள் என்று நான் எண்ணியிருந்தது எத்தனை பெரிய பேதைமை? ஜமீன்தாருக்கும் இவளுக்கும் திருமணம் நடந்திராவிட்டால் இப்படி மணக் கோலத்தில் புகைப் படம் எடுத்து மாட்டுவதற்கு வேறு சந்தர்ப்பம் ஏது? ஊர் உலகத்தில் தன்னைப் பற்றிக் கேவலமாகப் பேசிக் கொள்வார்களே என்று பயந்து இந்த ஜமீன்தார் இவளை ஆசைக்கிழத்தியாக விரும்பிக் காதும் காதும் வைத்தாற் போல இரகசியமாக மணந்து கொண்டிருக்கிறார் போல் இருக்கிறது. இதை என்னிடம் மூடி மறைத்து ஏமாற்றிக் கொண்டு, 'பட்டுப் புடைவைக் கடையில் ஜமீன்தாரையும் என்னையும் சேர்த்துப் பார்த்ததனால் என்னைத் தப்பாகப் புரிந்து கொள்ளாதீர்கள்' என்று எனக்குக் கடிதம் எழுதிக் கொடுத்தனுப்பினாளே இந்தப் பழிகாரி! என் கையில் இந்த மோதிரத்தை அணிவித்து விட்டு, 'மேள தாளமில்லாமல் சந்தனம் வெற்றிலை பாக்கு இல்லாமல் புஷ்ப மரத்தடியில் வீற்றிருக்கும் தெய்வத்துக்குச் சமர்ப்பணமாகும் பூவைப் போல் நான் தானாகவே உங்களிடம் நேர்ந்தவள்' என்று இவள் என்னிடம் உருகிய உருக்கமெல்லாம் எவ்வளவு பெரிய துரோக நாடகம்? 'இந்தவீட்டில் நீங்கள் வாசிப்பதற்குரிய பரிசுத்தமான வாத்தியம் ஒன்று காத்துக் கிடக்கிறது' என்று கண் கலங்கிட இவள் முன்பு என்னிடம் கூறியிருந்த வாக்கியத்தையும் அதன் உறுதியையும் காற்றில் பறக்கவிட்டு விட்டாளே?' என்றெல்லாம் வெறுப்போடு எண்ணியபோது அவள் தன்னைக் கைப்பற்றி அணிவித்த அந்த நீலக் கல் மோதிரத்தை உடனே கைவிரலிலிருந்து கழற்றித் தலையைச் சுற்றித் தூர எறிந்து விட வேண்டும் போல் அருவருப்பா யிருந்தது அவனுக்கு. அருகிலிருந்த நண்பன் குமரப்பனும் இரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் சக பிரயாணிகளும் காணும்படி அந்த மோதிரத்தைக் கழற்றி எறியக்கூடாது என்பதற்காக அந்தக் கம்பார்ட்மெண்டின் ஒரு கோடியிலிருந்த குளியலறைக்குச் சென்றான் அவன். குளியலறைக் கதவை உட்புறமாகத் தாழிட்டுக் கொண்டு அந்த மோதிரத்தை விரலிலிருந்து கழற்ற முயன்றபோது அது விரலோடு விரலாக இறுகிப் போயிருந்ததனால் கழற்ற வரவில்லை. ஓடும் இரயிலில் குளியலறைக்குள் அங்கும் இங்குமாகத் தள்ளாடியதும் மோதிர விரலில்

ஓரத்தம் குழம்பிக் கன்றிச் சிவந்ததும்
தவிர அவனுடைய அந்த முயற்சிக்கு
வேறு பயன் விளையவில்லை. 'சனி
யன்! கழற்றி எறியவும் வரவில்லை'
என்று வெறுப்போடு முணுமுணுத்த
வாறே குளியலறையிலிருந்து திரும்பி
மறுபடியும் தன் இடத்தில் போய்
உட்கார்ந்தான் அவன். 'இந்த உலகத்
தில் ஒரே நோய்தான் உண்டு! ஒரே
மருந்துதான் உண்டு. அன்பு இன்மை
தான் பெரிய நோய். அன்புதான்
மருந்து. துன்பம், சோர்வு, பயம் எல்
லாம் அன்பில் அழிந்து விடும். அதே
அன்பு உண்மையாயில்லாமல் பொய்
யாகவோ, வஞ்சகமாகவோ இருந்து
விட்டால் அதுதான் மிகப் பெரிய நோய்!
அந்த நோய் அதற்கு ஆளானவனுடைய
மனத்தையே பாலைவனமாக்கி விடும்.
குலத்தளவே ஆகுமாம் குணம்' என்று
ஔவையார் பாடியிருப்பது எத்தனை
பொருத்தமாகி விட்டது? பிடிவாத
மாக அன்பு செய்யவோ சிறப்பாக ஒருவ
ரிடம் மட்டும் மனத்தைக் கொடுத்துக்
காதல் புரியவோ இவர்களுக்குத் தனி
மனம் கிடையாது என்பதனால் அல்
லவோ கம்பர் இவர்களை யெல்லாம்,
நிதி வழி நேயம் நீட்டும் பொதுமனப்
பண்டிர்' என்று பாடி வைத்தார் ?—'
என்பதாக எண்ணங்கள் எல்லாம்
மோகினியின் மேல் விளைந்திருக்கும்
ஆரம்பிலா வெறுப்புக் காரணமாகவே
அவன் மனத்தில் தோன்றிக் கொண்
டிருந்தன. பல நாட்களுக்கு முன்
அதன் முதலாக மதுரை வைகைப்
பாலத்தருகே இரயிலிலிருந்து கீழே
குதித்துத் தற்கொலை செய்து கொள்
ளத்தற்கிருந்த நிலையில், வான
வில்லைப் போல் நிறங்களின் அழகிய
சேர்க்குவமெல்லாம் இணைந்த அற்புத
மாய்ச் சரீரமெங்கும் பாதாதி கேசபரி
யந்தம் சந்தனமும், மருக்கொழுந்தும்
மலர்ந்தாற்போல் மணக்க, தின்பதற்கு
மட்டுமல்லாது தின்னப்படுவதற்கென்று
அமைந்தாற் போன்ற பற்களோடு
மோகினி தனக்கு அறிமுகமான சம்பவ
மும், அதற்குப் பின்பு அவளோடு பழக
நேர்ந்த சம்பவங்களும் ஒவ்வொன்ருக
நினைவு வந்து இந்த விநாடியில் அவனது
மன எல்லை யெல்லாம் நிறைந்திருந்த
வெறுப்பையும், விரோதத்தையும் —
மேலும் மேலும் வளர்த்தன. அவளைச்
சுற்றியிருக்கும் நரகத்தின் நடுவே அவன்
ஒருத்தி மட்டும் சொர்க்கமாயிருக்கிருள்
என்று முன்பு அவன் நினைத்ததுண்டு.
இன்றே அவளைச் சுற்றியிருக்கும்
பலா நரகங்களுக்கிடையேயும் அவளே
மிகப் பெரிய நரகமாகி விட்டதாக அவ
னுக்குத் தோன்றியது. மனிதனுடைய

அழுக்குக் கைகள் தொட்டுப் பறிப்ப தற்கு முன்பு மண்ணில் தாங்களாகவே உதிர்ந்து தங்கள் தூய்மையைக் காப் பாற்றிக் கொண்டு விடும் பவழமல்லி கைப் பூவைப் போல் தூயவளென்று முன்பு அவளை அவன் நினைத்திருந்தான். இன்றே படத்தில் மணக் கோலத்தோடு ஜமீன்தாருடன் சிரித்துக் கொண்டு நின்ற நிலையிலும், நேரில் அவருக்கு உப சாரம் செய்துகொண்டிருந்த நிலையி லும் பிரத்தியட்சமாக அவளைப் பார்த்து விட்ட பிறகு அவன் நினைப்பில் அவளே ஓர் பெரிய அழுக்காகத் தோன்றினள். 'ஷீ வாக்ஸ் இன் பியூட்டி' என்ற கவி தையை முன்பு கல்லூரி வகுப்பறையில் மாணவர்களுக்குக் கற்பித்த போது, அதில் வருகிற 'ஹௌ பியூர்?' (எவ்வளவு பரிசுத்தம்?) ஹௌ டியர்? (எவ்வளவு கனிவு) என்ற வரிகளைத் தான் மோகினியின் ஞாபகத்தோடு மனம் நெகிழ்ந்து விளக்கிச் சொல்லிய

> **பொன் விலங்கு**
>
> மனத்தின் எல்லா நோய்களுக்கும் அன்புதான மருந்து. அதே அன்பு பொய்யாயிருந்து விட்டாலோ அதைவிடப் பெரிய நோய் வேறெதுவும் இல்லை.

தையும் அந்த நெகிழ்ச்சியில் வகுப்பி லுள்ள மாணவ மாணவிகளெல்லாம் மயங்கியதும் இன்று அவனுக்கே வெறும் பொய்யாய்த் தோன்றுகின்றன. இன் னும் நன்ருகச் சொல்லப் போனல் அவ ளும் அவளோடு தொடர்புடைய எல் லாமுமே வஞ்சகமாய்ப் பொய்யாய்த் தோன்றுகின்றன. 'சந்திக்கிறேம், அறி கிறேம், அன்பு செய்கிறேம், பின்பு பிரிகிறேம். மிகப் பல மனித இதயங் களின் சோகக் கதை இதுதான்' என்ற பொருளில் 'டு மீட், டு நோ, டு லவ், அண்ட் தென் டு பார்ட், இஸ் தி ஸேட் டேல் ஆஃப் மெனி எ ஹ்யூமன் ஹார்ட்' என்பதாகக் கால்ரிட்ஜ் ஒரு கவிதை பாடியிருக்கிருன். அந்தக் கவிதைதான் இன்று இந்த விநாடியில் சத்தியமூர்த் திக்கு நினைவு வந்தது. மோகினியின் நினைவுகள் என்னும் தூய நறுமண மலர் களால் தொடுக்கப்பட்டிருந்த அவனு டைய ஞாபகமாலை இப்போது சிதைந்து அறுந்துபோய் விட்டது. அந்த நளின நறுமண மாலை மணம் பரப்பிக் கொண்டிருந்த இடத்தில் இப்போது



நீங்கள் அப்படிச்
சொல்லமாட்டீர்கள்...
ஆனால் அவள் சருமத்தில்
களங்கமுள்ளது!

நீங்கள் அப்படி
எண்ணமாட்டீர்கள்...
ஆனால் இப்பொழுது
அக்குறை நீங்கிவிட்டது!

அதைப்பற்றி நீங்கள் அறிந்திருக்க நியாயமில்லை. அத்தனை நுட்பமாக, துல்லியமாக அதை மறைத்திருக்கிறது இலேசான, லாவண்யமான லாக்டோ-காலமைன்! குறை எதுவாயினும் சாமர்த்தியமாக மறைக்கவல்ல மழமழப்பான இப்பவுடர் தளம்... உங்கள் மேனியெழிலுக்கு மேன்மை அளிக்கிறது.

லாக்டோ-காலமைன் மறைப்பதோடு, குறை நீங்கவும் உதவுகிறது!

ஆம், லாக்டோ-காலமைனின் சாதனை தான், துரிதமாய் வேலை செய்யும் உயர்தர காலமைனிலிருந்து விசேஷமாய்த் தயாரிக்கப்பட்ட இப் பவுடர் மற்றெந்த தளங்களையும்விடச் சிறப்பாய் உங்கள் சருமத்துக்குப் பணிபுரிகிறது...குறைகளை மறைப்பதுடன் அவை நீங்கவும் உதவுகிறது. சடுதியில், இதமுடன் தொல்லைகளைத் தீர்க்கிறது லாக்டோ-காலமைன்...நீங்கள் என்றும் விரும்பும் தெளிவான, ஒளி வீசும் மேனியெழிலை அது உங்களுக்கு வழங்குகிறது.

சருமக் கோளாறுகள், வெயில், அனல்காற்று ஆகியவற்றால் கன்றும் சருமம், சிசுக்களுக்கு வரும் அரிப்பு ஆகியவற்றுக்கும் அனுகுணமானது லாக்டோ-காலமைன்.

லாக்டோ-காலமைன் வரிசையில் மேலும் கிடைப்பவை: லோஷன், க்ரீம், டால்கம். எங்கும் கிடைக்கிறது.

லாக்டோ-காலமைன்—உங்கள் ஒப்பற்ற எழிலின் அடித்தளம்.



க்ருக்ஸ் இண்டர்ஃப்ரான் லிமிடெட், பம்பாய்-18.


01-C1-5 TAM.

வெறுப்பும், ஏமாற்றமும் ! அவநம்பிக்கையும் அருவருப்பும் வந்து குடிகொண்டிருந்தன. 'உலகம் நிரந்தரமாகப் பழித்துக் கொண்டிருக்கிற ஒரு பகுதியைச் சேர்ந்த அழகிய பெண்களிடையே இருந்துதான் வஸந்தசேனை, மாதவி, மணிமேகலை — கடைசியாக மோகினி எல்லாருமே தோன்றியிருக்கிறார்கள்' என்று தானே ஒரு நாள் மோகினியிடம் அவளைப் புகழ்ந்து கூறியதை நினைத்து அதற்காக இப்போது வருந்தி வெட்கமுற்றது அவன் மனம்.

மதுரை இரயில் நிலையத்தில் போய் இறங்கியபோதும் கூட மனம் குழம்பிய நிலையில்தான் இருந்தான் அவன். ''ஏன் இப்படி இருக்கிறாய்? தலைவலியா? உடல் நலமில்லையா?'' என்று குமரப்பன் விசாரித்தபோது கூட சத்தியமூர்த்தி ஏதோ பதில் சொல்லி மழுப்பி விட்டான். இரயில் நிலையத்துக்குக் கலெக்டருடைய மூத்த மகன் வந்திருந்தார். அப்போது இரவு ஒன்பதேகால் மணி ஆகியிருந்தது. அந்த இரயிலிலேயே அவர்கள் இருவரும் வருவார்கள் என்று எதிர்பார்த்து அப்பா வீட்டில் காத்திருப்பதாகவும், இருவரையும் நேரே தங்கள் வீட்டுக்கே அழைத்து வருமாறு தன்னை ரயில் நிலையத்துக்கு அவரே அனுப்பியதாகவும் கலெக்டருடைய புதல்வர் கூறினார்.

சத்தியமூர்த்தியும், குமரப்பனும் கலெக்டரின் மகனோடு அவரைச் சந்திக்கப் புறப்பட்டார்கள். அவர்கள் இரயிலிலிருந்து வந்தபின் எல்லாருமாகச் சேர்ந்து சாப்பிடலாம் என்று காத்திருந்த கலெக்டர் சத்தியமூர்த்தியும், குமரப்பனும் எவ்வளவோ மறுத்தும் கேட்காமல் அங்கேயே அவர்களையும் சாப்பிடச் செய்து விட்டார். டெல்லியிலிருந்து இண்டர்வ்யூவுக்குத் தேதி குறிப்பிட்டு வந்திருப்பதாகச் சத்தியமூர்த்தியிடம் மகிழ்ச்சியோடு தெரிவித்தார் அவர். ''இண்டர்வ்யூவில் வெற்றி கிடைத்து நீ தேர்வுபெறுவதைப் பற்றி எனக்குச் சந்தேகமே இல்லை! அதற்கான ஏற்பாடுகளைக் கூட நான் செய்து விட்டேன், சத்தியம்! நீ நாளை மாலை இங்கிருந்து சென்னை புறப்பட்டு நாளன்றைக்குக் காலையில் சென்னையிலிருந்து கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸ் மூலம் டெல்லிக்குச் செல்ல வேண்டும். டெல்லியில் எல்லாம் சரியாக முடிந்து விட்டால் அடுத்த மாத மத்தியில் பம்பாயிலிருந்து புறப்படும் லுப்தான்ஸா என்ற ஜெர்மானிய ஜெட் விமானத்தில் உன் பிரயாணம் இருக்கும். அதற்கு அதிக நாள் இல்லை. எல்லாமே துரிதமாகச் செய்ய வேண்டும். அவர்கள் செலவில் அழைத்துப் போகிறார்கள் என்றாலும் உன் கைச் செலவுக்குக் கொஞ்சம் பணம் கொண்டு போவது நல்லது. அதற்கு நமது ரிசர்வ் பாங்கிலுள்ள எக்ஸ்சேஞ்சு கண்ட்ரோலுக்கு இப்போதே மனுச் செய்து வைக்க வேண்டும். 'எஜுகேஷனல் டூர்' என்பதால் அதிக சிரமமில்லாமல் 'பெர்மிட்' கிடைத்து விடும் என்று நினைக்கிறேன்'' என்று தொடங்கிக் கலெக்டர் அப்போதே பிரயாணம் அருகில் வந்துவிட்டதுபோல் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார். டெல்லியிலிருந்து அவனுக்கு வந்திருந்த 'இண்டர்வ்யூ கார்டை'யும் பிற விவரங்களையும் அவன் கையில் கொடுத்துக் கலெக்டர் அவர்களிருவருக்கும் விடையளிக்கும்போது இரவு பதினொரு மணிக்கு மேல் ஆகி விட்டது. அந்த நேரத்திலும் விழித்திருந்து கலெக்டரின் மகன் அவர்களைக் காரில் பேச்சியம்மன் படித்துறைத் தெரு வரையில் கொண்டு வந்து விட்டுச் சென்றார். சத்தியமூர்த்தியும், குமரப்பனும் வீட்டுக் கதவைத் தட்டி விட்டுக் காத்துக் கொண்டு நின்றார்கள். அம்மா வந்து கதவைத் திறந்தபோது அவனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ''என்னடா, சத்தியம்! இந்த நேரத்துக்கு எந்த இரயிலில் வந்தாய்? அப்பாகூட ஏதோ ஜமீன்தார் காரியமாக அங்கேதானே மல்லிகைப் பந்தலுக்கு வந்திருக்கிறார்? உன்னை வந்து பார்த்தாரோ இல்லையோ? ஏது இப்படித் திடீரென்று புறப்பட்டு வந்தாய்?'' என்று கேட்டவளுக்கு உள்ளே போய் எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னான் சத்தியமூர்த்தி. குமரப்பனும் அன்றிரவு அங்கேயே தங்கினான். வெளிநாட்டுப் பயணத்தைப் பற்றிக் கூறிய பின் ''அப்பாவுக்கும் எனக்கும் தகராறு. 'வீட்டு வாசற்படி ஏறாதே. முகத்திலே விழிக்காதே' என்று கத்திவிட்டுப் போயிருக்கிறார். நான் ஜமீன்தாரிடத்திலே மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று அப்பா முரண்டு பிடித்தார். நான் முடியாதென்று மறுத்தது பொறுக்காமல் அவருக்கு ஆத்திரம் வந்தது.... அதற்கப்புறம் அவரும் என்னைப் பார்க்க வரவில்லை. நானும் அவரைப் பார்க்கப் போக வில்லை'' என்று அவன் கூறிய போது அம்மா பெருமூச்சு விட்டாள்.

''என்னமோ போ! நீ இப்படியே வீட்டோட வாசலோட ஒட்டுதல் இல்லாத பிள்ளையாப் போய்க்கிட்டிருந்தா விடிஞ்சாப் போலத்தான். ஏதுடா, பெரியவங்களையோ, தன் மனிசாளின்னு ரெண்டு பேரையோ கலந்து பேசிக்காம இதெல்லாம் ஏற்பாடு செய்யறே மேன்னு நீ கொஞ்சமாவது கவலைப் படறியோ? தேசம் விட்டுத் தேசம்



புதிய
ராலீஸ் 16

வலைக்கண் பாதுகாப்புள்ள

மேஜை விசிறி

I-RFN-65-TAM



பளிச்சிடும் புதிய அம்சங்கள்:

- புதிய 'கெபாஸிடர்' மோட்டார்

  உங்கள் அறைக்கு அதிகக் குளுமையூட்டி, உங்கள் மின்சாரச் செலவில் கால் பங்கை மிச்சப்படுத்துகிறது.

- புதிய 'பயோனெ மாதிரி' ஸ்பீட் கண்ட்ரோல்கள்

  சுலபமான, தரமான முறையில் வேக மாறுதலை உறுதி செய்கிறது.

- புதிய அபிவிருத்தியடைந்த அமைப்பு

  ஆபத்தில்லாத புதிய வலைக்கண் பாதுகாப்பு மற்றும் பளபளப்பான, வழவழப்பான வளைந்த உருவமைப்பு.

- கண்கவர் வர்ண வகைகள்

தவிர 2 வருடங்களுக்கு உத்தரவாதமுண்டு.


மேலும் கிடைக்கும் மாதிரிகள்: ராலீஸ் 16" டீலக்ஸ் மேஜை விசிறி, ராலீஸ் 16" பெடஸ்டல் விசிறி, மற்றும் எக்ஸாஸ்ட் விசிறி.

தயாரிப்பில் ராலீஸ் காட்டும் சிரத்தை உங்களுக்கு மேலும் சிறந்த விசிறியை அளிக்கிறது.

சென்னை மற்றும் கேரள ராஜ்யங்களுக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
மெஸர்ஸ் முகமத் இப்ராஹிம் & கோ., பிரைவேட் லிமிடெட்
7/8, மவுண்ட் ரோடு, சென்னை-2

போயி ரெண்டு மூணு வருசம் இருக்கப் போறே! அதைப் பற்றிப் பெத்த தகப்பனிட்ட ஒரு வார்த்தை கேட்கலே. நீ செய்யறது உனக்கே நல்லாயிருந்தாச் சரி'' என்று அலுத்துக் கொண்டாள் அவன் அம்மா.

''உன்னைப் பார்க்காமல் சொல்லாமல் போக மனசு இல்லே அம்மா! தங்கைகள் ஆண்டாள், கல்யாணி இவர்கள் மேலே வைச்சிருக்கிற பிரியமும் ஒரு காரணம். இன்று இங்கே அப்பா இருந்திருந்தால் என்னை விட்டு வாசற்படி ஏற விட்டிருக்க மாட்டார். என்னைவிட இப்போது ஜமீன்தாரும், குடிகெடுக்கிற கண்ணாயிரமும்தான் ரொம்ப வேண்டியவர்களாகி விட்டார்கள் அவருக்கு. 'தன் மனிசாள்' என்று நீ சொல்கிறாய்! 'தன் மனிசாள்' என்ன நல்லது செய்யறாங்க? இதோ இந்தக் கலெக்டர் எப்பவோ எனக்கு வாத்தியாராயிருந்தாரு. நான் கேட்டுச் செய்யாமல் அவராகவே இவ்வளவும் எனக்குச் செய்கிறார். இந்த மாதிரிப் பெருந்தன்மையைத் தன் மனிசாளிடத்திலேகூட எதிர்பார்க்க முடியறதில்லே'' என்று சத்தியமூர்த்தி பதில் சொல்லிய போது குமரப்பனும் அதை ஆமோதிப்பதுபோல் அந்த அம்மாளிடம் இரண்டு நிமிஷம் ஏதோ தன்மையாகப் பேசிக் கொண்டிருந்தான். ''படுத்துக் கொள்ளுங்கள்! காலையில் பேசிக் கொள்ளலாம்'' என்று இரண்டு பேருக்கும் படுக்கை தலையணைகளைக் கொண்டுவந்து கொடுத்து விட்டுப் போனாள் அம்மா. படுக்கையை விரித்துப் படுத்தவுடனே குமரப்பன் நன்றாகத் தூங்கிப் போய் விட்டான். சத்தியமூர்த்திக்குத் தூக்கம் வரவில்லை. மோகினி தனக்குத் துரோகம் செய்துவிட்டு ஜமீன்தாரை இரகசியமாக மணந்து கொண்டு அவருக்கு உபசாரம் செய்கிறாள் என்பதை நம்பவும் முடியாமல் மறந்துவிடவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்தது அவன் மனம். அவளோடு தொடர்புடைய எண்ணங்கள் ஒவ்வொன்றாக நினைவு வந்து அவனுடைய நிம்மதியையும் தூக்கத்தையும் பாழாக்கிக் கொண்டிருந்தன. 'இதே வீட்டு வாசலில் தன்னைத் தேடி வந்து இரயிலில் தான் தவறவிட்ட பேனாவைக் கொடுத்து விட்டு, 'என்னை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். வருகிறேன்' என்று சித்திரம்போல் அடக்கமாய் நின்று மோகினி தெருவிலிருந்தவாறே சிரித்தபடி தன்னைக் கைகூப்பிச் சென்றதும், அவளுடைய கைபட்டு மணந்த அந்தப் பேனாவை நெஞ்சின் மேலேயும் அவளைப் பற்றிய அநுதாபத்தை நெஞ்சின் உள்ளேயும் பதித்துக்



''என்னய்யா இது! கல்யாணம் ஆவதற்கு முன்னேயே சமையல் வேலையை ஆரம்பிச்சு விட்டீங்க.''

''என்ன சார் பண்றது? நான் கல்யாணம் செய்துகொள்ளும் பெண்ணுக்குச் சமைக்கத்தெரியாது. எனக்கும் தெரியாட்டா அவள் என்னைப்பத்தி என்ன நினைச்சுப்பா?''

கொண்டு அன்று தான் அவளுக்காக மனம் உருகியதையும் இப்போது நினைத்தான் சத்தியமூர்த்தி. அதன் பின்பு மீனாட்சி கோவில் பிராகாரத்தில், ''உயிரைக் கொடுத்த தெய்வத்தைத் தரிசிக்க வந்தேன். அப்படி வந்த இடத்தில் உயிரைக் காப்பாற்றிய தெய்வத்தின் தரிசனமும் கிடைத்திருக்கிறது'' என்று சொல்லி விட்டுக் கீழே குனிந்து அவன் தன் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டதையும், 'ஆதரவற்றதெல்லாம் ஏழைதான்! அந்த விதத்தில் உண்மையும் ஏழையாயிருப்பதில் தவறில்லை' என்று சிரித்தபடி தனக்கு மறுமொழி கூறியதையும், சித்திராபௌர்ணமியன்று அவளுடைய நாட்டியத்தைப் பார்த்துத் தான் மனம் உருகியதையும், கடைக்கண்களால் நோக்கிப் புன்னகை கிறங்கும் இதழ்களைத் திறந்து, 'இந்த வீட்டில் நீங்கள் எடுத்து வாசிப்பதற்காகவே உங்கள் காலடியில் காத்துக் கிடக்கும் வாத்தியம் இதோ இருக்கிறது' என்று அவள் தன் நெஞ்சைத் தொட்டுக் காண்பித்ததையும் 'அந்த அதிகாலை நேரத்தில் இரயிலில் மேளம் கொட்டாமல் நாகஸ்வரம் வாசிக்காமல் பாணிக்கிரகணம் செய்து கொண்டது போல் கையைப் பிடித்து இழுத்தீர்களே' என்று அவள் தன்னிடம் உணர்வு மல்கக் கூறியதையும், கற்பையும் கன்னிமையையும் காத்துக் கொள்வதற்காகவே உயிர் நீத்த தன் பெரிய பாட்டி மதுரவல்லியோடு அவள் தன்னை ஒப்பிட்டுப் பேசியதையும், முருகன் படத்துக்கு அவள் சூட்டிய மாலை அதற்கு நேர் கீழே அமர்ந்திருந்த அவன் கழுத்


இல் நழுவி விழுந்த போது அதைக் கழற்ற முற்பட்ட அவனுடைய தோள்களைப் பூச்செண்டு போன்ற தன் இருவளைக் கரங்களாலும் பற்றிக் கொண்டு, 'கழற்றாதீர்கள்! மாலையை எங்கே சூட்ட வேண்டுமென்று நினைத்தேனோ அங்கேயே அது விழுந்து விட்டது' என்பது போல் ஏதோ கூறிச் சிரித்ததையும் அவனுடைய வீட்டுக் கண்ணாடியில் தானும் அவனும் சேர்ந்து தெரிந்த கோலத்தை மணக் கோலமாக வருணித்து அவளே நாணியதையும் 'என்னுடைய அன்பு மழையைப் போல் எப்போதாவது பெய்து மறைவதில்லை. கதிரவனைப் போல் நித்தியமாக உதிப்பது' என்று அவளே உறுதி கூறியதையும் 'உங்கள் ஞாபகத்தில் தங்கி வாழ்வதைவிட எனக்கு வேறு பாக்கியமேது?' என்று அவள் மனம் நெகிழ்ந்து கூறியதையும் அவனுடைய படங்களோடு குமரப்பன் தனக்குக் கடிதம் எழுதியிருந்ததையும், அவள் தனக்கு எழுதியிருந்த கடிதமொன்றைத் தன் பெட்டியிலிருந்து குமரப்பன் தெரியாமல் எடுத்துப் படித்து விட்டுத் தன்னைப் பாக்கியசாலியாக வருணித்ததையும், கார் விபத்தில் தாய் இறந்து அவள் ஆஸ்பத்திரியில் கிடந்த போது நண்பனோடு மதுரைக்குப் போய்ப் பார்த்த வேளையில், 'நான் மானசீகமாக உங்களுக்கு வாழ்க்கைப்பட்டு விட்டேன். சாகும்போதும் உங்கள் மனைவியாகவே சாவேன்' என்று அவள் தன்னிடம் அழுது கண்ணீர் சிந்தியதையும், வசந்தசேனை சாருதத்தன் கதையைத் தான் அவனுக்குக் கூறியதையும், பொன்னுசாமிப் பிள்ளை தெருப்பாட்டு வாத்தியாரிடம் அவளைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டு தான் பெருமைப்பட்டதையும், கோச்சடை ஜமீன் மாளிகையில் அடைபட்டுக் கிடந்தபோது அவள் தன்னிடம் அழுது வேண்டிய வேண்டுகோளையும், 'உங்களோடு வாழ்ந்ததாகப் பாவித்தபடியே இறப்பது கூட என் சௌபாக்கியம்' என்று அப்போது அவள் கூறிக் கதறியதையும் அலங்கரித்த தேர் போல் அவள் தன் எதிரே நடந்த நடைகளையும், சிரித்த சிரிப்புக்களையும், அழுத அழுகைகளையும் எல்லாவற்றையும் நினைத்து — 'அப்படிப்பட்டவள் இன்று ஒழுக்கக் கேடும் குணக்கேடுமுள்ள இந்த ஜமீன்தாரை மணந்து அவருக்கு ஓடியாடி உபசாரம் செய்யத் துணிந்தது எப்படி? என்னால் இதை நம்பவே முடியவில்லையே?' என்று நினைத்து நினைத்து அந்த நினைப்புக்கு ஒரு முடிவும் தெளிவும் கிடைக்காமல் சத்தியமூர்த்தி மனம் கொதித்தான். 'பெண்ணிற் பெருந்தக்கயாவுள' என்று கற்புள்ள பெண்களைப் புகழ்ந்த அந்த வள்ளுவர் 'இனம் போன்று இனமல்லார் கேண்மை மகளிர் மனம் போல வேறுபடும்' என்றும் வேறோரிடத்தில் உறுதியாகக் கூறியிருக்கிறார். வேறுபடுவதில் பெண் மனம் அவ்வளவு பலமற்றதா? செய்த சத்தியங்களையும், சொல்லிய காதல் மொழிகளையும் அறவே மறந்து போய் இந்த ஜமீன்தார் காலடியில் விழுந்து பணிவிடை புரிய இவள் எப்படித் தன்னைத் தயாராக்கிக் கொண்டாள்? இவள் எக்கேடு கெட்டால் என்ன? நான் ஏன் இவளுக்காக இவ்வளவு தவிக்க வேண்டும்? இவ்வளவு நினைக்க வேண்டும்? என் மனம் இந்தத் தவிப்பையும் கொதிப்பையும் இன்னும் ஏன் விடமாட்டேனென்கிறது?' என்று தன்னையே கடிந்துகொண்டு வலிந்து தூங்க முயன்றான் அவன். விடிகாலை மூன்று மணிக்கு மேல் அயர்ச்சி தாங்காமல் தூக்கம் மெல்ல வந்தது. அதிலும் ஒரு சொப்பனம். 'சந்தேகம் உங்கள் கண்களை மறைக்கிறது! நான் துர்ப்பாக்கியசாலி. என்னைக் கெட்டவளாக நினைக்காதீர்கள்' என்று மோகினி தன்னிடம் வந்து கதறுவது போல் கனவு கண்டான் அவன்.

காலையில் விடிந்ததும் பத்துப் பத்தரை மணிக்கு மறுபடியும் கலெக்டரைப் பார்க்கப் போனார்கள் அவர்கள். பாஸ்போர்ட், ரிஸர்வ் பேங்க் விண்ணப்பம் பற்றி அவர் சில யோசனைகளைக் கூறினார். சென்னையிலும் டில்லியிலும் சிலரைப் பார்க்குமாறு சத்தியமூர்த்திக்கு அறிமுகக் கடிதங்கள் கொடுத்தார். அவருடைய வீட்டிலிருந்து நேரே மீனாட்சியம்மன் கோவிலுக்குப் போனார்கள் நண்பர்கள். அம்மன் கோவிலில் திருச்சுற்றை வலம் வரும் போதும் அந்தப் பழிகாரியின் நினைவு வந்து சத்தியமூர்த்தியின் மனத்தைக் கலக்கியது. அன்று மாலை ஆறரை மணியளவில் அவன் சென்னைக்கு இரயிலேற வேண்டும். அதே இரயிலில் குமரப்பனும் அவனோடு கூட வந்து மல்லிகைப் பந்தல் ரோடு நிலையத்தில் இறங்கி அங்கிருந்து பஸ்ஸில் போய் விடுவதாக ஏற்பாடு செய்திருந்தார்கள். ''டெல்லியில் இண்டர்வ்யூ முடிந்ததும் மதுரை வந்து என்னைப் பார்த்து விட்டு அப்புறம் மல்லிகைப் பந்தலுக்குப் போய் உன்னுடைய ராஜிநாமாவைக் கொடுக்கலாம். நான் எல்லா விவரமும் சொல்கிறேன்'' என்று கூறியிருந்தார் கலெக்டர். சந்தர்ப்பங்களும், அநுபவங்களும் மாறி வாய்ப்புக்கள் அணுகும்போது மனித வாழ்க்கை மிக வேகமாக ஓடி விடுவது போல் அவசரப்படுகிறது. எல்லாம் விரைந்து நடைபெறுவது போல் ஒரு பிரமை உண்டாகிறது.

(தொடரும்)

நாய் அழுகிறது!

ஸ்ரீரங்கம் நரஸிம்மன்



சென்னையை நோக்கி வெகு வேகமாக வந்துகொண்டிருந்த அந்த அழகான விலை உயர்ந்த கார் விழுப்புரத்தைத் தாண்டிச் சில மைல்கள் வந்ததும் ஒரு மரத்தின் நிழலில் நின்றது. காரின் வேகத்தை விட அதிக வேகத்தில் பின்ஸீட்டில் உட்கார்ந்திருந்த பிரபல திரைப்பட இசையமைப்பாளரின் கற்பனை ஏதோ ஒரு ராகத்தின் ஆரோகண அவரோகணத்தில் நீச்சலடித்துக் கொண்டிருந்தது. சட்டென்று வண்டி நிற்கவும் அவர் சிந்தனையும் கலைந்தது.

''டிரைவர் ஏன் வண்டியை நிறுத்தி விட்டாய்?'' என்று கேட்டார்.

''என்ஜின் ரொம்பச் சூடாயிடுச்சுங்க....'' என்று பதிலளித்தவாறு ஒரு காலி பெட்ரோல் டப்பாவை எடுத்துக் கொண்டு வண்டியிலிருந்து இறங்கிப் பொட்டல்போல் காட்சியளித்த வயல்வெளியில் இறங்கிச் சென்றான் டிரைவர்.

வண்டி நிழலில்தான் நின்றது என்றாலும் புழுக்கமும் உஷ்ணமும் அதிகமாகவே வண்டியை விட்டு இறங்கி ஒரு புளிய மரத்தின் நிழலில் நின்றவாறு அந்த நெடுஞ்சாலையில் பறந்துகொண்டிருந்த லாரிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார் இசையமைப்பாளர் தாசரதி. அவருடைய உதடுகள் ஏதேதோ ஸ்வரங்களை உதிர்த்த வண்ணமாயிருந்தன.

அப்பொழுது இரண்டு நாய்கள் மிகவும் ஆக்ரோஷத்துடன் ஒன்றையொன்று திட்டிக் கொண்டும் துரத்திக் கொண்டும் அவர் மேல் விழாக் குறையாக ஓடின. மற்றப்படி ரஸ்தாவில் நடமாட்டமே இல்லை. அந்தப் பொசுக்கும் வெய்யிலில் யார்தான் நடப்பார்கள்?

நாய்களின் சண்டை பலமாக வலுத்துக் கொண்டிருந்தது.

தாசரதியின் கவனம் நாய்களின்மீது திரும்பியது. அவைகள் குரைப்பதைக் கவனிக்கத் தொடங்கினார். அவருக்கு ஒரு சந்தேகம், ஒரு சபலம் தட்டிற்று. 'ஒருவேளை இந்த இரண்டு நாய்களில் ஒன்று அந்த நாயாக இருக்குமோ' என்று ஆராயத் தொடங்கினார். அந்த நாய்கள் ஊளையிட்டால்தான் அவரால் ஒரு முடிவுக்கு வர முடியும். எந்த நாயைக் காண வேண்டும் என்று கடந்த ஒரு வருஷகாலமாகத் துடிக்கிறாரோ, அந்த நாயின் அழுகுரல் ஒன்றைத்தான் அவர் கேட்டிருக்கிறார். குரைத்தும் கேட்டதில்லை; உருவத்தையும் கண்டதில்லை.

'தயவுசெய்து நீங்கள் இருவரும் ஊளையிடுங்களேன்' என்று அவற்றினிடம் கேட்டுக் கொள்ள வேண்டும் போல் தோன்றியது. இந்த நாய்கள் என்றில்லை; எங்கே எந்த நாயைக் கண்டாலும் ஒருசில நிமிஷங்களாவது தயங்கி நிற்காமல் இருக்க மாட்டார். தற்செயலாக ஊளையிடும் எவ்வளவோ குரலையும் கேட்டிருக்கிறார். பிசிரில்லாமல் நீர்க்கமும் கனமும் பொருந்திய சாரீரத்தின் ஊளைக் குரல் வேறு எந்த நாய்க்கும் இருந்ததில்லை.

சண்டையிட்டுக் கொண்டிருந்த நாய்களை ஒருவித ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார் தாசரதி. எங்கோ வெகுதூரத்திலிருந்து ஒரு குரல் காற்றிலே மிதந்து வந்தது.

ஊளைக் குரல்!

புருவங்களை நெறித்தவாறு மூடிய விழிகளுடன் ஏகாக்கிர சிந்தனையில் ஒரு கணம் மூழ்கி நின்றார். திரும்பவும் அந்த ஊளைக் குரல் கேட்டது. இப்பொழுது கொஞ்சம் தெளிவாகவே கேட்டது. தாசரதியின் செவிகள் மலர்ந்தன. முகம் மலர்ந்தது. ஓர் இனிய உணர்ச்சி ஓட்டத்தினால் தாசரதியின் உடல் முழுதும் ஒரு சிலிர்ப்பு உண்டாயிற்று. பிரமையோவென எண்ணி விடாதபடி மறுபடியும் அந்த அழுகுரல் கேட்டது! அழுகுரலா அது? கந்தர்வ கானமாக அவர் காதுகளில் அமிர்தத்தைப் பொழிந்தது.

''அதே குரல்! அதே நாய்தான்!'' என்று தம்மையும் மீறி வாய் விட்டுக் கூறி விட்டார். தண்ணீருக்குச் சென்ற டிரைவர் திரும்பினான்.

"டிரைவர் சீக்கிரம் வண்டியை எடு!..... அதோ.... அந்த நாயின் அழுகுரல் வரும் இடத்துக்கு ஓட்டு......" என்று பரபரப்புடன் கூறிவிட்டுக் காரின் முன் ஸீட்டில் அமர்ந்து கொண்டார். காரின் தாகத்துக்குத் தீர்த்தம் புகட்டும்வரை கூட அவரால் பொறுத்திருக்க முடியவில்லை. "ம்.... சீக்கிரம்!" என்று துரிதப்படுத்தினர். சில நிமிஷங்களில் வண்டி பின்னேக்கிச் சென்று ஊளைக் குரல் வந்த இடத்துக்குச் சமீபமாக வந்து நின்றது.


ரஸ்தாவிலிருந்து சிறிது தள்ளி வயல்வெளியில் களத்துமேடு போல் தோன்றிய ஓர் இடத்தில் படுத்துக் கொண்டு நினைத்து நினைத்து விட்டு விட்டு அழுது கொண்டிருந்தது ஒரு நாய்.

தாசரதியும் டிரைவரும் வண்டியை விட்டிறங்கி அதன் பக்கம் வந்தார்கள். டிரைவரைப் பார்த்துப் பயந்த நாய் முதலில் அவ்விடத்தை விட்டுப் போகப் பார்த்தது. பிறகு தாசரதியின் பக்கம் வந்து மோப்பம் பிடிப்பதைப் போலப் பாதத்திலிருந்து முழங்கால் வரை பார்த்து விட்டு வாலை ஆட்டத் தொடங்கியது. இரண்டு முறை அவரைச் சுற்றிச் சுற்றி வந்தது. புரியாத பாஷையில் ஏதோ புலம்பியவாறு முன்னங்கால்களைத் தூக்கிக் கொண்டு தாசரதியைக் கட்டித் தழுவிக் கொள்ள முயன்றது.

"இந்த நாயை இதற்கு முந்தி பார்த்திருக்கீங்களா ஸார்?" என்றான் டிரைவர்.

"இல்லையே!"

"ரொம்பப் பழகினவங்களைக் கண்டாப் போல வாலை ஆட்டுதே!......" என்றான்.



தாசரதி சிறிது யோசித்து விட்டு, "ஒரு வேளை அதுவாயிருக்குமோ?" என்றார்.

"எதுங்க ?"

"நான்கு வருஷங்களுக்கு முன் ஒரு நாய்க்குட்டியை இந்தப் பிராந்தியத்தில் விட்டுச் சென்றேன்......."

"பார்த்தீங்களா ? அதேதானுங்க! இல்லாட்டி இப்படி ஆனந்தப்படுங்களா?"

" அப்போ ஊளையிட்டதும் இதுவே தானே?......." என்று கூறியவாறு நாயின் முதுகைத் தடவிக் கொடுத்தார். அவருடைய சிந்தனை பின்னேக்கிச் சென்றது. அதன் குழந்தைப் பருவத்தில் தம் வீட்டுக்குள் வந்து நுழைந்த காலத்தை நினைத்துப் பார்த்தார்.

அப்பொழுது, அதாவது அந்தக் காலத்தில் அவருக்கு நாய் என்றாலே பிடிக்காது. ஏன், நாய் வளர்ப்பவர்களைக் கூடக் குறை கூறுவார். அப்படிப்பட்டவர் வீட்டுக்குள் நான்கு வருஷங்களுக்கு முன்பு ஒரு நாய்க்குட்டி திடீர் விஜயம் செய்தது. திறந்த வீட்டில் அது தானாக நுழைந்து விடவில்லை. தாசரதியின் ஐந்து வயதுப் பிள்ளை ஆசையோடு எங்கிருந்தோ கொண்டு வந்திருந்தான்.

அப்பொழுது தாசரதி 'பிரபலம்' இல்லை. ஓர் இசைக் குழுவில் பல 'வயலினிஸ்ட்'களில் ஒருவராகத்தான் பணியாற்றி வந்தார்.

ஒரு நாள் அவர் வீட்டுக்குள் நுழையும் போது 'வாள் வாள்' என்று கீச்சுத் தொண்டையில் கத்திக் கொண்டிருந்தது ஒரு நாய்க்குட்டி. தாசரதிக்கு எரிச்சலாக வந்தது. "யார் இந்தச் சனியனைக் கொண்டு வந்தது?" என்று இரைந்தார்.

"என்னுடையது...." என்று அதை அணைத்துக் கொண்டான் சிறுவன்.

"முதல்லே அதைக் கண் காணாமல் எங்காவது துரத்திட்டு வா!..... ம்!....!" என்று அதட்டினர். குழந்தை அழுது அடம் பிடித்தான். பையனின் தாயார், "ஏதோ குழந்தை ஆசைப்படறான்.... இருந்துவிட்டுப் போகட்டுமே.....?" என்று கணவனிடம் சிபாரிசு செய்தாள்.

"குழந்தை ஆசைக்கு ஒரு நாய்க்குட்டி வந்திருக்கு; நாளைக்கு உன்னுடைய ஆசைக்கு ஒரு யானைக் குட்டி வரும்!.... இதுகளுக்கெல்லாம் எவன் சோறு போடறது? முதல்லே இதை வெளியில் அனுப்பு. இல்லே, நான் உள்ளே நுழைய மாட்டேன்...." என்று கண்டிப்பாகக் கூறி விட்டுச் சத்தியாக்கிரகம் செய்பவர் போல் வாசற்படியிலேயே அவர் நின்று கொண்டார்.

"கொண்டு விட்டுடுடா கண்ணு.." என்று பிள்ளையைக் கெஞ்சினள் அவன் தாயார். துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது சிறுவனுக்கு. வேறு வழியின்றி நாய்க் குட்டியை அழைத்துக்கொண்டு வெளியேறினன் சிறுவன். தாசரதி உள்ளே சென்றார்.

நாய்க்குட்டியை வெளியே அழைத்துச் சென்ற சிறுவன், நான்கு வீடுகளுக்கப்பால் இருந்த ஒரு நகரசபைப் பள்ளிக்கூடக் காம்பவுண்டுக்குள் அதைக் கட்டிவிட்டு வந்தான்.

அப்பா வெளியில் போயிருக்கும் நேரங்களில் அதை வீட்டுக்குள் அழைத்து வந்து ஆகாரம் கொடுத்துக் கொஞ்சி விளையாடுவான். தாசரதி வீடு திரும்பும் சமயத்துக்கு நாய்க்குட்டியைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி விடுவான். இப்படியே சில நாட்கள் நடந்தன. பிறகு தாசரதிக்கு விஷயம் தெரிய வந்தது. பிள்ளையை அடித்தார்; மனைவியைக் கண்டித்தார். ஓர் ஆளைப் பிடித்து ஏதோ கூலியும் கொடுத்து இரண்டு மூன்று மைல்களுக்கப்பால் ஏதாவது ஒரு பேட்டையில் கொண்டு விடுமாறு பணித்தார்.

இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் அதன் குரல் கேட்டது!

இன்னொரு முறையும் எங்காவது கொண்டு விடுமாறு ஏற்பாடு செய்தார். இப்பொழுதும் திரும்பி விட்டது! மூன்றும் முறையும் முயன்று பார்த்தார், பயனில்லை!

ஒரு சமயம் யாருடைய காரிலோ திருச்சி வரை போக வேண்டிய வாய்ப்புக் கிட்டியது தாசரதிக்கு. இதுதான் சமயமென்று நாய்க் குட்டியையும் காரில் ஏற்றிக் கொண்டார். விழுப்புரத்தின் பக்கம் எங்கோ ஓர் இடத்தில் அதை இறக்கி விட்டார். அத்துடன் அந்த நாயை மறந்தும் விட்டார்.

அதன் பிறகு இரண்டு வருஷங்கள் கழித்து, ஏதோ காரணமாகத் திருச்சி போய் விட்டு ரயிலில் சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்து கொண்டிருந்த தாசரதி, மண்டையை உடைத்துக் கொண்டு ஒரு புது மெட்டு அமைப்பதில் முனைந்திருந்தார்.

அது நாள்வரை வாத்தியக் குழுவில் ஒருவராகப் பணியாற்றி வந்த அவரிடம் ஒரு படத்தின் இசை சம்பந்தமான முழுப் பொறுப்பையும் ஒப்படைத்திருந்தார் ஒரு படாதிபதி. அதாவது தாசரதியை இசையமைப்பாளராக நியமித்திருந்தார். அவரைச் 'சங்கீத டைரக்டர்' என்ற வகையில் அறிமுகப்படுத்துவது அதுதான் முதல் தடவை. அந்தப் படத்துக்கு நல்ல மெட்டுகள் அமைத்து, படத்தில் பாட்டுக்கள் நன்றாக அமைந்து விட்டால் பிறகு நல்ல யோக காலம்தான். கிடைத்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இரவும் பகலும் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தார் தாசரதி.

ஒரு வாரத்துக்கு முன்பு படத்தின் டைரக்டர் தாசரதியிடம் ஒரு காட்சியை விளக்கிச் சொல்லிச் சோகம், பயம், வேதனையெல்லாம் ஒருமிக்க கலந்த நிலையில் ஒரு மெட்டு அமைக்குமாறு கூறியிருந்தார். கடந்த ஒரு வாரத்துக்குள் எவ்வளவோ மெட்டுகள் அமைத்துப் பார்த்தார் தாசரதி. எல்லாமே ஏதோ பழைய மெட்டுகளாகவே தோன்றின.

'புதிய கற்பனைக்கு ஒரு பொறியும் கிடைக்க மாட்டேன் என்கிறதே......' என்ற கவலையில் பல ஆங்கில, ஹிந்தி இசைத்தட்டுகளைப் போட்டுக் கேட்டுப் பார்த்தார். ஏதேதோ புதிய கற்பனைகள் தோன்றினவே தவிர, அவருக்குத் தேவையான பயம், சோகம், வேதனை மூன்றும் கலந்த ஒரு மெட்டு அமைக்கும் கற்பனைக்குப் பொறி கிடைத்தபாடில்லை. இந்த நிலையில்தான் அவசரமாகத் திருச்சிக்குப் போய் வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்து கொண்டிருந்த தாசரதியின் சிந்தனை இசையுலகில் அலைந்து திரிந்து கொண்டிருந்தது— ஒரு புதிய மெட்டு அமைப்பதற்காக.

போடு போடென்று வந்து கொண்டிருந்த ரயில் விழுப்புரத்தைத் தாண்டி ஸ்டேஷன் இல்லாத ஓர் இடத்தில் மாடோ, கழுதையோ அடிபட்ட காரணத்தால் சிறிது நின்றது. வெளியில் மையிருட்டு. வானம் இலேசாகத் தூறிக் கொண்டிருந்தது. தவளைகளின் கோஷ்டி கானம் காதைத் துளைத்தது. அதை மீறிக்கொண்டு எங்கோ வெகுதூரத்திலிருந்து மிதந்து வந்த ஒரு நாயின் ஊளைக் குரல் பிரயாணிகளின் மனத்தில் இனம் புரியாத ஒரு திகிலை உண்டுபண்ணியது.

''சனியன்! ஏன் இப்படி அழுது தொலைக்கிறது?'' என்று பல பிரயாணிகள் அலுத்துக் கொண்டனர். அரைத் தூக்கத்திலிருந்த தாசரதியின் செவிகளில் நாயின் ஊளைக் குரல் ஏதோ கனவில் கேட்கும் ஓலக்குரல் போலக் கேட்டது.

ஒரு வழியாக வண்டி நகர்ந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அதன் வேகம் அதிகரித்தது. போடு போடென்று வேகத்தின் உச்ச கட்டத்தில் போகத் தொடங்கியது. செவிகளில் உறவாடிய அந்த நாயின் ஊளைக் குரல் மெள்ள மெள்ள அவர் சிந்தனையுடனும் உறவாடத் தொடங்கியது. இசை சம்பந்தமான முக்கிய நரம்பு ஒன்றையும் மீட்டி விட்டது. அவ்வளவு தான்! கற்பனைக்கு ஆதாரமாக ஒரு சிறு பொறி கிடைக்காதாவென்று ஏங்கிக்கொண்டிருந்த தாசரதி, அந்த நாயின் ஊளைக் குரலையே மையமாகக் கொண்டு அதில் ஜீவன் பெற்றிருந்த ஒரு சில சுரங்களையே பின்னத் தொடங்கினார். உண்மையிலேயே ஒரு புது மெட்டு அமைந்து விட்டது! பயம், வேதனை, சோகம் எல்லாமே ஒருமிக்கக் கலந்திருந்தன.

மறு நாள் வாத்தியக் குழுவுடன் மெட்டைப் பாடிக் காண்பித்தார் டைரக்டரிடம். ''இந்த வருஷத்தின் 'ஹிட்'டாக அமையப் போகிறது பாருங்கள்!'' என்றார் டைரக்டர்.

உண்மைதான். அந்த மெட்டு அவ்வளவு உயர்வாகப் படத்தில் அமைந்திருந்தது. படத்தில் இரண்டு மூன்று கட்டங்களில் பாடப்படும் அந்த ஒரு பாட்டுக்காகப் பல முறை படத்தைப் பார்த்த ரஸிகர்கள் எவ்வளவோ பேர்! படத்தின் இசையைப் பற்றிப் பத்திரிகைகள் பாராட்டி எழுதின.

பிறகு கேட்க வேணுமா? தாசரதியின் வீட்டைப் படாதிபதிகள் முற்றுகை யிட்டனர். கிடுகிடு வென்று பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார். கடந்த இரண்டு வருஷங்களுக்குள் அவர் நிலைமை வெகுவாக உயர்ந்து விட்டது. பெரிய பங்களா, இரண்டு கார்கள், ஒரு சினிமாக் கொட்டகை முதலியவற்றுக்குச் சொந்தக்காரராகி விட்டார்.

இப்பொழுதெல்லாம் சாதாரணமாகக் கண்ட இடங்களில் மெட்டு அமைப்பதில்லை. படாதிபதிகள் தங்கள் காரில் அவரைப் பெங்களூருக்கு அழைத்துச் செல்வார்கள்; அல்லது பெங்களூரைத் தாசரதி இருக்கும் இடத்துக்கு 'எழப் பண்ணி' விடுவார்கள்!

இவ்வளவுக்கும் காரணம்? — ஒரு நாய்!

அந்த நாயை அவர் பார்த்ததில்லை. அதன் குரைக்கும் குரலைக்கூட அவர் கேட்டதில்லை. அது ஊளையிடும் குரல் ஒன்றைக் கொண்டு தான் அந்த நாயைக் கண்டுபிடிக்க வேண்டும்.

எங்கே எந்த நாய் ஊளையிட்டாலும் கவனித்துக் கேட்பார். நூற்றுக் கணக்கான நாய்களின் ஊளைக் குரல்களைக் கேட்டுப் பார்த்து விட்டார். அன்று, அந்த இரவில் ரயிலில் வரும்போது கேட்ட ஊளைக் குரல் மட்டும் அவர் சிந்தையில் தனியாக ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த ஒரு நாயின் அழுகுரலுக்குள்ள பயங்கரமும் உள்ளத்தைக் கசக்கிப் பிழியும் தன்மையும் வேறு எந்த நாயிடமும் இல்லை. எப்படியும் அந்த நாயைக் கண்டு பிடித்து அழைத்து வந்து அதற்கு ஒரு குறையுமின்றிப் பாதுகாக்க வேண்டுமென ஆசைப்பட்டார். இதற்காகவே ஓய்வு கிடைத்த நாட்களில் படாதிபதிகளின் காரை எடுத்துக் கொண்டு விழுப்புரம் வரையில் போய் வரு

வார். பல முறை அந்தப் பக்கம் போய் வந்தும் அந்த நாயின் அழுகுரலை அவரால் கேட்க முடியவில்லை.

நம்பிக்கையை இழந்து அநேகமாக மறந்திருந்த நிலையில் இப்பொழுது அந்த அழுகுரலை, அதே ஊளைச் சத்தத்தை அவர் காதுகள் கேட்டு இன்புற்றன.

அதோடு நாயையும் பார்த்து விட்டார்!

போதாக் குறைக்கு அது அவருக்கு ஏற்கனவே அறிமுகமான நாய்; அவர் விடாப்பிடியாக விரட்டியடித்த நாய்!

எந்த நாயை அவர் துரத்தியடித்தாரோ அதே நாய், அவருக்குப் பெரும் புகழும் தேடித் தந்து அவர் வாழ்க்கைத்தரத்தையே மாற்றி விட்டது! எதனால்? அவரறியாமல் அவர் பிள்ளை போட்ட சோற்றைத் தின்ற நன்றிக்காகவா? தாசரதிக்கு இதை நினைத்துப் பார்க்கவே லஜ்ஜையாக இருந்தது. நாயைக் கண்டுபிடித்ததில் * எல்லையில்லா ஆனந்தம் கொண்டவராய் அதையும் காரில் ஏற்றிக்கொண்டு தமக்காக வைத்திருந்த உயர் ரக பிஸ்கோத்துகளை ஊளையிட்ட நாயின் வாயில் ஊட்டத் தொடங்கினார். வண்டி சென்னையை நோக்கி வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

பங்களாவில் அதைக் கவனித்துக் கொள்வதற்கென்று ஓர் ஆள். வெள்ளிச் சங்கிலிதான் கட்டப்பட்டிருக்கும். நாய் சாப்பிடுவதற்கும் வெள்ளித் தட்டுதான். அதற்கென்று முதல் தரமான உணவு தயாரிக்கப்படும்.

''என்ன இருந்தாலும் கேவலம் ஒரு நாய்! இதற்கு இப்படியா செலவழிப்பார்கள் ?'' என்று அவர் மனைவி ஓரிரு சந்தர்ப்பங்களில் அவரிடம் வருத்தப்பட்டதுண்டு.

''உலகில் நன்றி என்ற பதத்தின் உறைவிடமே நாய்தான். நம் குழந்தை போட்ட ஒரு சில நாள் உணவுக்காக, தானறியாமலே நம் வாழ்வை உயர்த்தி நன்றி காட்டிவிட்டது. அப்படியிருக்க, நாம் அதனிடம் நம் நன்றியைத் தெரிவிக்க வேண்டாமா? இதற்காகப் பிரமாதம் என்ன செலவாகிவிடப் போகிறது? செலவானால்தான் என்ன? இனிமேல் ஒப்பந்தம் செய்யும் தயாரிப்பாளர்களிடம் 'நாயின் போஷணைக்காக இவ்வளவு ஆயிரம்' என்று தனியாகக் கொடுக்கச் சொன்னால் போகிறது! எப்படியோ இந்த நாயை நாம் தெய்வமாகக் கொண்டாட வேண்டும்! நான் எடுக்கப் போகும் படத்தில்கூட ஆரம்பத்தில் எம். ஜி. எம். படத்தில் ஒரு சிங்கம் கர்ஜிப்பதைக் காட்டுவதைப் போல் இந்த நாய் ஊளையிடுவதைக் காட்டப் போகிறேன்....'' என்பார் பெருமையுடன்.

உண்மையில் அந்த நாயைப் பெருமைப்படுத்துவதற்காக என்னென்னவோ மனக் கோட்டைகள் கட்டியிருந்தார். ஆனால் எதையும் செயலாக்குவதற்குள் அவர் உடல் நலம் கெட்டு விட்டது. அடிக்கடி காரில் பெங்களூர் போய் வந்ததால் வயிற்றில் ஒரு மாய வலி ஏற்பட்டு அறுவை சிகிச்சை வரை கொண்டு வந்து விட்டது.

விடிந்தால் ஆபரேஷன். கொஞ்சம் சிக்கலான ஆபரேஷன் என்று டாக்டர்கள் கூறியிருந்தார்கள். முதல் நாள் மாலையிலிருந்தே தாசரதி தைரியத்தை இழந்து கொண்டிருந்தார். தமக்கு வரவேண்டிய பண விஷயங்கள், பிள்ளையைப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வரும் விஷயம் முதலியவற்றைப் பற்றியெல்லாம் மனைவியிடம் கூறினார். தமது அருமை நாயை ஒரு குறையுமின்றி வளர்க்க வேண்டும் என்றும் கூறினார்.



*ஓவியர்: இந்த ஓவியத்தை நான் இப்போது தான் எழுதி முடித்தேன். எழுதத் தொடங்கியபொழுது இது என்னவாயிருக்கும் என்ற எண்ணமே என் மனத்தில் எழவில்லை.

நண்பர்: இப்பொழுதாவது இது என்ன படம் என்று தெரிந்துவிட்டதோ?

இரவு நெருங்க நெருங்க அவர் திகில் அதிகமாகிக் கொண்டிருந்தது. நடு நிசி வரை மனைவியையும் பிள்ளையையும் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார். கட்டிலில் படுத்தவாறே ஜன்னல் வழியாக வெளியில் பார்வையைச் செலுத்தினார். ஒரே அந்தகாரம். வெளியில் மழை தூறிக் கொண்டிருந்தது. தவளைகளின் கோஷ்டி கானம் இடைவிடாது கேட்டது. இதே சூழ்நிலையில் முன்பு ரயிலில் பிரயாணம் செய்தது நினைவுக்கு வந்தது. கண்களை மூடியவாறு சிந்தையை அந்தப் பிரயாண தினத்துக்குச் செலுத்தினார். ஓர் ஊளைக் குரல் கேட்டது! புருவத்தை நெறித்தவாறு செவிகளைத் தீர்க்கமாக்கினார். நாயின் ஊளைக் குரல் பயங்கரமாகக் கேட்டது. விழிகளைத் திறந்து மனைவியைப் பார்த்து, ''அப்போது போல அந்த ஊளைக் குரல் என் காதில் ஒலிக்கிறது.......!'' என்றார்.

''இப்பொழுதும் நம் நாய்தான் ஊளையிடுகிறதப்பா......!'' என்றான் பிள்ளை. தாசரதி கவனித்துக் கேட்டார். உண்மையாகவே அது ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

இரண்டு விநாடிகள் விழிகளை மூடியவாறு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு ஏதோ வெறி பிடித்தவர் போல எழுந்து உட்கார்ந்து, ''அந்த நாயை அடித்து விரட்டுங்கள்! எனக்கு எமனைக் கூவி அழைக்கிறது! விடிந்தால் ஆபரேஷன்! ஐயய்யோ! மீண்டும் ஊளையிடுகிறதே!...... அதை எங்காவது துரத்துங்களேன்!'' என்று கத்தினார் தாசரதி.

''நம் நாயப்பா!'' என்றான் மைந்தன்.

''இல்லேடா! அது நம் நாயல்ல.... எமனுடைய நாய்..... அவனைக் கூவி அழைக்கிறது! சீக்கிரம்! அதை எங்காவது நூறு ஆயிரம் மைல்களுக்கப்பால் விரட்டியடியுங்களேன்!..... இன்னொரு தரம் அதன் குரல் என் காதில் விழக் கூடாது!.....'' என்று கூறியவாறு மயங்கிய நிலையில் படுக்கையில் சாய்ந்தார் தாசரதி.

எங்கோ ஓர் இடத்தில் தன்னந் தனியாக நின்று கொண்டு அந்த நாய் இன்னமும் அழுது கொண்டிருக்கிறது!

எதை நினைத்து?...

வாழ்க்கை வாழ்வதற்கே

ஒரு தமிழ்ப் படத்தின் வெற்றிக்கு இன்றியமையாத முதல் அம்சம் — நல்ல கதை. இரண்டாவது, நல்ல பாடல்கள். மூன்றாவது, பாத்திரங்களின் படைப்பு. நான்காவது நடிப்பு. ஒரு படத்தில், இவைகளில் ஒன்று கூட இல்லையென்றால்....?

திரைக் கதை ஒரே குழப்பம்; அக்குழப்பத்திலின்று ஒருவாறு வெளியேறினால் பாடல்களின் தலை வேதனை. இந்தக் கஷ்டங்கள் போதாக்குறைக்கு அசட்டு நடனங்கள் நிறைய வருகின்றன. கூடவே அழகுப் போட்டி என்ற அசம்பாவிதம் வேறு. கதாபாத்திரங்கள் ஒன்றுக்கும் உபயோகம் இல்லாத ஓட்டை, உடைசல்கள்! ஜெமினி கணேசன் வருகிறார். சரோஜா தேவி பல உடைகளில் தோன்றித் துள்ளி விளையாடுகிறார். அசோகன் வருகிறார். எம். வி. ராஜம்மா வருகிறார். உம், யார் வந்தாலென்ன? எல்லாரையும் திரைக் கதை தீர்த்துக் கட்டி விட்டது! ஒரு குடும்ப ஸ்திரீக்கும் அவள் வீட்டு வண்டிக்காரனுக்கும் தகாத உறவு இருப்பதாகக் காட்டி மாசு கற்பித்து அவளை வீட்டை விட்டு வெளியேற்றுவதாகக் காட்டுவது சகிக்கக் கூடியதாக இல்லை. அந்தப் பாழாய்ப் போன சம்பவம்தான் படத்தின் 'சஸ்பென்ஸ்'!

''ஆடக் காண்பது காவிரி வெள்ளம்'' என்னும் பாட்டை ''ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்'' என்னும் பிரசித்தி பெற்ற திருக்குற்றாலக் குறவஞ்சிப் பாடலை அறியாதவர்கள் வேண்டுமானால் ரஸித்து மகிழ்வார்கள்! பண்டை நூல்களிலிருந்து வரிக்கு வரி தஸ்கரம் செய்வது என்ன மரபோ!

குப்பையிலே குருக்கத்தி போல், தங்கவேலுவின் இரட்டை வேடம் இப்படத்தில் தலை நிமிர்ந்து நிற்கிறது. எல்லாரையும் சிரிக்க வைப்பதோடு தம் கைதேர்ந்த நடிப்பினால் ரஸிக்கவும் வைக்கிறார் தங்கவேலு. இத்தனைக்கும் அவர் இரட்டை வேடம் படத்துக்கு அதிகம் தொடர்புடையதல்ல. அந்தச் சம்பவத்தையும் சரியாய்ப் புனையவில்லை. அசட்டுப் பிசட்டென்று என்னவோ போல் இருக்கிறது. ஆயினும் ''வாழ்க்கை வாழ்வதற்கே'' படத்தைப் பார்க்கப் போவதானால் தங்கவேலுவைப் பார்ப்பதற்காகவே போகலாம்! ஆனால் தங்கவேலு பேசும் பேச்சில் சில இடங்களில் உட்பொருளாக விரஸம் தொனிப்பதைக் கண்டித்தேயாக வேண்டும்.

சினிமாப் படங்களின் சிறப்பு அம்சமான 'டெம்போ'வை நம் படங்களில் மருந்துக்குக் கூடக் காண முடியாமல் இருப்பதனால்தான் நம் தமிழ்ப் படங்களைப் பார்க்கவே அலுப்பு உண்டாகி விடுகிறது. இந்தப் படம் மாட்டு வண்டி வேகத்துக்கும் குறைந்த கதியில் செல்லுவது பெரிய சோதனையாயிருக்கிறது. படத்தை நீட்டுவதற்காக ஒரு பைத்தியத்தையும் ஆஸ்பத்திரியையும் சேர்த்திருக்கிறார்கள். தாயின் மீது கற்பிக்கப்பட்ட களங்கத்துக்காக மகன் வருந்துவதும், முடிவில் அந்த மாசு தானாகவே நீங்குவதும் நமக்குப் புதியவையல்ல. தமிழ் தோன்றித் தமிழ்ப் படங்கள் தோன்றாக் காலத்துக்கு முன்பிருந்தே நாம் அறிந்தவைதான்!


''கல்யாணப் பரிசு'', ''பாலும் பழமும்'', ''ஆடிப் பெருக்கு'' முதலிய படங்களில் நடித்து நல்ல பெயருடன் விளங்கும் சரோஜா தேவி இம்மாதிரி விவஸ்தை கெட்ட படங்களில் நடித்துப் பெயரைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம்.

காதல் காட்சிகள் வரவரத் தமிழ்ப் படங்களில் அளவுக்கு மீறிப் போகின்றன. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமல்லவா? கன்னத்தோடு கன்னம் உரசுவதும், கட்டிப் பிடிப்பதும் தாட்சண்யமின்றி வெட்டியெறிய வேண்டிய காட்சிகள்!

புகழ்பெற்ற டைரக்டர்கள் கூடச் சரியான கதையில்லா விட்டால் சரிந்து விழுந்து விடுவார்கள் என்பதற்கு இந்தப் படம் நல்ல உதாரணம்! நல்ல டைரக்டர்களான கிருஷ்ணன் பஞ்சுவையே பழி வாங்கி விட்டதே!

''புதையல்'' எடுத்துப் புகழ்பெற்ற கமால் பிரதர்ஸ் இதையும் ஒரு படம் என்று நினைத்து எடுத்திருக்கிறார்களே! என்னத்தைச் சொல்ல!

—காந்தன்



நீரோட்டம்

எஸ். ரங்கநாயகி

யசோதை எவ்விதப் புயலுக்கும் வளைந்து கொடுக்கும் செடியாகத் தன் மனத்தைப் பண்படுத்திக்கொண்டு விட்டவள். பூத்துக் குலுங்கி விதைகளும் கிளைகளுமாக நிற்க விரும்பிப் பார்ப்பதை அவள் என்றோ மறந்து விட்டாள். சொல்லப் போனால் விரும்பிப் பார்க்க நேரமே அவளுக்கு இருந்ததில்லை.

''சுசீலா! இதோ பார், நீ இவ்விதமெல்லாம் நினைப்பது தவறு. அவரவர் மனப் பண்பாட்டைப் பொறுத்து வாழ்க்கையை அனுபவித்துக் கொள்ளுகிறோம். வயதுக்கு ஏற்ற தகுந்த ஜோடியாக இருக்கலாம். ஆனால் வறுமையின் காரணமாக அவர்களின் வாழ்க்கை துன்புறும்; அல்லது இரு உருவங்களும் இரு துருவங்களாக அமையுமானால் வாழ்க்கை கெட்டு விடுகிறது. வேறு சிலர் வயது ஏற்றத் தாழ்வு காரணமாக மன நோய் கொள்கிறார்கள். ஆனால் என்வரையில் ... சுசீலா, என் முகத்தைப் பார்.. என் கண்களைப் பார். அகத்தின் அழகு முகத்தில் பிரதிபலிக்கும் என்பார்கள். என் மன விருப்பம் என் முகத்தில் பிரதிபலிக்காவிடில் என் மனம் இன்னும் பக்குவமடையவில்லை என்பதுதான் பொருள்....என் முகத்தில் நீ...''

சுசீலா யசோதையை ஏறிட்டு நோக்கினாள். அவள் கண்களில் காணப்பட்டது சுசீலாவின் உருவம். அதுமட்டுமல்ல; அனைவருக்கும் அன்பை வாரிச் சொரியும் நிஷ்களங்கமான ஊற்று...

''சித்தி! நான் பாக்கியசாலிதான்...''

''சுசீலா! உலகத்தில் மற்றவர்களிடையே என் சுக வாழ்வைக் காணவே நான் விரும்புகிறேன்...''

சுசீலா அவளைக் கழுத்தோடு கட்டி அணைத்துக் கொண்டு விட்டாள். இருவரும் அந்த நிலையில் எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தார்களோ, வாசலில் காலடிச் சத்தம் கேட்டபோதுதான் இருவரும் திடுக்கிட்டுத் திரும்பி நோக்கினர். வெளியே சென்றிருந்த ராஜு திரும்பி விட்டிருந்தார்.

''சுசீலா! சாமான்களெல்லாம் வாங்கி வந்து விட்டேன். சமையலுக்குச் சீக்கிரம் ஏற்பாடு செய்யச் சொல்லம்மா. எனக்குத் தலைவலி. சீக்கிரம் படுத்து விட்டால் தேவலை.'' பையிலிருந்த சாமான்களை எடுத்தபடி ராஜு கூறினார்.

யசோதை சமையலில் ஈடுபட்டாள். சுசீலா அவளுக்கு உதவியாக வேலை செய்ய முன்வந்தபோது யசோதை அவளை வேலை செய்ய விடவில்லை.

''சித்தி! நீ இதுபோல் தள்ளினால் எனக்குப் பிடிக்காது. அம்மாவாக நினைத்துக்கொள் என்றாயே! அம்மா இப்படித்தான் பிடித்துத் தள்ளுவாளோ?'' என்று சுசீலா முரண்டினாள்.

''சும்மா கிட, மகளே! விவாகத்துக்கு இருக்கும் பெண் வேலை செய்தால் உடம்பு இளைத்துவிடும்.''

''நன்றாக இளைத்து விவாகமே ஆகாமல் இருக்கட்டும். அதுதான் எனக்கு வேண்டும்...இதோ பார் சித்தி! இவ்வளவு நாட்களாக விவாகத்தில் எனக்கு ருசி இருந்தது. இப்பொழுது நீ வந்த பிறகு விவாகம் செய்து கொண்டு இந்த அன்புச் சித்தியை விட்டுப் போக எனக்குப் பிடிக்கவே பிடிக்காது.''

''நன்றாகத்தான் சொன்னாய் போ! அப்புறம் நான் எப்பொழுதுதான் பாட்டியாக முடியும்?'' சுசீலாவின்கன்னத்தை நிமிண்டியபடி செல்லமாகக் கேட்டாள் யசோதை.

''நீ பாட்டியாக ஆகவே வேண்டாம் சித்தி! பொழுதைக் கழிக்க எனக்கு ஒரு தம்பியை மட்டும் கொடுத்துவிடு'' என்று வேடிக்கையாகத்தான் சுசீலாவும் கூறினாள்.

யசோதையின் முகம் சட்டென மங்கியது. அவள் அதை மறைக்க முயன்று கிணற்றடிக்குத் திரும்பினாள்.

சுசீலாவோ அவளைக் கவனிக்கவில்லை. பெற்றெடுத்த தாயிடம் கேட்க முடியாத, கேட்டு அறியாத அன்பையும், ஆதரவையும் யசோதையிடம் அவள் தடங்கலற்ற, சிக்கலற்ற பிரவாகமாக அடைந்தபோது அக்கணத்திலேயே அவளுக்கு ஆனந்த

மயமாகத் தோன்றியது. உள்ளத்தில் குதூகலம் நிரம்பியது. எப்பொருளும் இன்பம் நிறைந்ததாகக் காணப்பட்டது.

யசோதையிடம் ஊர்க் கதைகளை எடுத்துக் கூறினாள் சுசீலா. யசோதை யும் சிரித்த முகத்துடன் கேட்டுக் கொண்டாள்.

ராஜு சாப்பாட்டு நேரத்துக்குக் கீழே இறங்கி வந்தார். மௌனமாகச் சாப்பிட்டார். மீண்டும் மாடிக்குச் சென்று விட்டார்.

யசோதையும் சுசீலாவும் சாப்பிட அமர்ந்தனர். தட்டு எடுத்து வர மாடிக்



குப் போனாள் சுசீலா. மாடி வராந்தா வில் உலாவிக் கொண்டிருந்தார் ராஜு.

''அப்பா! தலை வலிப்பதாகக் கூறி னீர்கள். அந்தப் பனியில் ஏன் உலாவு கிறீர்கள்?'' என்று கேட்டாள் சுசீலா.

''சுசீலா! இங்கே வாம்மா. நான் உன்னைக் கேட்காமல் செய்துவிட்டதை நீ தவறாக எடுத்துக் கொள்ள மாட் டாயே? எல்லாம் உன் நன்மைக்காகத் தான் தாலிச் சரட்டைத் தூக்கினேன்.'' ராஜுவின் மனத் தவிப்பு இன்னும் அவரை விட்டு அகலவில்லை போலும்.

சுசீலாவின் மனத்தில் தந்தையிடம் இரக்கம் சுரந்தது. ''அப்பா! நீங்கள் செய்ததைப் பற்றி வருத்தமில்லை. ஆனால் என்னையொத்த ஒரு பெண்ணின் வாழ்வை நாம் பலிகொண்டதுதான்...''

''உண்மைதான் சுசீலா. ஆனால் இந்த இடம் அவர்கள் பார்த்திருந்த இடத்தை விட எவ்வளவோ மேலல் லவா? சரி, நீ போய்ச் சாப்பிடு...''

சுசீலாவும் யசோதையும் பேசிப் பேசிச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு சமையலறையிலிருந்து வெளியே வந்த போது வெகு நேரம் ஆகிவிட்டது.

யசோதை தன் படுக்கையைக் கீழே கூடத்தில் விரித்தபோது சுசீலா திடுக் கிட்டாள். ''சித்தி! படுக்கையைச் சுருட்டு. எனக்குத் தனியே படுக்கும் பழக்கம் உண்டு. நீ மாடிக்குப் போய்ப்

படுத்துக் கொள்!'' என்றாள் கட்டளை இடும் குரலில்.

''சும்மா கிட, சுசீலா. நான் உன் சித்தி என்பதை மறந்து விடாதே!''

''எல்லாம் எனக்குத் தெரியும். நீ எனக்குச் சித்தியேயானாலும் புது மணம் புரிந்தவள். மாடிக்குப் போ.''

யசோதை அவள் வார்த்தைக்குச் செவி சாய்க்கவில்லை. தன் படுக்கையில் உடலைக் கிடத்தி விட்டாள். சுசீலா எவ்வளவு கூறியும் அவள் அசைந்து கொடுக்கவில்லை.

சுசீலா விர்ரென மாடிக்கு ஓடினாள். அங்கு தந்தையின் அறைக் கதவு தாளிடப்பட்டிருந்தது. ஜன்னல் மூலமாகப் பார்த்தாள். தந்தை ஆழ்ந்த நித்திரையிலிருந்தார்.

''அப்பா.... அப்பா....!'' என்று சுசீலா கூவினாள்.

கண்ணை விழித்துப் படுக்கையிலிருந்தபடியே ''என்னம்மா சுசீலா?'' என்றார்.

''கதவைத் திறவுங்கள். சித்தி இங்கே வந்து படுக்கட்டும்.''

''எனக்குத் தெரியும். நீ போய்ப் படு'' என்று கூறிய ராஜு, போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டார். ''சுசீலா! பெரிய கொசு வலையை இருவருக்கும் கட்டிவிட்டுப் படுத்துக் கொள்ளுங்கள். கொசு பிடுங்குகிறது.''

சுசீலா, ஆத்திரத்துடன் கீழே இறங்கினாள். ''சித்தி! நான் உன்னோடு பேசவே மாட்டேன்.''

''என் கண்ணல்லவா, சித்தியோடு பேச வேண்டாம். அம்மாவோடு பேசு. மடியிலே போட்டுத் தாலாட்டுப் பாடினால், குழந்தை பேச வந்துவிடுமே...'' யசோதை கொஞ்சலுடன் கூறியதும் சுசீலாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

எவ்விதமோ சுசீலா தூங்கிவிட்டாள். யசோதைக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. புது இடத்தில் புது நிகழ்ச்சிகள் அனைத்தும் கண் முன்னே தோன்ற, மனத்துள் ஒரு சிறு துன்பமும் நடுநடுவே எட்டி எட்டிப் பார்த்தது.

''சித்தி... சித்தி....!''

''என்ன சுசீலா! என்ன கூப்பாடு? கிளம்பி விட்டாயல்லவா?'' என்று யசோதை சமையல்கட்டிலிருந்து வெளியே வந்தாள்.

''சித்தி! நான் எப்போதோ கிளம்பி விட்டேன். நீதான் இன்னும் கிளம்பினபாடில்லை.''

''நானும் புறப்படத் தயாராகி விட்டேனே சுசீலா!''

''உக்கும்! தயாரான அழகைப் பார்! இன்னும் புடவைகூட மாற்றவில்லை. கிளம்பிவிட்டாயாக்கும்.. இதோ பார் சித்தி, இந்தப் புடவை அப்பாவுக்கு ரொம்பப் பிடிக்கும். இதை நீ உடுத்திக்கொள்...'' பெட்டியிலிருந்து ஆழ்ந்த நீலத்தில் ஓரத்தில் ஜரிகை தாமரைப் பூக்கள் போட்ட புடவையை எடுத்து வெளியே வைத்தாள் சுசீலா. அவள் அம்மாவுக்கு அந்தப் புடவையை வாங்கி வந்தபோது வீட்டில் நடந்த நிகழ்ச்சி அவளுக்கு நன்றாக நினைவிருக்கிறது. தீபாவளிக்குப் பட்டுப்புடவை வாங்க வேண்டுமென அவள் அம்மா மீனாட்சி துடித்தாள். அந்த வருஷம் கையில் பண நெருக்கடி. மீனாட்சியின் பிடிவாதமோ அதற்குமேல் நெருக்கடியாக இருந்தது. சுசீலா தன் தந்தையின் நிலை அறிந்து கொஞ்சம் விட்டுக் கொடுத்தாள். மகளுக்குப் பத்து ரூபாயில் ஒரு புடவை வாங்கிக் கொடுத்து விட்டு, தனக்கான புது வேஷ்டியையும் மறந்து எல்லாப் பணத்தையும் கலந்து மனைவிக்குப் புடவை வாங்க நிச்சயித்தார். மறுநாள் தீபாவளி. ராஜு தாமே கடைக்குச் சென்று தமக்குப் பிடித்த நீலக் கலர் புடவையை எடுத்து வந்து விட்டார். மீனாட்சி ராட்சத உருவாக அன்று இரவு முழுவதும் கூச்சல் போட்டதைச் சுசீலா இன்னமும் மறக்கவில்லை. மீனாட்சிக்கு நீல வர்ணம் பிடிக்கும். ஆயினும் தானே கடைக்குச் சென்று பொறுக்காத ஆத்திரம். தீபாவளி அன்றும் அவள் அந்தப் புடவையை உடுத்தவேயில்லை. புதுப் புடவையாகவே இன்னமும் இருந்தது.

''சுசீலா! இடுப்பில் இருக்கும் புடவையே நன்றாக இருக்கிறது. நீ சீக்கிரம் கிளம்பு.''

''முடியாது சித்தி. நீ இதை உடுத்த வேண்டும். அப்போதுதான் நான் கிளம்புவேன்... சித்தி! எனக்கு இப்பொழுதுதான் புரிகிறது. நீ நன்றாக உடுத்தி நல்ல அலங்காரங்களை இந்த வயதில் செய்து கொண்டால்தானே நன்றாக சந்தோஷமாக வாழ முடியும்? நீ பட்டிக்காட்டிலிருந்து பட்டணத்துக்கு வந்தபிறகும், பட்டிக்காட்டுத்தனமாக நடந்து கொள்வதால்தான் அப்பா உன்னோடு பேசக்கூட மாட்டேன் என்கிறார்... நான்தான் சொல்கிறேனே, அப்பாவுக்கு இந்த வர்ணம் நிரம்பப் பிடிக்கும்...'' சுசீலா புடவையை அவளிடம் நீட்டினாள்.

புடவையை வாங்கி மீண்டும் பெட்டியிலேயே வைத்துவிட்டாள் யசோதை. ''பைத்தியக்காரப் பெண்ணே! எனக்கொரு மாப்பிள்ளை வந்து பேரன் பிறக்கும் நிலைக்கு வந்துவிட்டேன். இப்பொழுது புதுப் புடவை உடுத்தவா

காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும் புதுமையுடனும் இருங்கள்




உன்னதமான காஷ்மீர் பொக்கேயின் தரம், ஒரு அழகுசாதன டால்க்... ஒரு குழந்தைக்கான பவுடர் இவ்விரண்டையும் அளிக்கிறது.

காஷ்மீர் பொக்கே டால்க்கின் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தை நீங்கள் உணரும்பொழுது ஒரு பூச்செண்டிற்குள் இருப்பது போலவே தோன்றும். உடல் முழுவதும் தடவிக் கொண்டு அதன் ஊற்றுப்பெருக்கென எழும் புதிய நறுமணத்தில் திளைத்து மகிழுங்கள்



குழந்தையை இதமுடனும் சுகமுடனும் வைத்திருங்கள். காஷ்மீர் பொக்கே, எந்த ஒரு விசேஷ குழந்தைக்கான பவுடரைப் போலவே, மிருதுவும் பட்டுப்போன்றதுமான து. நீங்கள் இருவருமே உபயோகிக்கக்கூடிய அவ்வளவு சௌகரியமான ஒரே பவுடர்!



காஷ்மீர் பொக்கே

டால்கம் பவுடர்—ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ளது!

C.B.S-15-TAM.

எனக்கு நேரம்?... இதோ பார், சுசிலா, நீ வாழ்க்கையில் இந்த வயதுக்கு வேண்டிய நெளிவு சுளிவுகளைத் தெரிந்து கொள். அதுவே எனக்குப் போதும்!'' பூக்கூடையை எடுத்துக்கொண்டு வாசற் படிக்கு வந்துவிட்டாள் அவள்.

சுசிலா முகத்தைத் தூக்கிக் கொண்டாள். ''இதோ பார் சித்தி, நான் உன்னோடு பேசவே மாட்டேன். கோவிலுக்கும் வர மாட்டேன்.''

''வேண்டாம் சுசிலா! இருவரும் வீட்டிலேயே இருந்து கொண்டு அருட்பாவையும், அம்பிகை நாமாவளியையும் படித்து விட்டால் கடவுள் தரிசனம் போல் ஆயிற்று. நீதானே கபாலி கோயில் காட்டுகிறேன், வா எனப் பிடிவாதம் பிடித்தாய்?'' வெளியே வைத்த காலை மீண்டும் உள்ளே வைத்தாள் யசோதை.

''அப்பப்பா! உன் பிடிவாதத்துக்கு அம்மாவின் பிடிவாதமே எவ்வளவோ தேவலை... சரி சரி, அப்பா மாடியில் இருக்கிறார் பார். கூப்பிட்டுக் கதவைத் தாளிட்டுக்கொள்ளச் சொல்.''

''நீயே சொல்லிவிடேன்.''

''முடியாது. நீதான் கூப்பிட்டுச் சொல்!''

''எப்படிக் கூப்பிடட்டும்? 'மிஸ்டர் ஹஸ்பெண்ட்! கதவை மூடிக்கொள்ளுங்கள்' என்று கூறட்டுமா? அல்லது 'திருவாளர் கணவனாரே' என்று விளிக்கட்டுமா?... ஐயோடி பெண்ணே, வீட்டில் மகள் என்று ஒருத்தி இருந்தால் அவள் தான் எல்லாம் செய்ய வேண்டும்.''

''நீ ஒன்றும் என்னை ஏமாற்ற வேண்டாம். இங்கிருந்து கூப்பாடு போட வேண்டாம். மாடிக்குப் போய்ச் சொல்லி விட்டு வா.''

''வேண்டாமடி பெண்ணே. மாடிக்கு ஏறுவதென்றாலே எனக்குக் கால் வலி வந்துவிடும்'' என்று கூறிய யசோதை இருந்த இடத்திலேயே உட்கார்ந்து விட்டாள்.

சுசிலா மீண்டும் தோற்றுவிட்டாள். அவள்தான் தந்தையைக் கூப்பிட்டு, 'கதவைத் தாளிட்டுக் கொள்' என்றாள்.

போகும்போது சுசிலா மனம் தவித்துக் கொண்டே சென்றாள். இந்த அப்பா ஏன் இப்படி இருக்கிறார்? அநியாயமாக ஒரு பெண்ணின் வாழ்வைப் பாழ்படுத்தினார். அவள் வந்த பிறகு அவளுடன் சந்தோஷமாகக் கலகலப்பாகப் பேசி அவளுக்குக் கொடுத்து விட்ட துயரத்தைச் சிறிதாவது மறக்கும்படி செய்யலாம். அப்படியும் இல்லை. அம்மா இருந்தவரை சமையல் வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்தவர், இப்போது மாடியை விட்டுக் கீழே இறங்கவே யில்லை. தேவை முழுவதையும் சுசிலாவின் மூலமே அவர் நிறைவேற்றிக் கொண்டார். யசோதையோ மாடியின் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. இருவரும் சரளமாகப் பழக எவ்வளவோ சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தாள். யசோதை அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. சுசிலா மன வேதனை அடைந்தாள்.

கோவிலுக்குள் சென்றனர் இருவரும். கோவிலில் வசந்தோற்சவம். சனீசுவரர் சந்நிதிக்கு முன் பக்கத்தில் போடப்பட்டிருந்த பந்தலில் கச்சேரி நடந்து கொண்டிருந்தது.

சுசிலாவும் யசோதையும் கற்பகாம்பாள் சந்நிதியில் நுழைந்தனர். அங்கு ஒரே கும்பல். சுசிலா கண்களை மூடிய படியே நின்றிருந்தாள். யசோதை, அவளது காதோடு ''பிரமாத தியானத்தில் ஆழ்ந்து விட்டாயே. தீபாராதனை நடக்கிறது. கன்னத்தில் போட்டுக்கொள்'' எனக் கூறித் தோளைத் தட்டி விட்டாள்.

''சித்தி! நான் என்ன பிரார்த்தனையில் ஈடுபட்டேன் என்பது தெரியுமா?'' என்று சுசிலா பிராகாரத்தைச் சுற்றி வரும்போது கேட்டாள்.

''வயசுப் பெண்கள் என்ன பிரார்த்திப்பார்கள் என்பது யாருக்குத்தான் தெரியாதாம்?'' என்று மென்னகையுடன் கூறினாள் யசோதை.

''அப்படியானால், சித்தி, உன் மீது எனக்கு மேலும் இரக்கம் உண்டாகிறது. உங்கள் ஊர்க் கோவிலில் நீ எப்படியெல்லாம் பிரார்த்தித்துக் கொண்டாயோ! அந்தச் சாமி உன்னை நன்றாக ஏமாற்றி விட்டார்.''

சடக்கென யசோதை தலையைத் தூக்கிச் சுசிலாவை நோக்கினாள். ஒரு பெருமூச்சு விட்டாள்; தலையைக் கவிழ்த்துக்கொண்டாள். அவள் பார்வையில் சுசிலா சங்கடப்பட்டு விட்டாள்.

மெதுவாக யசோதையின் தோளைப் பற்றிய சுசிலா கூறினாள்: ''சித்தி! நான் இது போல் உன்னைக் குத்திக் காட்டுவது தவறுதான். ஆனால் இப்படிச் சொல்லிச் சொல்லியாவது நீயும் அப்பாவும் சரளமாகப் பழக வேண்டும் என்பதுதான் என் விருப்பம். வாழ்க்கையை முழுதும் மாய்த்துவிடக் கூடாது சித்தி. நான் அம்மன் சந்நிதியில் அதைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். நீயும் அப்பாவும் இன்புற்று வாழ வழி செய்யக் கடவுளைக் கெஞ்சத்தான் கோவிலுக்கு வந்தேன்....

கபாலி ஆண்டவனிடமாவது முறையிட எண்ணம்...'' சுசீலாவின் கண்களில் நீர் துளித்தது.

யசோதை பதில் கூறவில்லை. அம்மன் சந்நிதியிலிருந்து கபாலியின் சந்நிதிக்குள் நுழைந்தபோதுதான் அவள் வாய் திறந்தாள். ''சுசீலா, நல்ல கணவனைக் கிடைக்க வேண்டிக்கொள். அநாவசிய வேண்டுதல்களைச் செய்து கொண்டு உன் நேரத்தையும், கடவுள் நேரத்தையும் வீணாக அடிக்காதே'' என்றாள்.

சனீசுவரன் சந்நிதியை நோக்கி இருவரும் சென்று கொண்டிருந்தபோது, ''சுசீலா, ஏ சுசீலா!'' என்ற குரல் கேட்டுச் சுசீலா திரும்பினாள்.

அவள் சிநேகிதி ரமா அவளை நோக்கி ஓடோடி வந்து கொண்டிருந்தாள்.

''அடேடே, ரமாவா? எப்போ வந்தாய்? விவாகம் முடிந்து போனால் தான் என்ன? இப்படிப் பம்பாயோடு ஐக்கியமாகி விடவேண்டுமா?''

''நானும் நீயும் இணைந்து படித்தது, பேசியது எல்லாம் எனக்குப் பசுமையாக நினைவிருக்கிறது.... உன்னை நினைக்காத நாளே கிடையாது...''

''சும்மா கதை அளக்காதே. நினைவிருந்தவள்தான் கடிதம் எழுதினாயாக்கும்! சுகமாகத்தானே இருக்கிறாய்?''

''நல்லாத்தான் இருக்கிறேன் சுசீலா. சென்னைக்கு வரவேண்டிய சந்தர்ப்பமே இல்லாமல் அப்பாவும் டில்லிக்கு மாற்றிப் போய் விட்டார். இப்பொழுது இங்கு ஒரு கலியாணத்துக்கு வந்தோம். உன்னுடைய வீட்டுக்கு நாளை வருவதாக இருந்தேன். உன்னை இங்கேயே பார்த்து விட்டேன்.''

''இங்கு பார்த்துவிட்டதால் நின்று விடாதே. நாளைக்குக் கண்டிப்பாக வீட்டுப் பக்கம் வா...... உன் கணவர் வரவில்லையா, ரமா?''

''ஓ, வந்திருக்கிறாரே! மகிழ மரத்தடியில் நிற்கிறார் பார்.....'' ரமா சுட்டிக் காட்டினாள்.

யசோதையும் சுசீலாவும் திரும்பி நோக்கினர். அருகில் மகிழ மரத்தடியில், அவர்களை நோக்கியபடி ரமாவின் கணவர் நின்று கொண்டிருந்தார்.

சுசீலா யசோதையை நோக்கிக் கூறினாள். ''இவள் யாரென்று நான் உனக்குக் கூறவில்லையே. இவள்தான் என்னுடன் படித்த ரமா. விவாகம் பாதிப் படிப்பில் நடந்தது. விவாகம் இனிதாக முடிந்தது; படிப்பு இனிதாக நின்றது. நானும் இவளும் இணை பிரியாதவர்கள் என்று பெயர். இவளோ, இணைந்தவனோடு ஓடி என்னை மறந்து விட்டாள். பார்த்து நான்கு வருடங்கள் ஆகிவிட்டன.... சே, சே! சிநேகத்தை இவ்வளவு எளிதில் மறந்து விடக் கூடாது.''

''வைத்தியரய்யா! என்ன இப்படி ஒரே பத்தியமா வச்சுட்டிங்க, ஒண்ணுமே சாப்பிடக் கூடாதுன்னு!''

''இப்படி நாலு காசு மிச்சப்படுத்தினால் தானேப்பா என் மருந்துக்குள்ள பணத்தை உன்னாலே கொடுக்க முடியும்?''



''சும்மா கிடடீ சுசி. விவாகம் ஆனதும் நீயும் இப்படித்தான் அனைவரையும் மறந்து ஓடிவிடுவாய். கிடக்கட்டும்! என்னை இவளுக்கு அறிமுகம் செய்து வைத்தது போல், இவள் யார் என்று எனக்குச் சொல்ல வேண்டாமா? உன் வயதில் உனக்கு உறவினர்கள் உண்டு என்று நீ கூறியதேயில்லையே! அல்லது புதிதான தோழியா?'' ரமா யசோதையைக் காட்டிச் சுசீலாவிடம் கேட்டாள்.

சுசீலாவுக்குத் திக்கென்றது. இந்த இக்கட்டான நிலையை அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ரமாவுடன் ஏன் பேச்சுக் கொடுத்தோம் என்று அவள் மனம் கலங்கியது. பள்ளிப் படிப்பு நாட்களில் இருவரும் சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைப் பற்றி ஒரே மனத்துடன் காரசாரமாக மற்றவர்களுடன் விவாதித்திருக்கிறார்கள். யசோதையின் உண்மையான உறவை எடுத்துக் கூறினால் ரமா என்ன நினைப்பாள்! சே, சே! அப்பாவினால் எவ்வளவு தர்மசங்கடம்....?

''சுசீலா, என்ன பதில் கூறவில்லையே!''

''இவள் ....இ...வள்...யசோதை!''

''நல்ல புத்திதான் போ. யசோதை என்று கூறிவிட்டால் மட்டும் போதுமா? உறவா? தோழியா?''

''யாராக இருந்தால் என்ன? இவள் யசோதை.'' சுசீலா வெட்டுப் போட்டது போல் கூறினாள்.

''சுசீலா! தோழியிடம் ஏன் கோபிக்கிறாய்?.... ரமா! நான் இவளுடைய சித்தி.'' — யசோதை குறுக்கிட்டுக் கூறினாள். சுசீலா கோபத்துடன் யசோதையை விழித்துப் பார்த்தாள்.

''சித்தியா? சுசீலா, தேவலையே! உன் அம்மாவைக் காட்டிலும் உன் அம்மாவின் சகோதரி நல்ல மாதிரி இருப்பாள் போலிருக்கிறது'' என்றாள் ரமா.

''என் அம்மாவைப் பற்றி ஒருவரும் விமரிசனம் செய்ய வேண்டாம்'' என்றாள் சுசீலா சினத்துடன். **(தொடரும்)**

வேங்கடத்துக்கு அப்பால்....


தலைநகரில் திருக்கோயில்கள்


முன்னைப் பழம் பொருட்கும்
முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்தும் அப் பெற்றியனே

என்று எல்லாம் வல்ல இறைவனைப் பாடுகிறார் மணிவாசகர். அப்படியே நம் நாட்டின் தலைநகரான தில்லியைப் பற்றியும் நாம் பாடலாம். அந்தப் பழைய இதிகாச காலத்திலேயே பெருமையுற்றிருந்த நகரம் அது. அதன் பின்னர் எப்படி எப்படி எல்லாமோ உருமாறி இன்று திரும்பவும் புதுமை நிறைந்த நகரமாக விளங்குகிறது அது. அதன் சரித்திரத்தில் எத்தனை ஏற்றங்கள், எத்தனை தாழ்வுகள் அத்தனைக்கும் ஈடு கொடுத்தல்லவா அந்நகரம் அன்று முதல் இன்றுவரை தலைதூக்கி நிற்கிறது? பாரதத்தின் கதாநாயகர்களான பஞ்ச பாண்டவர்கள் அஸ்தினபுரத்தை ஒட்டி ஒரு புதிய நகரைச் சிருஷ்டி பண்ணி அதனை இந்திரப் பிரஸ்தம் என்று அழைத்தனர். அங்கு வந்திருந்த கௌரவர்கள் அகௌரவப்படுத்தப்பட்டனர். அதனால்தான் தாயாதி சண்டை வலுத்தது. சூதிலே தோற்ற பஞ்சபாண்டவர்கள் நாட்டை விட்டுக் காட்டுக்குத் துரத்தப் பட்டனர் என்பது இதிகாச வரலாறு. அந்தப் பஞ்சபாண்டவர்கள் நிர்மாணித்த இந்திரப் பிரஸ்தமே இந்தத் தில்லிமாநகரம் என்பது ஒரு வரலாறு. இதற்கு ஆதாரமாக நிற்பது தான் புராண கிலா என்னும் பழைய கோட்டை. ஆனல் இந்த இடத்தில்தான் இந்திரப் பிரஸ்தம் இருந்தது என்பதற்கு யாதொரு ஆதாரமும் இல்லைதான். என்றாலும் புராண கிலா என்பதிலிருந்தே அந்தப் பிரதேசத்தின் பழம் பெருமையை ஒருவாறு ஊகிக்கலாம் அல்லவா? சரி. இந்த இந்திரப் பிரஸ்தம் எப்போது டில்லியாக மாறிற்று என்றும் அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை. தில்லி என்ற வார்த்தைக்கு மனத்துக்கு இன்பம் அளிக்கும் இடம் என்று பொருளாம். இந்தத் தில்லியைக் காணவே நாம் இன்று இங்கு வந்திருக்கிறோம்.


சென்னைக்கு வழி வாயிலே என்பர் நம் தமிழர். தில்லிக்கு வழி சொல்லும் சிரமம் எனக்கு இல்லை. சென்ட்ரல் ஸ்டேஷனில் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் ஏறினல் கிட்டத்தட்ட 2200 கிலோ மீட்டர்களை 45 மணி நேரத்தில் தாண்டி நேரே டில்லி நகர் போய்ச் சேரலாம். இப்படியே பம்பாயிலிருந்தும், கல்கத்தாவிலிருந்தும் தில்லி நோக்கி ரயில்கள் ஓடியவண்ணமே இருக்கின்றன. இன்னும் விரைவாகவே தில்லி செல்ல வேண்டும் என்றால், எல்லா ராஜ்யத் தலைநகரங்களிலிருந்தும் விமானம் மூலம் விரைவாகவே பறந்து வந்து சேரலாம்.

தில்லி வந்து சேர்ந்ததும் நாம் சென்று காணவேண்டிய இடம் அண்ணல் காந்திஜி அமரர் ஆன பின் அவரது பூத உடலைத் தகனம் செய்த புண்ணிய பூமியே ஆகும். அதுதானே புது டில்லிக்கும் பழைய டில்லிக்கும் இடையே யமுனை நதிக் கரையிலே இருக்கிறது. அதைத் தானே ராஜ கட்டம் என்று புனிதமான பெயரால் அழைக்கிறோம். அங்கு ஒரு பிருந்தாவனமே உருவாகி யிருக்கிறது. அங்கு இறங்கிக் காலிலுள்ள பாதரட்சைகளைக் களைந்து விட்டு அங்கு விற்கும் புஷ்பங்களை வாங்கிக் கொண்டு ராஜ கட்டத்தை அணுகலாம். காந்திஜியின் உடல் தகனமான மேடையில் மலர்களைத் தூவிக் காந்திஜிக்கு அஞ்சலி செய்துவிட்டு மீளலாம். அங்கிருந்து வடக்கு









1 முத்து மசூதி.
2. பிர்லா மந்திர்.
3. பிர்லா மந்திரில் தமிழ்க் கோயில்.
4. குதுப்மினர்.

தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்

நோக்கி நான்கு பர்லாங் நடந்தால் சரித்திரப் பிரசித்தி பெற்ற செங்கோட்டை வந்து சேருவோம். செங்கோட்டை மொகலாய மன்னன் ஷாஜஹானால் கட்டப்பட்டது என்பது வரலாறு. 1638ல் ஆரம்பித்து அதைக் கட்டி முடிக்கப் பத்து வருஷங்கள் ஆகியிருக்கின்றன. அக்கோட்டை 1100 அடி நீளமும் 550 அடி அகலமும் உள்ள இடத்தில் ஒன்றரை மைல் விஸ்தீரணத்தில் பல கட்டிடங்களை உள்ளடக்கிக் கொண்டு கம்பீரமாக நிற்கிறது. அங்குதான் மக்களை மொகலாய மன்னர் சந்திக்கும் திவானி ஆமும், சிறப்பான வெளி நாட்டுத் தூதுவர்களைச் சந்திக்கும் திவானி காஸும் இருக்கின்றன. சிறந்த வேலைப்பாடுகளோடு கூடிய கட்டிடங்கள் அவை. அங்கு இன்னும் மும்தாஜ் மஹால், ரங் மஹால் முதலிய கட்டிடங்களும் இருக்கின்றன. திவானி ஆமில்தான் பிரபலமான மயிலாசனம் இருந்திருக்கிறது. அதன் உத்தேசமான மதிப்பு பன்னிரண்டு லட்சம் பவுன் என்பார்கள். அங்கே முத்து மசூதி ஒன்றும் இருக்கிறது. கலை அழகு நிரம்பிய கட்டிடம் அது. அத்தனையும் சுற்றிப் பார்த்து விட்டு வெளியே தென்மேற்காக நடந்தால் பிரபலமான ஜும்மா மசூதியண்டை வந்து சேருவோம். அங்குதான் முஸ்லிம் சகோதரர்கள் பிரார்த்தனை செய்யக் கூடுகின்றனர். இம் மசூதிதான் உலகில் உள்ள மசூதிகளில் பெரியது என்பர். இதை அக்காலத்தில் பத்து லட்சம் ரூபாய் செலவில் கட்டியிருக்கிறார்கள். அந்த மசூதிக்கு முன்புறம்தான் ராம்லீலா மைதானம் என்ற பெரிய மைதானம் இருக்கிறது. பெரிய பெரிய கூட்டங்கள் இங்குதான் கூடுகின்றன.


ஜும்மா மசூதிக்கு வடபுறம் கொஞ்சம் நடந்து சென்றால், பழைய டில்லியில் பிரபலமான சாந்தினி சௌக் என்னும் பெரிய வீதியை வந்து சேருவோம். இந்த வீதியில்தான் ஷாஜஹான், ஔரங்கசீப் முதலிய மொகலாய மன்னர்கள் கோலாகலமாகப் பவனி வந்திருக்கிறார்கள். சாந்தினி சௌக் என்றால் நிலவொளி வீசும் வீதி என்றுதான் பொருள். வீதியின் அகலம் 150 அடி. அதன் மேற்குக் கோடியில் பேத்பூரி மசூதியும் கீழ்க் கோடியில் ஒரு பிரபலமான சமணக் கோயிலும் இருக்கின்றன. இந்தக் கோயிலுக்குச் செல்லும் வழியில்தான் சிஸ்கஞ்சு குருத்துவாரம் இருக்கிறது. அது சீக்கியர்களுக்குப் புனிதமான தலம். அங்குள்ள ஆலமரத்தின் அடியில்தான் சீக்கியர்களின் ஒன்பதாவது குருதேவரான குருதேஜ்பஹதூர் சிங் என்பவர் மொகலாய மன்னன் ஔரங்கசீப்பால் கொலை செய்யப்பட்டிருக்கிறார். டில்லியில் இன்று சீக்கியர்கள் சென்று வணங்கும் பிரதான கோயில் இந்தக் குருத்துவாராதான். அழகிய விமானத்தோடு கூடிய பெரிய கட்டடம் அது. அங்கு ஒவ்வொரு நவம்பர் மாதத்திலும் குருநானக்கின் பிறந்த தின விழாவும் குருதேஜ்பஹதூர் அமரரான தினமும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இந்தக் குருத்துவாரா எல்லாவற்றையும் கடந்துதான் சமணர் கோயிலான ஸ்ரீ திகம்பர் கோயிலுக்கு வரவேணும். டில்லியில் சமணக் கோயில்கள் முப்பத்தைந்துக்கு மேல் இருந்தாலும் இதுதான் அவர்களது பிரதான கோயில்; கட்டடக் கலைக்கு எடுத்துக் காட்டாக இந்தக் கோயில் விளங்கா விட்டாலும், அதனுடைய கிழக்கு வாயிலும், பொன் போர்த்த ஸ்தூபிகளும் மிக மிக அழகாயிருக்கின்றன. அங்குள்ள பிரதான கோயிலில் எழுந்தருளியிருப்பவர் பார்சவநாதர். அவரே மகாவீரருக்கு முந்திய தீர்த்தங்கரர் என்பர். இந்தக் கோயிலுக்குள் பல சிறு கோயில்கள் இருந்தாலும் சிறப்பான கோயில் எட்டாவது தீர்த்தங்கரர் என்று கருதப்படும் சந்திர பிரபுவின் கோயில்தான். முக்கியமான இக்கோயிலிலுள்ள கல்வெட்டிலிருந்து இந்தக் கோயில் 1526ல் கட்டப்பட்டது என்று அறிகிறோம். இங்குதான் பறவைகளின் ஆஸ்பத்திரி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. 'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' என்று சமண சித்தாந்தத்தைச் செயல் அளவில் காட்டக்கூடிய வகையில் ஆயிரக்கணக்கான பறவைகள் இங்கு சிகிச்சைக்கு வருகின்றன. தினசரி ஆயிரத்துக்கு மேற்பட்ட பறவைகளுக்கு இங்கு சிகிச்சை செய்யப்படுகின்றது. உடல் நலம் பெற்ற பறவைகள் விடுதலை பெற்றுப் பறந்து செல்வது அழகான காட்சி. உலகிலேயே பறவை ஆஸ்பத்திரி ஒன்று இவ்வளவு சிறப்பாக வேறு இடங்களில் நடக்கவில்லை என்கின்றனர். இந்தக் கோயிலில் நடக்கும் பெரிய திருவிழா தசலட்சுமி விழாதான். டில்லித் தலைநகரிலே நடக்கும் பெரிய திருவிழாக்களில் இது ஒன்று. பலதிறப்பட்ட படையெடுப்புக்களுக்கும் இடிபாடுகளுக்கும் இடையில் நானூறு வருஷ காலமாக இங்கு பூஜை ஒழுங்காக நடைபெறுகிறது என்றால் அது சிறப்பானதுதானே? இந்த வட்டாரத்தில் சமீப காலத்தில் எடுக்கப்பட்ட நரசிம்மர் ஆலயம் ஒன்று உண்டு. சாந்தினி சௌக்கில் பல திறப்பட்ட கடைகளும் உண்டு.

இந்தச் சாந்தினி சௌக் பிரதேசத்துக்கும் மேற்குப் பக்கத்தில் தான் கரோல்பாக் என்னும் பகுதி இருக்கிறது. டில்லிவாழ் தமிழ் மக்கள் இங்குதான் வசிக்கின்றனர்.

'**ப**ழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்றார் தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த பவணந்தி முனிவர். இந்த நியதி இலக்கணத்திற்கு மாத்திரம் அல்ல. நகர நிர்மாணத்துக்குமே ஒத்ததுதான் என்னும் வகையில் நமது நாட்டில் தலைநகரான டில்லி பழைய டில்லியாகவும், புதிய டில்லியாகவும் உருப்பெற்றிருக்கிறது. ஆம். பழமையை முழுவதும் கழித்து விட்டுப் புதுமை உருப்பெறவில்லை. அங்கே பழமையும் புதுமையும் கைகோத்தே நடமாடுகின்றன. பழமையும் புதுமையும் மாத்திரமா இணைகின்றன? அங்கே கிழக்கும் மேற்குமே இணைகின்றன. கட்டிடக் கலையானாலும், தத்துவ விசாரணையானாலும், உணவு, உடை, இசை, நடனம், முதலிய எல்லாத் துறைகளிலுமே இந்த இணைப்பைப் பார்க்கிறோம் நாம்.

டில்லியின் சரித்திரத்தில் முஸ்லிம் ஆட்சிக்குப் பின்தான் விளக்கம் கிடைக்கிறது



பையன் : சந்திரனைப் பார்த்து நாய் குரைத்தால் சந்திரனுக்கு பயமா என்று சொன்னேனே ! இங்கே வந்து பாருங்க, சந்திரன் நடுங்கிண்டிருக்கிறார் !


என்றாலும், பதினோராம் நூற்றாண்டிலிருந்தே அதன் சரித்திரச் சின்னங்கள் ஆங்காங்கே தென்படவும் செய்கின்றன. கி. பி. 1050ல் அனங்கபால் என்ற மன்னன் கட்டிய ராஜ் குந்த் என்ற நகரத்தின் அடையாளமாக இன்றிருப்பது பாழடைந்த ஒரு குளமும், சில இடிந்த கட்டிடங்களும், சூரியனுக்கு ஒரு கோயிலும்தான். இந்த அனந்தபாலுக்குப் பின்தான் முகம்மது கோரி படையெடுத்திருக்கிறான். அவனுக்குப் பின் வந்த ஆட்சிக்கு அடையாளமாகக் குதுப்மினார் எழுந்து நிற்கிறது.

பல்வகைப் படையெடுப்புகளுக்கு ஆளாகிய டில்லி மொகலாயமன்னர்கள் காலத்தில்தான் சீரும் சிறப்பும் பெற்றிருக்கிறது. பின்னர் வெள்ளைக்காரர் ஆட்சியில் நாட்டின் தலைநகரம் கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டதன் காரணமாகத் தில்லி பொலிவிழந்திருக்கிறது. திரும்பவும் 1911ல் தலைநகரம் தில்லிக்கு மாற்றப்பட்ட பின்பே புது தில்லி உருவாக ஆரம்பித்திருக்கிறது. இன்றோ புது தில்லி தான் நமது நாட்டின் பிரதான ஆட்சி பீடமாக விளங்குகிறது.

நம் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் பார்லிமெண்ட் கட்டிடத்துக்கே முதலில் போகலாம். 1921ல் இக் கட்டிடம் கட்ட அஸ்திவாரம் இடப்பட்டு 1927ல்தான் கட்டி முடிந்திருக்கிறது. வட்ட வடிவுள்ள பிரம்மாண்டமான கட்டிடம் அது. அதன் சுற்றளவு அரை மைல் தூரம். கட்டிடத்தில் மத்திய டோமின் குறுக்களவு நூறு அடி. லண்டன் செயின்ட் பால் சர்ச்சின் டோம் போன்று பெரியது. இதன் மாடியைத் தாங்கி நிற்பவை 114 தூண்கள். ஒவ்வொன்றும் 27 அடி உயரம் ஓங்கி நின்று கட்டிடத்துக்கு ஓர் அழகு தருகிறது. அக்கட்டிடத்தில் காரியாலயங்களுக்கென ஒதுக்கிய இடம் போக மக்கள் சபையும் ராஜ்ய சபையும் கூடுவதற்கான மூன்று பெரிய ஹால்கள் உண்டு. உள்ளேயுள்ள முற்றத்தில் விக்கிரமாதித்தன் சிலை ஒன்றும் நிறுவப்பட்டிருக்கிறது. மக்கள் சபை நடக்கும்போது அனுமதி பெற்றே உள்ளே நுழைய வேண்டும். கட்டிடத்தைச் சுற்றிப் பார்ப்பதற்குமே அதிகாரிகள் அனுமதி பெற வேண்டும். பார்லிமெண்ட் கட்டிடத்திலிருந்து தெற்கு நோக்கி நடந்தால் கூப்பிடு தூரத்தில் சர்க்கார் காரியாலயங்கள் இருக்கின்றன. இந்தச் சர்க்கார் காரியாலயங்களுக்கு இடையே செல்லும் ராஜ வீதியில் மேற்கு நோக்கிச் சென்றால் ராஷ்டிரபதி பவன் வந்து சேருவோம். பிரம்மாண்டமான கட்டிடம் அது. இதனுள் நுழையவும் அனுமதி பெறவேண்டும். பலப்பல ஹால்கள் கடந்து ராஷ்டிரபதி பிரபலஸ்தர்களுக்குப் பேட்டி கொடுக்கும் மண்டபத்துக்கு வந்து சேருவோம். கட்டிடத்துக்குப் பின் பக்கம் உள்ள தோட்டம்தான் மொகல் கார்டன்ஸ் என்னும் பெரிய பூங்கா. அங்கு சென்றால் அதுதான் பூலோக சுவர்க்கமோ என்று தோன்றும்.

ராஷ்டிரபதி பவனிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் ராஜ வீதியில் நடந்தால் இந்தியா கேட் என்னும் இடத்துக்கு வரலாம். இந்த ராஜ வீதியில்தான் சுதந்திர தின அணிவகுப்பு நடக்கும்.

இனி, புது தில்லியில் பிரதான கோயிலான லக்ஷ்மிநாராயணன் கோயிலுக்கே நடக்கலாம். கன்னாட் பிளேஸ் என்னும் வியாபாரத் தலத்துக்கு நேர் மேற்கே ஒரு மைல் சென்றால் லட்சுமி நாராயணன் கோயிலுக்கு வந்து சேரலாம். தில்லியில் லக்ஷ்மி நாராயணன் கோயில் என்றால் யாருக்கும் தெரியாது. பிர்லா மந்திர் என்று சொன்னால்தான் தெரியும். காரணம் இக் கோயிலைக் கட்டிய பெருமகன் சுகல் கிசோர் பிர்லா என்பவரே. அவரது பெயராலேயே கோயில் வழங்குகிறது. கோயில் ஒரிஸ்ஸா என்னும் கலிங்கப் பிரதேசத்திலேயுள்ள கோயிலைப் போல் கட்டப்பட்டிருக்கிறது. பிரதான கோயிலுக்கு மூன்று சிகரங்கள்; தமிழ்நாட்டு மாடக் கோயில்களைப் போல் மாடத்தின் பேரிலே தான் கட்டப்பட்டிருக்கின்றன. பல படிகள் ஏறியே கோயிலுக்குச் செல்ல வேண்டும். இக் கோயில் முழுதும் சிவந்த கற்களாலும், வெள்ளைச் சலவைக் கற்களாலும் கட்டப்பட்டவை. கோயில் சுவர்களில் வேதம், உபநிஷதம், கீதை முதலிய நூல்களில் இருக்கும் வாக்கியங்கள் எழுதி வைக்கப்பட்டிருக்கும். இங்குள்ள பிரதான கோயிலில் லக்ஷ்மி சமேதனாக நாராயணன், சலவைக் கல் வடிவில் நின்றுகொண்டிருக்கிறார். சிறந்த சிற்ப வடிவம் அல்ல. பட்டு உடுத்திப் பணி பூண்டு நிற்பார். கோயில் வாயிலில் ஒரு பக்கம் அனுமனும் மறு பக்கம் விநாயகனும் நிற்பர். இந்த லக்ஷ்மி நாராயணன் கோயிலுக்கு வடபுறத்தில் காளிக்கும் இடப்புறத்தில் சிவனுக்கும் தனித் தனிச் சந்நிதிகள். இவர்களை வலம் வந்து பின்புறம் உள்ள திறந்த வெளிக்குச் சென்றால், அதை ஒரு பூங்காவாக அமைத்திருக்கிறார்கள். அங்கே கீதா போதகனை கண்ணன் குதிரை பூட்டிய ரதத்திலேயே ஆரோகணித்திருப்பான். அங்குள்ள புலிக்குகை, தடாகம் கடந்து சென்றால்,





''என் 'ஒய்ப்' இல்லாத நேரம் பார்த்து நான் போன் செய்கிறேன் வாருங்கள் என்றுதான் சொன்னேனே, ஏனய்யா இப்ப வந்து தொலைத்தீர்?''

''ஏன்? என்ன விஷயம்?''

''உங்க மனைவிக்கு நீங்க பயப்படாமல் இருக்க வேண்டியது எப்படி என்று உமக்கு 'அட்வைஸ்' பண்ணத்தானய்யா!''

மேற்கு வாயிலை அடைவோம். அந்த வாயிலைத் தமிழ் நாட்டுக் கோபுரம் ஒன்று அழகு செய்யும். இனி தென் பக்கம் திரும்பினால், அங்கு அசோகன், விக்கிரமாதித்தன், பிரிதிவிராஜ் ஆகியோர் சிலை உருவில் காட்சி கொடுப்பர். இன்னும் இரண்டு யானைகள் தும்பிக்கையை யுயர்த்திக் கொண்டு சிலை உருவில் நிற்கும். அதற்கும் தென்புறம் தான் புத்தர்பிரானுக்கு ஒரு கோயில்; அதன் சிகரம் புத்த கயையில் உள்ள சிகரம் போலவே இருக்கும். அங்குள்ள சுவர்களில் தம்ம பதத்திலிருந்து வாக்கியங்கள் பொறித்திருக்கும். பிரார்த்தனை செய்வதற்கு உரிய பெரிய பிரார்த்தனைக் கூடமும் இருக்கும். பிரதான கோயிலுக்கு வடபுறம்தான் கீதா மந்திரும் தர்மசாலையும் இருக்கும். தர்மசாலையில் தில்லி செல்லும் அன்பர்கள் மூன்று நாட்கள் இலவசமாகவே தங்கலாம். ஆனால் இடம் கிடைப்பதுதான் கஷ்டம். கீதா மந்திரிலே எந்த நேரமும் பாராயணமும் பஜனையும் நடக்கும். இந்தப் பிர்லா மந்திரில் சலவைக் கல்லில்தான் தெய்வத்துக்கு உருவங்கள் சமைக்கப்பட்டிருக்கின்றன. சைவம், வைஷ்ணவம், சாக்தம், பௌத்தம் முதலிய எல்லாச் சமயங்களும் இணைந்திருக்கும் இத்தலத்தைப் பார்க்கும்போது தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்க சமயமும் கலையும்தான் உதவும் என்ற எண்ணம் வலுப்பெறும். எல்லா மதத்தினரும் இணைந்து அங்கு பிரார்த்தனை செய்கிறார்கள்.

கான்னாட் பிளேசுக்குத் தென்புறம்தான் ஜந்தர் மந்தர் என்ற விஞ்ஞானக் கூடம் இருக்கிறது. இதைத்தான் ஜெய்ப்பூர் மகாராஜ் ஜெய் சிங் என்பவர் 1710ல் கட்டினார் என்பர். இங்கு பற்பல யந்திரங்கள்—செங்கல்லால் கட்டப்பட்டவை. சாம்ராட் யந்திரம், ஜெய்பிரகாஷ், ராம் யந்திரம், மிஸ்ரா யந்திரம், நியாத் சக்கா முதலியவைகளைக் கண்டு வான சாஸ்திர நிபுணர்கள் வியந்து நிற்க வேண்டும்.

இதற்குப் பக்கத்திலேதான் அகில இந்திய வானொலி நிலையம் இருக்கிறது. அந்த நிலையத்தின் முகப்பில் சலவைக் கல் வடிவில் மீரா தம்புரா ஏந்திப் பாடிக் கொண்டிருப்பாள். இங்கிருந்து ஒரு மைல் தூரம் கிழக்கு நோக்கி நடந்தால் ராமர் கோயிலைக் காணலாம் என்கிறார்கள். அதன்படியே நடந்து சென்றேன். அங்கு நான் கண்டது ராமரை அல்ல. பிரும்மாண்டமான வடிவில் ஓர் அனுமார் கோயிலைத்தான். அக்கோயிலின் கோஷ்டத்தில் ஒரு சிறு மாடக் குழியில் இரண்டு சின்னஞ் சிறு பொம்மைகள். அவைகளை ராமர் சீதை என்கின்றனர். காவிரிக் கரையிலுள்ள கோயில்களில் சர்வாங்க சுந்தரனை ராமனைக் கண்ட கண்களுக்கு என்ன ஏமாற்றம் இந்த ராமன் வடிவிலே.

'இவ்வளவுதான் புது தில்லியிலே பார்க்க வேண்டியது' என்று நான் சொன்னால் என் பேரன் கேட்கிறான்: 'என்ன தாத்தா! டில்லி என்ற உடனேயே பள்ளிப் பிள்ளைகளாகிய எங்கள் கண் முன்னே வருவது குதுப்மினார்தானே? அதை நீ காட்டவே இல்லையே?' என்று.

குதுப்மினார் புது தில்லிக்கும் தெற்கே ஏழு மைல் தூரத்தில் இருக்கிறது. டாக்சி வைத்துக் கொண்டுதான் செல்ல வேண்டும். செல்லும் வழியில் ஜப்தார் ஜங், பிரோஜ் ஷா முதலியோரது மசூதியையும், போத்தி மஸ்ஜித், பீகம்பூர் மஸ்ஜித் முதலியவைகளையும் காணலாம். தெற்குக் கோடியில்தான் குதுப்மினார் என்னும் கோபுரம் 238 அடி உயர்ந்திருக்கிறது. தஞ்சைப் பெருவுடையாரது விமானம் 216 அடிதான் என்பது நமக்குத் தெரியும். அதைவிட உயரமானது இது. இதனை வெளியில் நின்று பார்த்தாலே மிக்க கம்பீரத்தோடு காட்சி அளிக்கும். ஐந்து தட்டுக்களை உடையது அந்தக் கோபுரம். கோபுரத்துக்குள்ளேயே நல்ல படிக்கட்டுகள் கட்டி வைத்திருக்கிறார்கள். 379 படிகள் கடந்து சென்றால்தான் அந்தக் கோபுரத்தின் உச்சியில் ஏற முடியும். ஏறுவது சிரமமே. ஆனால் ஏறிவிட்டால் டில்லி நகர் முழுவதையும் அங்கிருந்து நோட்டம் பண்ணி விடலாம். இதன் பக்கத்திலே அசோகர் கட்டியதாகக் கருதப்படும் இரும்புத் தூண் இருக்கிறது. இத்தனை நூற்றாண்டுகள் கழிந்தும் வழவழவென்று இருக்கிறது. இன்னும் இந்தப் பிரதேசத்திலேயே அல்டாமிஷின் சமாதியும், அலாய் தர்வாஸாவும், அலாய் மினாரும் இருக்கின்றன. இவைகளில் நமக்கு அக்கறை இராது. குதுப்மினார் இருக்கும் பிரதேசத்திலேயே ஜக் மாயா கோயில் ஒன்றும் இருக்கிறது. இதனைப் பஞ்சபாண்டவர்களில் மூத்தவரான யுதிஷ்டிரரே கட்டினார் என்று கதை. கண்ணனின் சகோதரியான ஜக்மாயா தேவிக்கு என்று அமைந்த கோயில். நானூறு அடி விஸ்தீரணத்தில் இருக்கும் இந்தக் கோயிலின் பிராகாரத்தில் சின்னஞ் சிறு கோயில்கள் பல இருக்கும். க்ஷேத்திராடனம் புறப்பட்ட நாம் ஜக்மாயா தேவியையும் வணங்கியே திரும்பலாம்.




இந்திய
கூந்தல் அலங்காரப்
பரம்பரை !



இந்திய கூந்தல் அலங்காரம் அடர்த்தியான சுருண்ட கூந்தலைப் பொருத்திருக்கிறது என்று புவனேசுவரம் ராஜாராணி கோவிலிலுள்ள பெண் சிலையின் கூந்தல் அழகு எடுத்துக் காட்டுகிறது.

ஒலிவ எண்ணெயில் தயாரிக்கப்பட்ட கல் கெமிகோவின் காந்தரோல் கூந்தல் தைலம், ரோமக்கால்களுக்கு உணவூட்டி அடர்த்தியான நீண்ட சுருள் கூந்தலின் வளர்ச்சிக்கு உதவுகிறது.



காந்தரோல்

காந்தர்டைன் கூந்தல் தைலம்

தி கல்கத்தா கெமிகல் கோ. லிட். கல்கத்தா


தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை.

பெறுக மிகச்சிறந்ததை...
பெறுக ஒரு

ஸில்வர் எக்ஸைட்

பாட்டரி

மற்றவை நின்ற பிறகும்
இவை தொடர்ந்து
இயங்குகின்றன



உங்கள் உள்ளூர் ஏஜண்டு!

தி ஜெனரல் எலக்டிரிக் கம்பெனி ஆப்
இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை

கிளைகள்: பெங்களூர், கோயமுத்தூர், சிகந்தராபாத்

தர்மாவும் பெண்தானே!



க. பஞ்சாபகேசன்

பாதி மூக்கில் இறங்கியிருந்த பழைய மூக்குக் கண்ணாடியின் ஊடே, பாதி வழுக்கையில் நரைத்திருந்த தலைக் கேசத்தைத் தடவி விட்டுக் கொண்டே தலையை உயர்த்திக்கொண்டு தம் உத்தியோக உடுப்புடன் பத்தாம் வகுப்புக்குள் வந்து நின்ற தபால்காரர் வகுப்பை ஒரு நோட்டம் விட்டார்.

கையில் தபால் கட்டு; கையிடுக்கில் பழைய குடை; பார்வையில் தள்ளாமை கலந்த கூர்மை. இத்தனையும், அந்தப் பகல் பன்னிரண்டு மணிப் போதில் கணக்குப் பாடத்தின் சுமையில் மூழ்கியிருந்த மாணவ மாணவிகளுக்கு எதிரே எத்தனை ஆறுதல் அளித்து அவர்கள் அனைவரையும் சிரிக்க வைத்தன!

தபால்காரர் அந்தச் சிரிப்பைப் பொருட்படுத்தவில்லை.

''தர்மநாயகி அம்மா இந்த வகுப்புத்தானே?'' — அமைதியாகத்தான் கேட்டார் தபால்காரர்.

வகுப்பில் 'குபீ'ரென்று மீண்டும் சிரிப்பு எழுந்தது. அவர் மாணவியின் பெயரை மட்டும் அழைக்காமல் 'அம்மா' என்ற மரியாதைச் சொல்லையும் சேர்த்தல்லவா அழைத்தார்!

ஏழெட்டுப் பேர் இருந்த மாணவிகள் பக்கம் சலசலப்பு.

''தர்மா! உனக்குத் தபால்......''

''என்னடி, இங்கே தபால் வருகிறது!....''

இதற்குள் கணக்கு உபாத்தியாயர் அழைக்கத் தர்மநாயகி தன் இருப்பிடத்தை விட்டு எழுந்து வந்தாள். ஆசிரியருடைய மேஜை மேல் தபால் கட்டை வைத்துக் கொண்டே அதனின்று ஒரு மணியார்டர் பாரத்தையும் கடிதத்தையும் எடுத்துத் தர்மநாயகியின் கைகளில் கொடுத்தார் தபால்காரர்.

வகுப்பில் இப்போது நிசப்தம்.

ஆசிரியர் கொடுத்த பேனாவால் கையெழுத்துப் போட்டாள் தர்மநாயகி. ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றைத் தபால்காரர் அவள் கையில் கொடுத்து விட்டுப் புறப்பட்டு விட்டார்.

தன்னிருப்பிடத்துக்குப் புறப்பட விருந்த தர்மநாயகியைக் கணித ஆசிரியர் — அவர் வயதில் கொஞ்சம் பெரியவர் தான்—''கொஞ்சம் இரு அம்மா!'' என்றார்.

அவள் நின்றாள். தபால்காரர் வெளியே சென்ற பிறகு — ''என்னம்மா! பள்ளிக்கூடத்துக்கு......'' என்று இழுத்தார்.

''எங்க அக்கா டில்லியிலிருந்து அனுப்பியிருக்கா, சார்.....''

ஆசிரியர் மீண்டும் கேட்டார்:

''உன் அக்கா இங்கே அனுப்புவானேன்? உங்கள் வீட்டு விலாசத்துக்கே உனக்கு......''

''என் கைச் செலவுக்கு அக்கா அனுப்பியிருக்கார் சார்! பென்சில், ரப்பர்னு வேணும்னுகூட நான் இங்கே என் மாமாவுக்குத் தொந்தரவு தர வேண்டியிருக்கிறதே....''

சொல்லிக் கொண்டே அவள் தன் இருப்பிடத்துக்குப் போய் உட்கார்ந்து விட்டாள். கடிதத்தைப் பிரித்து வாசகத்தைப் படிக்க ஆரம்பித்தாள்.

''அன்புள்ள தர்மநாயகிக்கு, உன் அக்கா அநேக ஆசி. நீ நன்றாகப் படிப்பாய் என்று நம்புகிறேன். சும்மா சினிமாப் பாட்டுக்களைப் பாடிக்கொண்டு நேரத்தை வீண் போக்காதே. வீட்டில் யாரையும் தூக்கியெறிந்து பேசாதே. கூடப் பிறந்தவள் இப்படி எழுதுகிறாளே என்று எண்ணிக் கொள்ளாதே. நம் இருவரையும் இவ்வுலகத்தில் விட்டு விட்டு நம் தாய், தந்தையர் சென்ற பிறகு, நம் மாமா நம்மை வளர்த்து, எனக்குக் கலியாணம் செய்து கொடுத்து, உன்னையும் படிக்க வைத்துக் கொண்டு வருகிறார். அவர் மனம் வருந்தும் படியாக நீ எதுவும் நடந்து கொண்டு விடாமலிரு. நான் இப்படி மாமாவுக்குத் தெரியாமல் உனக்குப் பள்ளிக்கூடத்துக்குப் பணம் அனுப்புவதும் தப்பிதம்தான். நன்றாய்ப் படி. உன் அன்புள்ள அக்கா. —**ரங்கமணி**''

கடிதத்தைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து மேஜைக்கடியில் போட்டாள் தர்மநாயகி. வருகிற லீவுக்கு டில்லிக்கு ரங்கமணியின் வீட்டுக்குப் போகும் போது, 'ஐந்து ரூபாய் அனுப்பி இத்தனை உபதேசமும் செய்யணுமாடி அம்மா?' என்று கேட்கத் துடித்தது அவளுடைய நெஞ்சம்.

மேலே வகுப்புப் பாடத்தில் கவனம் பதிக்க முனைந்தவளின் நெஞ்சத்தை ஏதேதோ எண்ணங்கள் கவர்ந்து இழுத்தன.

தர்மநாயகிக்கு இயற்கையிலேயே நல்ல குரல் உண்டு. சங்கீத சாதகம் இருந்தால் அவள் நன்றாகப் பாட முடியும். அவள் இருக்கும் குடும்பச் சூழ்நிலை அதற்கெல்லாம் இடம் தர முடியாது.

பதினைந்து வருட காலமாக ரங்கமணியையும் தர்மநாயகியையும் தம் குடும்ப பாரத்துடன் காப்பாற்றி வரும் அனந்தகிரியை ஒரு நல்ல மனிதர் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த இரண்டு குழந்தைகளையும் அநாதைகளாக்கி விட்டுச் சென்ற தம் தங்கையையும் அவளுடைய புருஷனையும் பற்றி அவர் ஒரு நாள்கூட இத்தனை வருடங்களில் குறை கூறிப் பேசாமல், தாமும் தம் மனைவியும் தம் குழந்தைகளும் சாப்பிடுவதை அவர்களுக்கு வித்தியாசம் பாராட்டாது அளித்துக் காப்பாற்றி வந்திருக்கிறார்.

சென்ற வருடம்தான் அனந்தகிரி, ரங்கமணிக்குத் திருமணம் செய்து வைத்தார். டில்லியில் மத்திய சர்க்கார் அலுவலகத்தில் அவளுடைய கணவருக்கு எழுத்தர் வேலை. திருமணச் செலவுகள் அவர் சக்திக்கு

மீதியானவையாகத்தான் இருந்தன. அந்தத் திருமணத்துக்காக வாங்கிய கடன்கள் இன்றும் கூடத் தீராமல் இருக்கின்றன.

அன்று அலுவலகத்திலிருந்து திரும்பிய அனந்தகிரி களைப்புடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்தார்.

அவருக்கு நேர் எதிரே தரையில் உட்கார்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்த தர்மா அவர் உட்கார்ந்ததும், ''மாமா! இந்த வீட்டில் பாடக்கூட எனக்கு உரிமை கிடையாதா?'' என்று கேட்டாள்.

அனந்தகிரி ஊகித்துக் கொண்டார், வீட்டில் அவளுக்கும் அவர் மனைவிக்குமிடையே ஏதோ சலசலப்பு நிகழ்ந்திருக்கிறது என்று. இதற்குள் அவர் மனைவி குந்தளம்மாளே அங்கு வந்து விட்டாள்.

''அடுத்த வாரம் அரைப் பரீட்சை ஆயிற்றே, பாடத்தைப் படிக்காமல் இப்படிப் பாட்டுப் பாடிக் கொண்டிருக்கிறாயே என்று கேட்டேன். அது தப்பிதமா?'' என்று கேட்டாள் குந்தளம்மாள்.

உடனே சீறிப் பாய்ந்தாள் தர்மநாயகி: ''மாமி! நீ இப்படியா சொன்னாய்? நீ இப்படிச் சொல்லியிருந்தால் மாமாவிடம் 'கம்ப்ளெயிண்ட்' பண்ணுவதற்கு எனக்கு என்ன பைத்தியமா?...... மாமா! 'சினிமாவில் பின்னணி பாடுகிறதாக எண்ணமா, உனக்கு? சினிமா பேஸ் கட், சினிமாக் குரல்! பேஷ், பேஷ்! நீ எங்கே பரீட்சை ஒழுங்காக எழுதப் போகிறாய்?' என்று இப்படி யெல்லாம் மாமி சொன்னாள் மாமா!......''

குந்தளம், அனந்தகிரியைப் பார்த்துத் தணிவானதும் தெளிவானதுமான குரலில் சொன்னாள்:

''நான் ஏதாவது சொன்னால் உங்களுக்குப் அது இப்போது வித்தியாசமாகவே படும். நான் எதுவும் இனிமேல் இந்தப் பெண் சம்பந்தமாகப் பேச மாட்டேன்..... ஆனால் ரங்கமணியை ஒரு இடத்தில் கொடுத்திருக்கும் நம்முடைய பொறுப்பு இவளுடைய விஷயத்திலும் நிறைவேறுகிற வரை அந்தப் பொறுப்பு பூர்த்தியாக வில்லை என்று மட்டும் உங்கள் காதில் போட்டு வைக்கிறேன்....'' என்று கூறி விட்டுக் குந்தளம் அங்கே நிற்காமல் 'விடு விடு'வென்று உள்ளே சென்று விட்டாள்.

அனந்தகிரி, ''நீ படி அம்மா'' என்று மட்டும் பெருமூச்சுடன் கூறி விட்டுத் தம் காரியங்களில் ஈடுபடத் தொடங்கினார்.

பாடத் தெரிந்தவர் எவரும் பாடுவதில் குற்றமில்லைதான்; இயற்கை அழகு உள்ளவர் எவரும் தன் அழகைப் பற்றி மிகைப்படுத்தி எண்ணிக் கொள்வதிலும் தவறில்லைதான்.

இரண்டும் தர்மாவுக்கு உண்டு. ஆனால் அதில் அலட்சியமும் கர்வமும் சுபாவத்தில் பெரிய குறைகளாக நிறைந்து விட்டன.

அவர்கள் வீட்டுக்கு எதிரே —

ஓர் இஞ்சினீயர் குடும்பம். இஞ்சினீயர் அடிக்கடி 'காம்ப்' போய் விடுவார். அவர் மனைவியும் குழந்தைகளும் அவருடைய தம்பியும்தான் வீட்டில் இருப்பவர்கள். அந்தத் தம்பி கல்லூரியில் படிப்பவன். ஏப்ரலில் நடைபெற்ற சர்வகலாசாலைப் பரீட்சையில் தவறிவிட்ட அவன், இப்போது செப்டம்பர் பரீட்சைக்கு எழுதியிருக்கிறான்.

தர்மநாயகி ஒரு நாள் தன் இனிய குரலில் உரக்கப் பாடினாள்: ''.....கல்லூரிப் பாடத்திலே வாங்குவது ஸீரோ தான்........''— சினிமாப் பாட்டுத்தான். ஆனால் அந்தப் பாடல் கொண்டு வந்த வினை அதிகமே. எதிர்வீட்டு மாமி, குந்தளம்மாளிடம் வந்து, ''ஏன், குந்தளம், இப்படிப் பாடலாமா? என் மைத்துனப் பிள்ளை மிகவும் வருத்தப் படுகிறான்........ என் சின்னப் பிள்ளையும் இந்தத் தர்மாவின் வகுப்பில்தான் படிக்கிறானாமே? இவளுக்கு எந்த வகுப்புப் பரீட்சையிலும், எந்தப் பாடத்திலும், நூற்றுக்குப் பத்து மார்க்குக்கு மேல் ஏறுவதில்லையாமே? இவள் சமர்த்துக்கு என் மைத்துனப் பிள்ளையின் புத்திசாலித்தனம் ஒன்றும் குறைந்து போய் விடவில்லை, குந்தளம்!'' என்று புகார் செய்து விட்டுப் போனாள்.

மற்றவர் மனத்தைத் துன்பப்படுத்தும் பாட்டைப் பாடுவது இசை இலக்கணத்துக்கே விரோதமானது என்று அந்த இளம் பெண் அறிய வில்லை.

ரங்கமணியிடமிருந்து அவளுடைய அருமைத் தங்கை தர்மநாயகிக்கு மணியார்டர் வந்து இரண்டு நாட்களாகி விட்டன. தர்மா அந்த ஐந்து ரூபாய் நோட்டைத் தன் கணக்கு நோட்டுக்குள்ளேயே வைத்துப் பைக்குள் வைத்துக் கொண்டிருந்தாள்.

இப்போது மாலை மணி ஆறரை. வாசல் முன் ரேழியில், சுவரோடு சாய்ந்து உட்கார்ந்தவண்ணம் தன் எதிரே புத்தகம் ஒன்றைப் பிரித்து வைத்தபடி உட்கார்ந்திருக்கிறாள் தர்மா. அவள் படிக்க உட்கார்ந்திருப்பதாக அர்த்தம். மனமோ அற்புதமான சக்கரம் ஒன்றில் ஏறி எங்கெங்கோ சுழன்று கொண்டிருக்கிறது.

ஊரில் உள்ள தியேட்டர்களில் புதுப் படங்கள் ஓடுகின்றன..... தையல் வகுப்பு இரண்டு ரூபாய் கட்டணத்துடன் ஆரம்பித்திருக்கிறது..... புது மோஸ்தர் நெக்லஸ் ரிப்பன்கள் வந்திருக்கின்றன.

நோட்டுப் புத்தகத்தில் இருந்த ஐந்து ரூபாய் நோட்டு தர்மாவின் இதயத்தில் மலர்வித்த ஆயிரம் விதமான சிந்தனைகள் இவை.

ஆனால் இவற்றில் எதையும் அவளால் அந்த நோட்டை மாற்றித் தனக்காக வாங்கிக் கொள்ள முடியுமா? இப்போது அவள் மிகவும் தீவிரமாகச் சிந்தித்தாள். ஏதோ அவளும் மிக உருக்கமாகத் தன் அக்காளுக்குக் கடிதம் எழுதி, ரங்கமணியும் தன்னால் இயன்ற அந்த ரூபாயை அவளுக்கு அனுப்பிவிட்டாள்.

ஆனால் ஒரு பென்சில், ரப்பர் ஆகியவற்றுக் காகவும்கூட அந்தப் பணத்தைத் தன்னால் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்று தர்மா சிந்திக்க ஆரம்பித்த தருணத்தில் —

அவள் நெஞ்சத்தில் சற்றே பயம் குடிபுகுந்து கொண்டது. 'பணம் வந்தது' என்று மாமாவிடமோ மாமியிடமோ சொல்லியிருக்கலாமோ என்று தர்மா நினைத்தாள். இப்போது பணம் வந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டன.

வீட்டுக் கூடத்தில் சாய்வு நாற்காலியில் தமது வழக்கமான சிந்தனைகளில் ஆழ்ந்தபடி அனந்தகிரி அமர்ந்திருந்தார். அப்போது—

''சார்.....!''

பிலிப்ஸ்

தொடக்கத்திலிருந்தேயுள்ள

மில்க் ஆப்

மக்னீஷியா



குடும்பத்தில் எல்லோருக்கும் ஏற்ற, மிகச் சிறந்த அமிலநாசினியும் பேதி மருந்தும் ஆகும்



கோடிக்கணக்கானவர்கள் இந்த நம்பகமான முறையில் சமனம் காணுகின்றனர்

தொடக்கத்திலிருந்தேயுள்ளதும் உண்மையானதுமான பிலிப்ஸ் மில்க் ஆப் மகனீஷ்யா, உலகெங்கும் கோடிக்கணக்கானவர்கள் தெரிந்து உபயோகித்து வரும் ஒன்றாகும். மலச்சிக்கல் அதிலுண்டாகும் கஷ்டங்கள் இவைகளிலிருந்து நிவாரணம்பெற மில்க் ஆப் மக்னீஷ்யாவைப் போல் வேறில்லை. குடும்பத்தில் எல்லோருக்கும் ஏற்ற பேதி மருந்து! பிலிப்ஸ்!

உபயோகத்திற்காக ரஜிஸ்தர் செய்து தயாரிப்பவர்கள்

டேய்ஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மான்யு) ப்ரைவேட் லிட.,

IPB/MOML 1/64TA



உற்சாகமளிக்கும் குளுமையான புத்துணர்ச்சியை அனுபவிக்க
தினமும் கால்கேட் மென்தாலேடெட் ஷேவிங் க்ரீமினால் க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்!
"என்ன மழமழப்பான க்ஷவரம்!"
"அதுதான் கால்கேட்!"
அந்த அதிகாரி போன்ற, எடுப்பான தோற்றம்...அதற்கு உறுதுணையாயிருப்பது கால்கேட் மென்தாலேடெட் ஷேவிங் க்ரீம். ஏனெனில், கால்கேட் மென்தால் சேர்க்கப்பட்டுள்ளதால், அத்துடைய குளுமையான க்ரீம் போன்ற லேதர் சுத்தமான சுகமுள்ள க்ஷவரத்தைப் பெற சருமத்தை பதமாயும் தாடியை மிருதுவாயும் ஆக்குகிறது. நீங்கள் எப்பவும் கண்டிராத, உற்சாகமளிக்கும், குளுமையான புத்துணர்ச்சியுடன் கூடிய க்ஷவரத்தை அளிப்பது கால்கேட் ஒன்றுதான்!
COLGATE MENTHOLATED
COLGATE MENTHOLATED
COLGATE SHAVE STICK
மிக சிக்கனமானது—கால்கேட் ஷேவ் ஸ்டிக் க்ஷவரத்தில் சிக்கனத்திற்கு பிரபலமானது.



பண்டிட்
டி. கோபாலாச்சார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆரோக்கியத்திற்கும் பலத்திற்கும்
ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிட்.,
மதராஸ்-17

வாசலில் குரல். அனந்தகிரி வாசல் பக்கம் திரும்பினார். ஜவுளிக்கடைச் செட்டியார் கடைப் பையனை அனுப்பியிருந்தார். ரங்கமணியின் கல்யாணத்துக்காக வாங்கிய ஜவுளி தினுசுகளுக்காகக் கொடுக்கப்பட வேண்டிய தொகையில் இன்னும் கணிசமான அளவு பாக்கியிருந்தது.

''இந்த மாசச் சம்பளத்திலாவது கொஞ்சம் கொடுத்து விடும்படி செட்டியார் கண்டித்துச் சொல்லி விட்டு வரச் சொன்னார், சார்!'' என்றான் கடைப் பையன்.

''சரி, அப்பா!'' என்றார் அனந்தகிரி. முகம் கருங்கியதைப் போலவே அவர் குரலிலும் சாரத்து இருக்கவில்லை.

பையன் போன பிறகு குந்தளம் அனந்தகிரியிடம் வந்து, ''முதல் தேதி சம்பளம் வந்ததும் முதல் காரியமாக அதில் பாதியை எடுத்து ஜவுளி பாக்கியைக் கொடுத்து விடுங்கள். நாம் வேறு எத்தனையோ செலவுகளைக் குறைத்துச் சமாளித்து விடுவோம்'' என்றாள்.

அனந்தகிரி சிரித்தார். ''இப்போது தேதி இருபத்தி ஐந்துதான் ஆகிறது. குந்தளம்... இப்போதே நம்மிடம் முழுசாக ஒரு ரூபாய்ப் பணம் கிடையாது...''

''ஆமாம்.....'' என்றாள் குந்தளம்.

அவருடைய கடைக்குட்டியும் நாலு வயதுப் பாலகனுமான பாபு அப்போது தான் நன்றாக இருமி விட்டுச் சற்றே அந்தக் களைப்பில் கண் அயர்ந்திருந்தான். அனந்தகிரி தொடர்ந்து கூறினார்: ''பாபுவுக்கு மருந்து தீர்ந்து இரண்டு நாட்களாகி விட்டன... அதற்கு நாலு ரூபாய்ப் பணத்துக்காக இது வரை நாலு பேரைக் கைமாத்துக் கேட்டுவிட்டேன். யாரிடம் உபரியாக இப்போதெல்லாம் பணம் இருக்கிறது குந்தளம்?''

குந்தளம் உள்ளே சென்று விட்டாள். அனந்தகிரி கண்ணைத் திறந்துகொண்டே சிந்தனை வித்தையில் அமிழ்ந்து விடும் தம் இயல்பில் ஆழ்ந்து விட்டார்.

பாபுவுக்கு மருந்து வாங்கக் கையில் காசு இல்லை. தர்மாவுக்கு நன்றாய்த் தெரியும், அந்த மருந்தின் விலை நாலு ரூபாய் சொச்சம்தான் என்று. அவன் நாலு நாட்களாய் ஒரே இருமலாய் இருமிக் கொண்டிருக்கிறான்.

அவன் மனம் பதைபதைத்தது. 'கைச் செலவுக்கு அக்கா அனுப்பியிருக்கிறாள், சார்!' என்று ஆசிரியரிடம் கூறிய அந்தப் பணத்தின் தேவை அவன் நெஞ்சை உறுத்தியது.

இரவின் பின் சாமம் இருக்கும்.

திடீரென்று தர்மா விழித்துக் கொண்டான். அடுத்த அறையில் அவன் மாமாவும் மாமியும் தன்னைப் பற்றி உரையாடிக் கொண்டிருப்பது அவன் காதில் நன்றாக விழுந்தது.

குந்தளத்தின் குரல்: ''நான் சொல்லுகிறேன் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். நேற்று அவன் நோட்டுப் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தேன். ஒரு நோட்டுப் புத்தகத்தில் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்று வைத்திருந்தான். அவனிடம் ஏது பணம்? நீங்கள் கொடுத்தீர்களா?''

''அது எனக்குத் தெரியும்.....'' என்று அனந்தகிரி அமைதியாகப் பதிலளித்தது குந்தளத்துக்கு மட்டுமின்றி, அடுத்த அறையி



அவர்: பேப்பரிலே செய்தியைப் பார்த்தாயோ! ஒன்பது வயதுச் சிறுமிக்கு ஒரு குழந்தை பிறந்திருக்காம்:

பாட்டி: இதென்ன கூத்து.....வர, வரக் குழந்தை பெர்றதுகூட வெறும் விளையாட்டா போயிடுத்து!

லிருந்த தர்மாவின் நெஞ்சையும் திடுக்கிட வைத்து விட்டது.

''.....அவனுடைய கணக்கு வாத்தியாரை இன்றைக்கு மாலையில் கடை வீதியில் பார்த்தேன். அவர் சொன்னார். என்னிடம் இதைத் தர்மா பணம் வந்த அன்றே சொல்லியிருக்கிறானோ என்று அவரிடம் நான் சமாளித்துக் கூறி விட்டேன். 'அதற்கில்லை மிஸ்டர் அனந்தகிரி! கூடியவரையும் பள்ளிக்கூடத்துக்குக் கடிதங்கள் வருவது தவிர்க்கப்பட வேண்டும். அது நல்லது. இல்லையா?' என்று அவர் சொல்லி விட்டுச் சென்றார்...... ம்... ஏதோ கைச் செலவுக்காக வேண்டும் என்று ரங்கமணியைக் கேட்டு எழுதியிருப்பான்போல் இருக்கிறது. அந்தப் பெண்ணுக்கும் மூளை மழுங்கிப் போய் விட்டிருக்கிறது. மிகவும் கஷ்டப்பட்டுத்தான் இந்த ஐந்து ரூபாயை அவள் அனுப்பியிருக்கிறாள். அக்காவிடமிருந்து பணம் வருவது தவறில்லை. என்றாலும் அது பள்ளிக்கு வந்ததை எண்ணி ஆச்சரியப்பட்டதாகத்தான் ஆசிரியர் சொன்னார்..... ஏதோ குழந்தைத்தனம்!''

''நான் இவனுக்கு எதிலும் குறை வைக்கவில்லை. அதைப் பகவான் அறிவார். இவனுக்குப் பணம் வந்தால், அதை நான் பாபுவின் மருந்துக்குக்கூட உபயோகப்படுத்திக் கொள்ளுவேனா......?'' என்று குந்தளம் சொல்லி முடிக்கும் முன்னால்—

''மாமி! மாமி!..... என்னை மன்னித்து விடுங்கள்...... இந்தத் தப்பிதத்தை நான் இனிமேல் செய்யவே மாட்டேன்....'' என்று கதறி அழுது கொண்டே எழுந்து அடுத்த அறைக்கு ஓடினான் தர்மநாயகி.

''பாபுவின் மருந்துச் செலவுதான் இப்போது என்னுடைய மிகத் தேவையான கைச் செலவு'' என்றுதான் தர்மா கூறினான், மறு நாள் காலையிலேயே அந்த இருமல் மருந்தை வாங்கிக் கொண்டு வந்தவுடன்.

அகங்காரத்திலும் அலட்சியத்திலும் நிம்மதி காண முடியாத அவனுடைய நெஞ்சம் இப்போதுதான் நிம்மதியைக் கண்டாற்போல் இருந்தது.

நிமிஷக் கதைகள்



❁ அமெரிக்க நாட்டு ஹாஸ்ய எழுத்தாளர்களில் சிறந்தவரான மார்க் ட்வைன் ஒரு கூட்டத்துக்குத் தலைமை தாங்க அழைக்கப்பட்டிருந்தார். அவரது நகைச்சுவைப் பேச்சைக் கேட்க ஏராளமான மக்கள் அன்று கூடியிருந்தார்கள்.

வரவேற்புரை நிகழ்ந்தது. மார்க் ட்வைனை வரவேற்றுப் பேசிய நண்பர், தமது அறிவாற்றல் முழுவதையும் காட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் அதிக நேரத்தை எடுத்துக்கொண்டு பேசினார்.

மக்கள் மிகப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். மார்க் ட்வைனும் மாறி மாறி மக்களையும் வரவேற்புரை நிகழ்த்துபவரையும் பார்த்துப் பார்த்து மிகவும் ரசிப்பவர் போல உட்கார்ந்திருந்தார். பேசுபவருக்கோ உற்சாகம் கரை புரண்டது. இலேசில் நிறுத்துவதாயில்லை. ஆரம்பம் என்று ஒன்று இருந்தால் முடிவு என்று ஒன்று இருக்கத்தானே வேண்டும்? கடைசியில் ஒருவாறாக வரவேற்புரையை முடித்துக்கொண்டு மார்க் ட்வைனைத் தலைமையுரை நிகழ்த்துமாறு கூறினார்.

“நீங்கள் வரவேற்புரை நிகழ்த்தியவரின் பேச்சை வெகு சுவாரஸ்யமாக ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்ததைக் காணும்போது அவர் எவ்வளவு சுவையாகப் பேசியிருக்கிறார் என்பதை உணர்ந்தேன். கம்பீரமாகவும் சுவைபடவும் இத்தனை நேரம் பேசி உங்களை மகிழ்வித்ததற்காக அவரைப் பாராட்டுகிறேன். ஒரே ஒரு வருத்தம் என்னவெனில் அவரது பேச்சை ரசித்துக் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. ஏனெனில் என் காதுகள் இரண்டுமே செவிடு. நான் கேட்டு மகிழ முடியாவிட்டாலும் நீங்கள் கேட்டு மகிழ முடிந்ததல்லவா? இதற்கு மேலும் பேசி உங்கள் பொறுமையைச் சோதிக்க நான் விரும்பவில்லை. ‘ஆரம்பம் என்று ஒன்று இருந்தால், முடிவு என்று ஒன்று இருக்க வேண்டும்’ என்பதை இன்று வரவேற்புரை நிகழ்த்தியவர் எனக்கு நிரூபித்துக் காட்டிவிட்டார். அதற்காக அவருக்கு மீண்டும் நன்றி!” என்று கூறி உட்கார்ந்து விட்டார்.



❁ ஒரு பிரஞ்சு திரைப்பட நடிகருக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதத்தை எழுதியவள் ஒரு பெண்! அதில், ‘தங்கள் கண் நிறம் என்ன?’ என்று அவள் கேட்டிருந்தாள். நடிகருக்குக் சுலை கால் தெரியவில்லை. உடனே அந்தப் பெண்ணுக்கு, ‘என் கண்ணின் நிறம் நீலம்!’ என்று எழுதினார்.

சில நாட்கள் கழித்து அந்தப் பெண்ணிடமிருந்து மற்றொரு கடிதம் வந்தது. அதில் எழுதியிருந்ததாவது:

“வணக்கம். தங்கள் கண் நிறமும் என் தாயின் கண் நிறமும் ஒன்று என்று நான் சொன்னதற்கு, என் கணவர் இல்லை என்றார். தங்கள் பதிலால் நான் வெற்றி பெற்றேன்!”



❁ பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் ஒருவன் அன்றுதான் சேர்க்கப்பட்டான். பொதுவாகவே பைத்தியங்கள் சேர்க்கப்பட்டதும் ஆரம்ப காலத்தில் முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு ஏதோ யோசனை செய்வது போல உட்கார்ந்திருப்பதுதான் வழக்கம். அவனோ அடிக்கு ஒரு முறை ‘களுக், களுக்’ என்று சிரித்துக் கொண்டிருந்தான். அதைக் கண்ணுற்ற டாக்டருக்கு அவனிடம் ஒரு கவர்ச்சி ஏற்பட்டது. அருகில் போய், “உனக்கு இந்த உலகத்தில் யாருமே இல்லையா?” என்று ஆதரவாகக் கேட்டார்.

“ஏன் இல்லை? எங்கள் அம்மாவுக்கு நாங்கள் இரட்டையர்களாகப் பிறந்தோம்!” என்று தொடங்கியவனுக்கு முகத்தில் முறுவல் படர்ந்தது. “ஒருவரைப் பார்த்தால் இன்னொருவரைப் பார்க்க வேண்டாம். அவ்வளவு உருவ ஒற்றுமை எங்களுக்கு. வேடிக்கை என்ன, தெரியுமா? பள்ளிக்கூட நாட்களில் அவன் விஷமம் செய்வான். நான் அடிபடுவேன். மோட்டார் ஓட்டி மரத்தில் மோதினவன் அவன். தண்டம் அழுதவன் நான். இதைக் காட்டிலும் இன்னொரு அதிசயம் என்னவென்றால், கல்யாணம் எனக்கு நிச்சயமாயிற்று. அந்த அழகிய பெண்ணைக் கரம் பிடிக்கும் பாக்கியம் அவனுக்குக் கிட்டியது!” என்றான்.

“அப்படியிருக்கும் பொழுதா நீ இப்படிச் சந்தோஷமாயிருக்கிறாய்?”

“இனி என் சந்தோஷத்துக்குக் குறைவு ஏது? போன வாரம் அவனை வசமாகப் பழி தீர்த்துக் கொண்டு விட்டேன் நான்!”

“எப்படி ?”

“செத்தது நான். எரிக்கப்பட்டது அவன். இனி அவன் என்னிடம் வாலை ஆட்ட முடியுமா? ஒட்ட நறுக்கி விட மாட்டேனா?” என்று கேட்டு நகைத்தான் அவன்.



Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon